Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E-Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/3110)

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 கார்த்திகை 25 புதன்கிழமை (11.12.2013) பக்கங்கள் 20 ஓசை - 072

# ஐ.நா.அறிக்கையாளர்களை இலங்கை வர அனுமதியுங்கள்



## ஐரோப்பிய ஒன்றியம் கோரிக்கை

(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகள் சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட அறிக்கையிடும் நிபுணர்களை நாட்டுக்குள் தடையின்றி அனுமதிக்கும்படி ஐரோப்பிய ஒன்றியம் அரசிடம் வலியுறுத்தியுள்ளது.

இவ்வாறான அறிக்கையாளர்கள் பலர் நாட்டுக்குள் நுழைவதற்கு விண்ணப்பித்து விட்டு நீண்டகாலம் காத்திருக்கின்றனர். இவர்களுக்கு அரசு இதுவரை அனுமதி வழங்கவில்லை. இதனாலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

இன்னும் நடவடிக்கை இன்றி கிடக்கும் இவர்களின் விண்ணப்பங்களை அனுமதிக்குமாறு ஐரோப்பிய ஒன்றியம் நேற்று அரசாங்கத்திடம் கேட்டுள்ளது.

(19) பக்கம் பார்க்க...

## ஜனாதிபதி அஞ்சலி

(கொழும்பு)

மறைந்த தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவிற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அஞ்சலி செலுத்தியுள்ளார். இலங்கை நேரப்படி நேற்று நண்பகல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தென்னாபிரிக்கா சென்றடைந்துள்ளார்.

ஜெஹன்னர்ஸ்பேர்க் நகரில் வைக்கப்பட்டுள்ள நெல்சன் மண்டேலாவின் பூதவுடலுக்கு ஜனாதிபதி அஞ்சலி செலுத்தியுள்ளார். ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸும் அஞ்சலி செலுத்தினார்.

# இரணைமடுக் குடிநீர் திட்டம் கைவிடப்படும் அபாயம்

(கொழும்பு)

கிளிநொச்சி இரணைமடுக் குளத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு குடிநீர் விநியோகிக்கும் பாரிய குடிநீர் விநியோகத் திட்டம் கைவிடப்படும் அபாயம் தோன்றியுள்ளது.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் உள்ள விவசாய அமைப்புக்கள் மேற்படி திட்டத்துக்கு தமது ஒத்துழைப்பை வழங்காததன் காரணமாகவே இத்திட்டம் இதுவரை இழுபறி நிலையில் உள்ளது.

மேற்படி திட்டத்துக்கு ஒப்புதல் வழங்கினால் கிளிநொச்சி விவசாயச் செய்கைக்குப் பாதிப்பு ஏற்படும் என்று தவறான பிரசாரத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மேற்கொண்டு வருகிறார்.

இதனால் திசைமாறிச் சிந்தித்த அப்பகுதி விவசாய அமைப்புக்கள் சில மேற்படி திட்டத்துக்கு ஒப்புதல் வழங்கத் தயக்கம் காட்டி வருகின்றன.

இதனால் மேற்படி பாரிய திட்டம் செயற்படுத்தப்படாமல் இழுபறிநிலை தொடர்ந்து நீடிக்கிறது.

இந்தநிலையில், இந்தத் திட்

(19) பக்கம் பார்க்க...

## கடலில் மூழ்கி குடும்பஸ்தர் மரணம்

(வடமராட்சி)

வடமராட்சி பருத்தித்துறை கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட குடும்பஸ்தர் ஒருவர் அலையில் சிக்குண்டு மரணமடைந்துள்ளார்.

மயிலிட்டி பிரதேசத்திலிருந்து மீள்குடியேறி நாச்சிமார் கோயிலடி திக்கம் பகுதியில் வசித்து வரும் கைலாயப்பிள்ளை துரைரட்ணம் (வயது-57) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது,

(19) பக்கம் பார்க்க...

## பரீட்சை மேற்பார்வை அதிகாரி கிளிநொச்சியில் மரணம்

### உணவு விஷமானதால் விபரீதம்

க.பொ.த சாதாரணதரப் பரீட்சை கடமையில் ஈடுபடுவதற்காகச் சென்றிருந்த அதிபர் ஒருவர் உயிரிழந்த சம்பவமொன்று கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்றுள்ளது. கிளிநொச்சி அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தின் அதிபர் பசுபதி கணேசமூர்த்தி (வயது-47) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவர், கிளிநொச்சி, இராமநாதபுரம் மகா வித்தியாலய பரீட்சை மத்திய நிலையத்தில் பரீட்சை கடமைகளில் ஈடுபடுவதற்கு அங்கு சென்றிருந்த நிலையிலேயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை 2.20 மணியளவில் தனது உடலில் ஏதோ செய்கின்றது எனக்கூறிய அதிபர், சில நிமிடங்களில் உயிரிழந்ததாக அருகிலிருந்தவர்கள் தெரி

(19) பக்கம் பார்க்க...

## வடமாகாண 'பட்ஜெட்' சபையில் நேற்று சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் நேற்று வடமாகாண பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

மாகாண முதலமைச்சரினால் இந்நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் சபையில் செயலக வாரியாகவும், அமைச்சு ரீதியாகவும் செலவினங்களின் மதிப்பீட்டுச் சாராம்சம் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்படி ஆளுநர் செயலகமும், பொதுச் சேவை ஆணைக் குழுவுக்கும் மீண்டுவரும் செலவீனங்களை 104,009 மில்லியனும், மூலதனச் செலவீனமாக 5, 300 மில்லியனும், பேரவைச் செயலகத்திற்கு 117,950 மில்லியன் மீண்டுவரும் செலவீனமும், 200 மில்லியன் மூலதனச் செலவீனமும், முதலமைச்சர் செயலகத்திற்கு 2,766, 269 மில்லியன் மீண்டுவரும் செலவீனமும், 678,300 மில்லியன் மூலதனச் செலவீனமும், செயலக ரீதியிலான செலவீன மதிப்பீடாகச் சமர்ப்பிக்கப்பட்டது.

(19) பக்கம் பார்க்க...

08
இறுதிச் சுற்று இன்று



11
உயரம் பார்ப்பதில்லை


## சபை நடுவே கோஷம் மாகாண சபையில் நேற்று

சர்வதேச மனித உரிமை தினமான நேற்று இடம்பெற்ற வடமாகாண சபை அமர்வின் போது மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் தலைமையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று பேரவைக்குள்ளே இடம்பெற்றது.

சபை அமர்வு ஆரம்பமாகி தலைவர் உரையைத் தொடர்ந்து சுலோக அட்டைகளை சிவாஜிலிங்கம் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு பகிர்ந்தளித்ததுடன், கோஷங்கள் எழுப்பிய வாறும், சுலோக அட்டைகளைத் தாங்கியவாறும் சபையின் நடுவே நின்று வடக்கில் இடம் பெறும் மனித உரிமை மீறல்கள் குறித்

(19) பக்கம் பார்க்க...

## அகாஷியுடன் ஹக்கீம் நேற்று சந்திப்பு



கொழும்புக்கு விஜயம் செய்துள்ள ஜப்பானின் விசேட பிரதிநிதி யசூசி அகாஷிக்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீமிற்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பு அமைச்சரின் இல்லத்தில் நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது. இதன்போது ஜப்பானிற்கான இலங்கை தூதுவர் ரியர் அட்மிரல் வசந்த கரன்னாகொட உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இந்தச் சந்திப்பு குறித்து அமைச்சர் ஹக்கீம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, அடுத்த வருட மார்ச் மாதம் ஜெனிவாவில் மனித உரிமைகள் மாநாடு நடைபெறவுள்ளது. அதற்கு இலங்கை முகம் கொடுக்க வேண்டியுள்ள

(19) பக்கம் பார்க்க...

## சீனாவின் உப ஜனாதிபதி கொழும்பு விஜயம்

சீனாவின் உப ஜனாதிபதி லீயுவான்ச்சாவோ நேற்று முன்தினம் இரவு கொழும்புக்கு திடீரென வருகை தந்தார்.

தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி மறைந்த நெல்சன் மண்டேலாவின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ளும் நோக்கில் அந்நாட்டுக்குப் போகும் வழியில் உப ஜனாதிபதி உட்பட்ட தூதுக்குழுவினர் கொழும்புக்கு வருகை தந்தனர்.

பிரதமர் கலாநிதி தி.மு.ஜயரத்ன, இவர்களை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து உப ஜனாதிபதி லீயுவான்ச்சாவோவை வரவேற்றதுடன், பின்னர் விசேட அதிதிகளுக்கான கருமபீடத்தில் பிரதமருக்கும் உப ஜனாதிபதிக்கும் இடையில் சுமுகமான கலந்துரையாடல் இடம்பெற்றது.

அதன் பின்னர் தூதுக்குழுவினர் தென்னாபிரிக்கா நோக்கிப் பயணமானார்கள். இந்நிகழ்வில் சர்வதேச நிதிய கூட்டிணைப்பு சிரேஷ்ட அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம, இலங்கைக்கான சீனாவின் தூதுவர் வூஜின் தாஒ மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அனுமுகம உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## கரை கடந்தது 'மடி' புயல்

வங்காள விரிகுடாவில் நிலைகொண்டிருந்த 'மடி' புயல் தற்போது இலங்கை கடல் எல்லையிலிருந்து தொலைதூரத்தில் பயணிப்பதாக காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. வங்காள விரிகுடாவில் அண்மையில் உருவாகிய இப் புயலுக்கு மாலைதீவு பரிந்துரைத்த மடி என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

புயலின் காரணமாக இலங்கையின்

(19) பக்கம் பார்க்க...

# விசேட ஒலிம்பிக்கில் பங்கேற்ற சாதனை வீரர்களுக்கு இன்று வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

ஒலிம்பிக் விசேட விளையாட்டுப்போட்டியில் பங்குபற்றிவிட்டு நாடு திரும்பிய மூன்று விளையாட்டு வீரர்களுக்கும் இன்று பிற்பகல் 3 மணிக்கு மாபெரும் வரவேற்பு இடம்பெறவுள்ளது.

பலாலி வீதி கோண்டாவில் சந்தியிலிருந்து கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலைவரை வீரர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

பாடசாலையில் பாராட்டு விழா இடம்பெறவுள்ளது. இவ்விழாவில் பல பிரமுகர்களும், பெற்றோரும், பொதுமக்களும் அதிகளவில் கலந்துகொள்ளவுள்ளனர்.

அவுஸ்ரேலியா நாட்டின் நியூகாசில் நகரில் உள்ள சர்வதேச விளையாட்டு மைதானத்தில் ஆசிய பசுபிக் ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது. இதில் கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலையைச் சேர்ந்த சிவராஜா துஷ்யந்தன், சிவராஜா அனுசன், ராஜன் பிளைக்னோ ஆகிய மூன்று வீரர்கள் இலங்கையின் சார்பில் பங்கு கொண்டனர்.

200 மீற்றர் ஓட்டப்போட்டியில் சிவராஜா அனுசன் வெண்கலப்பதக்கம் வென்றார். கடந்த 2011 ஆம் ஆண்டு கிறீஸ் நாட்டில் நடைபெற்ற விசேட ஒலிம்பிக் போட்டியில் சிவராஜா துஷ்யந்தன் வெள்ளிப்பதக்கம் பெற்றுக்கொண்டார். இவர்கள் இருவரும் ஒரு தாய் வயிற்றில் பிறந்த சகோதரர்களாவார்.

100 மீற்றர் ஓட்டப்போட்டியில் மற்றறைய வீரர்களுடன் கலந்து மிக வேகமாக ஓடிய துஷ்யந்தன் எதிர்பாராத விதமாக விழுந்ததினால் இவர் 6 ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டார். பிளைக்னோயும், அதே மாதிரி பின்னைடைந்தார்.

பேச்சுத் திறனற்ற மாற்று வலுவுடைய இம்மாணவர்களின் திறன் பற்றி வெளிநாட்டுத் தொலைக் காட்சிகள் பல ஒளி பரப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (137)

## பன்முகப்படுத்தப்பட்ட நிதி கையளிப்பு



(வேலணை நிருபர்)

நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஒதுக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து சனசமூக நிலையங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளை நேற்று முன்தினம் வேலணை பிரதேச சபைத் தவிசாளரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணைப் பிரதேச அமைப்பாளருமாகிய சின்னையா சிவராசா (போல்) சனசமுகநிலையத் தலைவர் செயலாளர்களுக்கு வழங்கினார்.

வேலணைப் பிரதேச சபை மண்டைதீவு உப அலுவலகப் பொறுப்பதிகாரி ச.அருணன், வேலணைப் பிரதேச சபை உத்தியோகத்தர் மயூரன், மண்டைதீவு உதயசூரியன் சனசமூக நிலைய நிர்வாகத்தினர், அம்பிகைநகர் சனசமூக நிலைய நிர்வாகத்தினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வடமாகாண சபை ஒதுக்கீட்டு குழுநிலை விவாதம் இன்று

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையின் 3 ஆவது அமர்வின் இரண்டாம் நாள் குழுநிலை விவாதம் இன்று இடம்பெறுகிறது.

சபையின் நிதி ஒதுக்கீட்டு அமைச்சு ரீதியான சட்ட மூலம் மீதான குழுநிலை விவாதம் இன்று காலை இடம்பெறுவதாக தவிசாளர் அறிவித்தார்.

நேற்று செயலக ரீதியான ஒதுக்கீடு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து சபை ஒத்திவைக்கப்பட்டதுடன், மீண்டும் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டது. (இ)

## மண்டேலாவுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

நெல்சன் மண்டேலாவுக்கு வடமாகாண சபை அமர்வில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

நேற்று இடம்பெற்ற வடமாகாண சபை அமர்வின்போது மறைந்த முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவுக்கு அஞ்சலி செலுத்தவேண்டும் என தெரிவித்த தவிசாளர் சி.வி.கே.சிவஞானம் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்த அறிவிப்பு விடுத்தபோது அனைவரும் எழுந்து நின்று ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர். (இ)

## நெஸ்லே லங்காவின் விளக்கவுரை

(யாழ்ப்பாணம்)

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் அனுசரணையில் நடைபெறும் மாபெரும் போசாக்கு, சுகாதாரம், ஆரோக்கிய வாழ்வு, மற்றும் சமையல் குறிப்பு சம்பந்தமான நிகழ்ச்சி தொடர்பான விளக்கவுரையும், இலவச அனுமதிக் கூப்பனும் வழங்கும் நிகழ்வு இன்று மாலை 4 மணிக்கு யாழ்.நாவலர் வீதியிலுள்ள மஸ்ர உத்தீன் பாடசாலையில் நடைபெறும்.

பதினைந்து வயதுக்கு மேற்பட்ட பெண்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகின்றனர். (105)

## விடுமுறை நாட்களில் வியாபாரம்

(யாழ்ப்பாணம்)

நத்தார் மற்றும் புதுவருடப்பிறப்பு தினங்களை முன்னிட்டு எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் ஜனவரி முதலாம் திகதி வரை உள்ள சனி, ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி சகல வர்த்தக நிலையங்களையும் திறந்து வியாபாரம் செய்வதற்கு யாழ்.வணிகர் கழகம் வர்த்தகர்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

எனினும் விடுமுறை தினங்களில் வேலை செய்யும் ஊழியர்களின் நலன் பேணப்படவேண்டுமெனவும் யாழ்.வணிகர் கழகம் அறிவித்துள்ளது.


## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1015

திகதி 09.12.2013

வெற்றி எண்கள்: 09 17 18 53 ஆங்கில எழுத்து: X

ஜக்பொட் பரிசு ரூ.1,62,91,260/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 1,62,91,260/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 13 | 50,000/= | ரூ. 6,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 252 | 1,000/= | ரூ. 2,52,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 470 | 1,000/= | ரூ. 4,70,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11605 | 60/= | ரூ. 6,96,300/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 5996 | 40/= | ரூ. 2,39,840/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 152356 | 20/= | ரூ. 30,47,120/= |
| ஆங்கில எழுத்து | 22115 | 20/= | ரூ. 4,42,300/= |
| | | மொத்தம் ரூ. | 67,97,560/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 விதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மாத்தறை | 605364388-3-03 |
| மாத்தளை | 605362022-9-29 |
| புத்தளம் | 605373851-9-09 |
| அம்பாறை | 605368052-8-08 |
| திருக்கோணாமலை | 605370052-3-03 |
| கம்பஹா | 605368392-1-41 |
| அநுராதபுரம் | 605371220-4-14 |
| கம்பஹா | 605367926-6-26 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 71,97,560/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 16,589,000/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2013.12.12 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3213)


## நெடுந்தீவுப் பிரதேசசபை, 2014 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்.

நெடுந்தீவு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் பொதுச்சந்தை,இறைச்சிக்கடை, என்பவற்றை 2014.01.01 தொடக்கம் 2014.12.31 வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல்.

- கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி: 20.12.2013 நண்பகல் 12.00 மணி வரை
- கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி திகதி: 23.12.2013 மு.ப 10.00 மணி வரை
- கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி: 23.12.2013 மு.ப 10.30 மணி வரை

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி உப தலைவர், நெடுந்தீவுப் பிரதேச சபை, நெடுந்தீவு. என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும்.

பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித்தொகையிலும் குறைவான கேள்வி கோருபவரின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது.

01 முதல் 02 வரையான விடயங்களுக்கு தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியையும் செலுத்தி 26.12.2013 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும் மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றக்கொள்ளளாம். தொலைபேசி இலக்கம்: 0213216476

### குத்தகை அட்டவணை

| விடய இல | விபரம் | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக்கட்டணம் (வரி நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01. | நெடுந்தீவு பொதுச்சந்தை குத்தகை | 500.00 | 3000.00 | 18000.00 |
| 02. | நெடுந்தீவு மாட்டிறைச்சிக் கடை குத்தகை | 500.00 | 3000.00 | 181000.00 |

எஸ்.பி.அருளப்பு
உப தலைவர்,
நெடுந்தீவுப் பிரதேச சபை
08.12.2013

(C/3220)



"ஓம் நமசிவாய ஆன்மீக வங்கி"

'இந்துநெறி காப்போம்
இந்துவாக வாழ்வோம்'

இந்துக்களே உங்களுடைய தார்மீக கடமையாக ஓம் நமசிவாய மந்திரத்தினை 1008 முறை எழுதி அருகில் உள்ள ஆலயங்களில் சமர்ப்பித்து எமதுசமயத்தினையும் சமயவிழுமியங்களையும் எம்மக்களையும் காத்திட

அர்ப்பணிப்புடன் ஐந்தெழுத்துமந்திரம் முதலீடு செய்வீர்களாக!

# அடக்குமுறைகளுக்கு எதிராக பெண்கள் குரல்கொடுக்கவேண்டும்

## முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி



(யாழ்ப்பாணம்)

பெண்கள் அடங்கியொடுங்கி இருக்காது தமக்கு எதிராக இழைக்கப்படுகின்ற கொடுமைகளுக்கு எதிராக கிளந்தெழும் மனோபாவத்தை வளர்த்துக்கொள்ளல் வேண்டுமென முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா தெரிவித்துள்ளார்

கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவு பெண்கள் அமைப்பினர் ஏனைய மாவட்டங்களில் உள்ள பெண்களுடன் இணைந்து நடத்திய பேரணியின் பின்னர் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை களைய ஒத்துழைப்பு நல்க வேண்டுமென கோரிக்கை மகஜரினை முல்லைத் தீவு மாவட்ட அரச அதிபர், முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மற்றும் சிறுவர், பெண்கள் தொடர்பான பிரிவுக்கான பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோருக்கு கையளித்தனர்.

இதன் பின்னர் நடைபெற்ற கூட்டத்தின் போது நீதிபதி மேற்படி கருத்தினை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகளுக்கு தீர்வுகாணும் வகையில் சட்டங்கள் போதுமானளவு இருந்தாலும் அதனை அமுல்படுத்துவதில் சிக்கல்கள் உள்ளன.

வடக்கு கிழக்குக்கு வெளியே அமைக்கப்பட்ட சிறுவர் பெண்கள் தொடர்பான விசேட நீதிமன்றங்கள் வடக்கு, கிழக்கிலும் அமையப்பெறவுள்ளது.

நீதிமன்ற கட்டமைப்பும், சட்டங்களும், பெண்களை பாதுகாப்பதற்கான அனைத்து வழி முறைகளையும் கொண்டிருந்த போதிலும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கு நீதிமன்ற கட்டமைப்புகளையும், சட்டங்களையும் சரிவர பயன்படுத்த வேண்டுமென அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (170)

# ஒட்டுசுட்டான் பொதுநூலகத்தின் வாசிப்பு மாத பரிசளிப்பு விழா



(முல்லைத்தீவு)

முல்லை மாவட்டபுதுக்குடியிருப்பு பிரதேச சபையின் பொது நூலக ஒட்டுசுட்டான் அலுவலகத்தின் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா வெகுசிறப்பாக நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் செயலாளர் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற நிகழ்வில் ஒட்டுசுட்டான் கோட்டத்தில் தரம் 05 புலமைப்பரிசிலில் சித்திபெற்ற 6 மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு கௌரவித்தோடு தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சித்திரப் போட்டி கட்டுரைப் போட்டி ஆகியவற்றில் வெற்றியீட்டிய 11 மாணவர்களுக்கும் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது இந்நிகழ்வில் பிரதம விந்தினராக முல்லை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மோகனதாஸ், ஒட்டுசுட்டான் கோட்டக்கல்வி அதிகாரி த.பங் கயச் செல்வன், ஒட்டுசுட்டான் ஓய்வுபெற்ற கோட்டகல்வி அதிகாரி எஸ். தில்லையம் பலம். ஒட்டுசுட்டான் ஆயுர்வேத மருத்துவமனை அதிகாரி மணிவண்ணன் ஆகியோரும் கலந்துசிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)

## இன்று 11.12.13

இன்று (11.12.2013) பதினொராம் திகதி பன்னிரண்டாம் மாதம், பதின் மூன்றாம் வருடமாகும். இன்றைய நாளை அதிஸ்டமிக்க நாளாகவும், திருமணம் செய்வதற்குரிய சிறப்பு மிக்க நாளாகவும் கருதுகின்றனர்.

இதேபோன்ற தினம் (11.12.13) நூறு வருடங்களுக்கு ஒருமுறைதான் ஏற்பட்டுவதாக கூறுகின்றனர். வருடத்தில் (12) பன்னிரண்டு மாதம் உள்ளதால் 2014 ஆம் ஆண்டு இதே போன்ற தினம் வர வாய்ப்பு இல்லை. ஏனெனில் (13) பதின் மூன்றாவது மாதம் கணிக்கில் இல்லை. அந்தவகையில் உலகத்திலே இன்றைய நாள் சிறப்புமிக்க நாளாக கருதப்படுகிறது.

இன்றைய தினத்தை மகிழ்ச்சிகரமாக வாழ வழியமைப்போம். (105)

## இளைஞர் கழகத்தின் இரத்ததானமுகாம்

(மானிப்பாய்)

காரைநகர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ள இரத்த தான முகாம் இன்று புதன்கிழமை காலை 9.00 மணி முதல் இடம்பெறவுள்ளது.

காரைநகர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வின் ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதேச செயலர் திருமதி. தே.பாபு கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திருமதி. வினோதினி ஸ்ரீமேனன், யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் லக்ஷன், காரைநகர் பிரதேசசபை தவிசா ளர் வே.ஆனைமுகன் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

கௌரவ விருந்தினர்களாக காரைநகர் பிரதேச சபை உறுப்பினர் சு.யோகேஸ்வரன், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த சோ.விக்கினேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆர்வமுள்ள அனைவரையும் இரத்த தான நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (48)



# சட்டத்தின் பொறுப்பில் விட்டிருப்பது ஆரோக்கியமான விடயம்

வடக்கு மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர் கமல் என்ற கமலேந்திரன் கொலைக்குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

கொலையுண்டதும் கொலைக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டதும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள்.

அப்படியென்றால் இது உட்கட்சி மோதலா? அல்லது தனிப்பட்ட முறையிலான முரண்பாடா?

எதுவென்று அறிவதற்காக விசாரணைகள் நடக்கின்றன.

ஆனால், இந்த மாதிரியான சம்பவங்களை மக்களும் விரும்பவில்லை. கட்சி அபிமானிகளும் விரும்பியிருக்க மாட்டார்கள்.

இதை அந்தக் கட்சியான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியே கண்டித்திருக்கிறது.

இவற்றை முழுமையாக விசாரித்து நடவடிக்கை எடுக்குமாறு கட்சியின் தலைமைப்பொறுப்பிலிருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சட்டத்துறையிடம் விட்டிருப்பது ஆரோக்கியமான விடயம்.

இந்தச் சம்பவம் அவருடைய கட்சிக்கு நெருக்கடியைக் கொடுத்தாலும் சட்டத்தின் பொறுப்பில் இதை அவர் விட்டிருப்பது கட்சியை பாதுகாக்கக் கூடிய ஒரு நடவடிக்கையே.

அரசாங்கத்தின் செல்வாக்கையோ அமைச்சுப் பதவியின் அங்கீகாரத்தையோ வைத்து அவர் தன்னுடைய ஆட்களைக் காப்பாற்ற முயற்சிக்காமல் சட்டத்திடம் பொறுப்பை ஒப்படைத்திருப்பது பரவாயில்லை.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு, கொழும்பு–கம்பஹா பகுதியிலும் இதைப்போன்று ஒரே கட்சியைச் சேர்ந்த இருவர் மோதினர். அதில் ஒருவர் கொல்லப்பட்டார். இன்னொருவர் சிறைக்குச் சென்றார்.

கொல்லப்பட்டவர், பாரத லஷ்மன் பிரேமச்சந்திர. சிறைக்குப்போனவர், துமிந்த சில்வா. இரண்டு பேரும் அரசாங்கத் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள்.

அண்மையில் ஐக்கியதேசியக் கட்சியின் இரண்டு குழுக்களுக்கிடையில் இதேபோன்றதொரு மோதல் நடந்தது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கான ஆதரவாளர்கள் ஊர்வலமாக செல்லும்பொழுது மங்கள சமரவீரவின் தரப்பு மோதலில் ஈடுபட்டது.

நல்லவேளையாக அங்கே கொலைகள் விழவில்லை. ஆனாலும் மங்களவை பொலிஸ் பிடித்து அடைத்தது.

இந்த மாதிரி ஒரே கட்சிக்குள் நடக்கின்ற அடிதடிகள், கொலைகள் இலங்கையின் வழமையாகி விட்டது.

ஆனால், இவர்கள் எல்லாம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள். இவர்களின் மீது நம்பிக்கை வைத்து, மதிப்பு வைத்தே இவர்களை மக்கள் தங்களின் பிரதிநிதிகள் ஆக்கினார்கள்.

ஆகவே இதற்கு விசுவாசமாக நடக்க வேண்டியது இவர்களின் பொறுப்பாகும். இப்படி பொறுப்பற்று சமூகத்தை வன்முறைக்களமாக்கக் கூடாது.

முன்னர் இயக்கங்கள் இந்த மாதிரி வன்முறைகளைத் தாராளமாகச் செய்தன.

புளொட் இதில் மிகப் பிரபலம்.

பின்னாளில் புலிகள் இதில் கொடிகட்டிப்பறந்தார்கள்.

பிரபாகரனுக்கு அடுத்த நிலையில் இருந்த மாத்தயாவையும் அவருடன் தொடர்பு பட்டவர்கள் என்ற போர்வையில் நூற்றுக்கணக்கானவர்களையும் கைது செய்து சிறையில் அடைத்துத் தண்டனை வழங்கினார் பிரபாகரன்.

அப்பொழுதும் மக்களுக்குப் பெருங்குழப்பம் ஏற்பட்டது. என்ன ஏது என்று தெரியாமல் மக்கள் தடுமாறினார்கள். புலிகளில் இருந்த பல உறுப்பினர்களும் தடுமாறினார்கள். புலிகளின் ஆதரவாளர்களும் தடுமாறினார்கள்.

இப்பொழுது தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள்ளும் ஏகப்பட்ட உள் மோதல்களும் முரண்பாடுகளும் உள்ளன. இவை எப்போது வெடிக்கும். அப்பொழுது என்னவெல்லாம் வெடிக்கும் என்று யாருக்கும் தெரியாது.

ஏனென்றால் இவர்களில் சிலர் புலிவாசனையுள்ளவர்கள். சிலர் புளொட் வாசனையுள்ளவர்கள். சிலர் ஈபிஆர்எல்எவ், ரெலோ என்ற வாசனைகளையுடையவர்கள். எல்லாவற்றையும் விட தமிழரசுக்கட்சி இருக்கிறது. மற்றவர்களைத் தூண்டிவிட்டுக்காரியம் பார்ப்பதில் அது பெரும் கில்லாடிக்கட்சி.

எல்லாவற்றையும் பார்த்து மக்களும் கூட்டமைப்பின் ஆதரவாளர்களும் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த மாதிரியான வில்லங்கள் இல்லாமல் எப்ப ஒரு அமைதியான அரசியல் சூழல் உருவாகும்? என்பதே பலருக்கும் உள்ள கேள்வி.

மக்கள் அமைதியை விரும்புகிறார்கள். நாடும் அமைதியையே விரும்புகிறது.

அப்படியென்றால் மக்களுக்கும் நாட்டுக்கும் அமைதியைக் கொண்டு வருவதற்காக உழைக்கும் அரசியல்வாதிகளே முதலில் அமைதியைக் கொண்டு வரவேண்டும்.

அதற்கு முதல் அவர்கள் அமைதியாக இருகக வேண்டும்.

இதற்கு நல்லதோர் ஆரம்பமாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஒரு தீர்மானத்தை எடுத்திருப்பதாக அறிவித்திருக்கிறது.

கட்சியை மீள் கட்டமைப்புச் செய்யவுள்ளதாக அந்த அறிவிப்புச் சொல்கிறது.

இது நடந்தால் நல்லது என்பதே மக்களின் விருப்பம்.

நீந்துங்கள் அல்லது மூழ்குங்கள்.
- ஷேக்ஸ்பியர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## திசை திருப்பும் வெற்றுக் கோஷங்கள்!

தேசியக் கொடி விவகாரத்தை மீண்டும் தூக்கியிருக்கிறார் வடமாகாண சபையின் விவசாய அமைச்சரும், தேர்தலில் நிற்க சீற் வாங்கித் தந்த தனது கட்சியையும் தலைவரையும் 'உச்சி விட்டு' கட்சிதாவி அந்த அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொண்டவருமான பொ.ஐங்கரநேசன் அவர்கள்.

அவ்வப்போது இப்படி உணர்ச்சிகரமாக எதையாவது எடுத்துவிட்டுக்கொண்டிருப்பதுதான், "இதோ நம் தலைவர்கள் எதிரிகளை எதிர்த்து வீரமாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்" என்று தமிழ் மக்கள் புல்லரித்துவிடப் போதுமானது என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்தவர்கள், பதவிக்கு 'மாக்ஸிமம் கரண்டி' என்று அதில் புதுசாய் நுழைந்தவர்கள் என்று அனைவருமே நன்கு தெரிந்துவைத்திருக்கிறார்கள்.

எங்களுடைய வாழ்க்கைக் கஷ்டங்கள் தீர என்ன செய்யப் போகின்றீர்கள் என்று மக்கள் கேட்டுவிடுவதற்கு முன்பாக, உணர்ச்சிகரமான ஒரு விஷயத்தை எடுத்து முழங்குவது தேர்ந்த அரசியல்வாதியின் கெட்டித்தனங்களில் ஒன்று. ஐங்கரநேசன் தன் கெட்டித்தனத்தை நிரூபித்து வருகிறார்.

தமிழ் மக்களது இன்றைய முக்கிய பிரச்சினையான தேசியக் கொடியை ஞாபகப்படுத்தியதற்காக, அதன்மூலம், தேசியக் கொடியை மாற்ற வேண்டிய பிரச்சினையோடு ஒப்பிடும்போது தாங்கள் வாழ்க்கையைக் கொண்டுநடத்தப்படும் பாடுகள் ஒன்றுமேயில்லை என்று உணர வைத்ததற்காக மக்கள் அவருக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.

தமிழ் மக்கள் வேண்டிநிற்கும் அந்த இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு என்ன வழி?, அதை அடைவதற்கான உங்களது திட்டம் என்ன?, அதற்கு நீங்கள் செய்கின்ற முயற்சி என்ன? என்பதை ஒன்றும் சொல்லாமலே–செய்யாமலே தேசியக் கொடியை மாற்ற வேணும், இராணுவம் முற்றாக விலக வேணும், ரூபா நோட்டில் ஜனாதிபதி படத்தை ஏற்க மாட்டோம் என்றெல்லாமா சொல்லிக்கொண்டிருப்பது? இது ரயிலைச் சித்திரமாக வரையச் சொன்னால் புகையை வரைந்துவிட்டு அந்த ரயிலின் புகைதான் இது என்று சொல்லும் பம்மாத்தல்லவா?

இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டால், இவர்கள் இப்போது எதிர்ப்பரசியல் லாபத்திற்காக முழங்கிக் கொண்டிருக்கும் பிரச்சினைகள் எல்லாம் இல்லாமலே போய்விடும். இந்தப் பிரச்சினைகள் தொடர்ந்து இருக்க வேண்டும். அந்த உணர்ச்சிகரக் கோஷங்கள் பதவி அரசியலுக்குத் தேவை என்பதற்காகவா இனப்பிரச்சினைத் தீர்வுக்குப் பேசுவதை மறுத்துவிட்டு மற்றெல்லாம் பேசுகிறார்கள்?

ஒப்பீட்டளவில் பெரிய இனவாதக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து இலங்கையின் தேசியக் கொடியை யாழ்ப்பாணத்தில் வைத்து இவரது தலைவர் தூக்கிப்பிடித்த காட்சியை மாகாண அமைச்சர் ஐங்கரநேசன் பார்க்கவில்லையா? ஒருவேளை இதுவரை அதை அவர் அறியவில்லையாயின், இப் போது உரியவர்களிடம் கேட்டு அறிந்தால், அந்தத் தலைவரது கட்சி தந்த அமைச்சுப் பதவியை ஐங்கரநேசன் உதறிவிடத் தயாரா?

குறைந்தபட்சம், தேசியக் கொடியை ஏற்றுக்கொண்ட தலைவரின் கட்சியிலிருந்தாவது தான் விலகிவிடும் ரோசம் ஐங்கரநேசன் அவர்களுக்கு வரவேண்டாமா? "தேசியக் கொடியை நான் தெரிந்துதான் ஏற்று ஏந்தினேன்" என்று திண்ணமாக அறிவித்த தலைவரையே தனது தலைவராகவும் ஏற்றுக் கொண்டபடி எதற்காக இந்த வீரவசனம்?

மக்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கும் தீர்வுக்கு என்ன வழி? அபிவிருத்தி, வாழ்வு மேம்பாட்டிற்கு என்ன வழி? என்று காண்பிப்பதை விட்டுவிட்டு, தேசியக் கொடியை மாற்றக் கேட்டுக் கொண்டிருப்பது எப்படியொரு சவடால்த்தனமான திசைதிருப்பல் என்பதை மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

- ஆசிரியர்

# சுதந்திரமான வாழ்வியலுக்கு அடித்தளமிட வேண்டும்

## வவுனியா பிரஜைகள் குழு ஜனாதிபதிக்கு மகஜர்

(வவுனியா)

வடக்கு, கிழக்கு மக்களின் சுதந்திரமான வாழ்வியலுக்கு அடித்தளமிட வேண்டும் என வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவால் ஜனாதிபதிக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ள மனித உரிமை பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மனித உரிமை என்பது கருவறையில் தொடங்கி கல்லறை வரை தொடர்கிறது. ஒரு மனித உயிர் கருவாய் உருக்கொள்ளும் கணத்திலேயே மனித உரிமை பிறந்து விடுகிறது. ஏனெனில் முறையற்ற கருக்கலைப்பு பெரும் குற்றம். மனிதனை மனிதனாக மதிப்பதே மனித உரிமை.

மனித உரிமை என்ற சொல், 1766ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அமெரிக்க சுதந்திரப் பிரகடனத்தில் தான் முதன்முதலாக பயன்பட்டதாக அறியப்பட்டுள்ளது. பண்டைய காலத்தில் மனித உரிமை என்பது தர்மசிந்தனையாகவும் பாவ புண்ணிய மதிப்பீடாகவும் இருந்து வருகிறது.

உள்நாட்டில் நடைபெற்ற யுத்தம் மூன்று தசாப்த காலங்களுக்குப் பின்னர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. யுத்தத்தைக் காரணம் காட்டி பல தமிழர்கள் பயங்கரவாத, அவசரகால தடைச்சட்டங்களின் கீழ் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். அன்றைய சூழ்நிலையைக் காரணம் காட்டி அரசாங்கம் இந்தக் கைதிகளின் விடயத்தில் பாராமுகமாக இருந்து வந்தது. இன்றும் அதேபோக்குத் தொடர்கின்றது. தாங்கள் என்ன குற்றத்திற்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ளோம் என்பதைக் கூட இதுவரை காலமும் அறியாது சிறைவாசம் அனுபவித்து வரும் தமிழ் அரசியல் கைதிகளை அரசாங்கம் மனிதாபிமான அடிப்படையில் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

திட்டமிட்ட நில அபகரிப்புகள் நிறுத்தப்பட வேண்டும். இனங்களுக்கு இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தக்கூடிய புதிய குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும். வடக்கு, கிழக்கில் தமிழ்ச் சமூகத்தின் இன சமநிலையைச் சீர்குலைக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் உடனடியாக முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும்.

மக்களின் வழிபாட்டு சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும், விடுதலை பெற்ற முன்னாள் புலிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதோடு புதிய கைது நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும், மக்கள் இறந்தவர்களை நினைவு கூரும் உரிமையை அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும், யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீட்டுத்திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும், மனித உரிமைக்காகவும், மனித கொளரவத்துக்காகவும் குரல் கொடுப்பவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும், ஊடகங்களினதும், ஊடகவியலாளர்களினது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதோடு, சுயாதீனமாக இயங்கவும் வழி கோலப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பரீட்சை பாதுகாப்பிற்காக 4000 பொலிஸார் கடமை

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான பரீட்சை நிலையங்களில் விசேட பாதுகாப்புத் திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதற்காக பரீட்சை நிலையங்களுக்கு அருகில் ரோந்து நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

நேற்று ஆரம்பமாகியுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்காக ரோந்து நடவடிக்கைகளுக்கு மேலதிக பொலிஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பரீட்சை இடம்பெறும் காலப் பகுதியில் பரீட்சை நிலையங்களுக்கு அருகில் முறையற்ற விதத்தில் நடந்துகொள்வதனை இயன்றவரை தவிர்க்குமாறும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கைதிகளின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக்கத்திட்டம்

மரண தண்டனையில் மாற்றம் கொண்டு வருவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகளின் தண்டனையை ஆயுள்தண்டனையாகக் குறைப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்தார்.

ஆயுள்தண்டனை அனுபவித்துவரும் கைதிகளின் தண்டனைக் காலத்தை 20 வருடங்களாக குறைப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. இது தொடர்பிலான யோசனைத் திட்டமொன்று நீதி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றார். மரண தண்டனையை இரத்து செய்யுமாறு பிரான்ஸ் உள்ளிட்ட பல நாடுகள் இலங்கையிடம் நேரடியான கோரிக்கைகளை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மனித உரிமை மீறல்கள்; 3000 முறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இதுவரை மூவாயிரத்திற்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. கல்வித் திணைகளம் மற்றும் பொலிஸாருக்கு எதிராக இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக ஆணையாளர் கலாநிதி பிரதீபா மஹானாமஹேவா தெரிவித்துள்ளார்.

கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் 75 வீதமானவை தொடர்பில் பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு மாதாந்தம் சுமார் 500 முறைப்பாடுகள் பதிவாகின்றன.

பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வது தொடர்பில் தற்போது சுமார் ஆயிர்து 500 முறைப்பாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு பதிவாகியுள்ளன. சில முறைப்பாடுகள் தொடர்பில் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் பின்னர் சமரசம் ஏற்படுவதாகவும் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இலங்கையின் பொருளாதாரம் நவம்பர் மாதத்தில் வளர்ச்சி

### மத்திய வங்கி

இலங்கைப் பொருளாதாரம் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியடைந்துள்ளது. கடந்த நவம்பர் மாதத்தில் பொருளாதார வளர்ச்சி காணப்பட்டதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள நிதிக்கொள்கை எந்தளவு நம்பிக்கைத்தன்மையுடையது என்பதை இது எடுத்துக் காட்டுகின்றது.

இந்த ஆண்டில் மூன்றாம் காலாண்டில் நாட்டில் உள்ளூர் உற்பத்தி வேகமாக வளர்ச்சி கண்டது. இந்த வளர்ச்சி எதிர்பார்த்ததை விடவும் அதிகமாகும். பணவீக்கமும் குறைந்துள்ளது. வெளி விவகார பிரிவுகளிலும் சிறந்த வளர்ச்சி காணப்படுகிறது. பிரதான அரச கூட்டுத்தாபனங்களில் நிதி நிலைமை சிறந்த முறையிலுள்ளது. அக கூட்டுத்தாபனங்கள் பெருந்தொகையான வங்கிக் கடன்களை திருப்பிச் செலுத்தியுள்ளன.

இதனூடாக தனியார் நிறுவனங்களின் நிதி அதிகரிப்பும் சாத்தியமாகியுள்ளது. இவ்வாண்டு ஒகரோபர் மாதம் வங்கிகளிலிருந்து தனியார் நிறுவனங்களுக்கு பெருந்தொகையான நிதி கடனாக வழங்கப்பட்டுள்ளது. நாட்டில் நிதி நிலைமை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகளாக இவை காணப்படுகின்றன என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

# அச்சம் தவிர்! துரோகம் செய்!!

## யோகா-ராஜன் கட்டுரையிலிருந்து

**முதன் முறையாக வடக்குக் கிழக்கு இணைந்த தமிழ்ப் பிரதேசத்தின் முதலமைச்சராக, அதுவும் காணி அதிகாரம் உட்பட 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான இந்திய அரசின் ஆளுமைக்கும், பின்னணிக்கும் மத்தியில் வரதராஜப்பெருமாள் பிரசன்னமானார். அன்றைய தமிழரின் அரசியல் நீரோட்டத்தில் (கூடவே இன்றைய தமிழர் கூட்டமைப்பில் உள்ள பலருரும் சேர்ந்து) 'துரோகி' எனச் சித்தரிக்கப்பட்டு பதவியில் இருந்தும், நாட்டை விட்டும் கலைக்கப்பட்டார். ஆனால் இன்று அதே சிம்மாசனத்தில் கூட்டமைப்பு அமர்ந்திருக்கிறது, இன்றைய நீரோட்டத்தில் அதுவும் குறைந்த அதிகாரத்துக்குட்பட்ட ஒரு சபையில்!**







V.Yogeswaran



Varatharajaperumal











தமிழ்ச் சமூகத்தில் தொன்றுதொட்டு தொடரும் பண்பாடுகளில் ஒன்று, தமது பலத்தைப் பற்றியும் பழம் பெருமையைப் பற்றியும் மட்டுமே திரும்பத்திரும்பப்பேசுவது!

எமது பலவீனங்கள் பற்றிப்பேசுவதும் இல்லை! நினைத்துப் பார்ப்பதும் இல்லை! கங்கை கொண்டு கடாரம் வென்ற தமிழனால் ஒரு நாட்டைக்கூட தக்க வைக்க முடியாமல் போனது ஏன்? என்பது பற்றி எண்ணிப் பார்ப்பதில்லை! கட்டபொம்மன் தோற்றதற்கு எட்டப்பனைமட்டும் காரணமாகக் சொல்வர்! பண்டார வன்னியனின் வீழ்ச்சிக்கு காக்கை வன்னியன்தான் காரணம் என்று கதையை முடித்துவிடுவர்! நவீன உலகில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றி எண்ணத் துணிவதில்லை! இன்றும் புலிகளின் வீழ்ச்சிக்கான பழியை கருணா (கருணாம்மான்) மீது சுமத்திவிட்டு, திரை விழுந்தது! கதை முடிந்தது என்று வரலாற்றின் மீது முற்றுப்புள்ளி யிடுகிறோம் இலகுவாக!

நவீனத்துவத்துக்குப் பிந்தைய இன்றைய மேற்குலகு, மோதுகை உருமாற்றம் அல்லது முரண்பாடுகளின் நிலைமாற்றம் (conflict transformation) எனும் முறைமையில் முரண்பாடுகளுக்கான தீர்வுகள் (அதாவது தொடர்ச்சியான உரையாடல்கள் மூலம் மோதுகைக்குட்படும் பகுதியினருக்கு இடையில் பரஸ்பர உறவை உருவாக்குவதும், முரண்படும் இரு பகுதியினரும் நன்மையடையும் பொருட்டு முரண்களை சாதகமாக்கிக்கொள்ளும் புதிய கோட்பாட்டு வழியில்) தேர்வுக்குள்ளாகின்றன!

தமிழ்ச்சமூகம் நவீன உலகைக் கடந்து வரவில்லை. இன்றும் நாம் தர்க்கங்கள், பட்டிமன்றங்கள் ஊடாக கருத்துக்களை நிறுவ முனைகிறோம். எமது தர்க்க முறைமை "அது" அல்லது "இது" எனும் கறுப்பு வெள்ளைப் பார்வைக்கு உட்பட்டதாகவே அமைகிறது! சமூகத்தில் உயர் சிந்தனைத் தளங்களுக்குரியவர்களாகக் கருதப்படும் இடது சாரிகள், மார்க்சியர்கள், மாற்றுக் கருத்தாளர்கள் அடங்கலாக தமிழ்சமூகம் முழுமையும் இந்தத் தர்க்கவியலை, நேர்க்காட்சி விவாத முறையை தாண்டி வரமுடியவில்லை. பன்முகச் சிந்தனைக்கும், கருத்துச் சுதந்திரத்துக்குமான அடித்தளம் வெறுமையாகவே இருக்கிறது! நவீன காலத்துக்குப் பிந்தைய சிந்தனை முறைபற்றி அறியாதிருக்கிறோம் அல்லது அதைத் தரிசிக்க அஞ்சுகிறோம்!

நாம்..? அடித்துச் செல்லும் நீரோட்டத்தில் மிதக்கும் செத்த மீன்களைப் போல் நீந்துகிறோம் அல்லது நீந்துவதற்கு முனைகிறோம். அரசியல் நீரோட்டத்தில் எல்லோரும் ஒரே திசையில் பயணிக்கவேண்டும் என்பதை ஒட்டுமொத்தத் தமிழர்களுக்கான வாய்மொழிச் சட்டமாக வைத்திருக்கிறோம். ஒரு தேசிய இனம் ஒரு தேசமாக உருமாற்றம் பெறுவதும், பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதும், மனித சமூகத்தின் அடிப்படை உரிமை! அதேவேளை ஒரு தேசம், தனிமனித சுதந்திரத்தை அடிப்படையாகக் கொள்ளும்போதுதான் அது ஓர் ஆரோக்கியமான தேசமாகக் கட்டமைக்கப்படும், உருப்பெறும்! அந்த வகையில் "தமிழ்த் தேசம் தனக்கென தனிநாடொன்றை அமைக்க வேண்டுமா" என்ற கேள்விக்கு ஆம் அல்லது இல்லை என்று பகிரங்கமாகப் பதில் அளிப்பதற்குரிய சுதந்திரம், அதற்கான சூழல் உருவாகவேண்டும்! "ஆம்" என்பவனைத் தேசிய வீரன் என்றும், "இல்லை" என மறுப்பவனை தேசத் துரோகி என்றும் முத்திரையிடுகின்ற மனோபாவம் இல்லாதொழிய வேண்டும்! இதுவே தமிழரின் ஜனநாயக உரிமையை புடம்போடுவதற்கான முன்நிபந்தனை!

தமிழ்த் தேசிய அரசியல் நீரோட்டத்தில் இணையாதவர்களை துரோகிகள் என்று அழைக்கும் அளவுக்கு இன்று துரோகம் என்ற சொல்லுக்குரிய கருத்தாக்கம் சுருங்கிப்போய் நிற்கிறது. இது அடிப்படையில் ஜனநாயக மறுப்பின் வெளிப்பாடு. முதன் முறையாக வடக்குக் கிழக்கு இணைந்த தமிழ்ப் பிரதேசத்தின் முதலமைச்சராக, அதுவும் காணி அதிகாரம் உட்பட 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான இந்திய அரசின் ஆளுமைக்கும், பின்னணிக்கும் மத்தியில் வரதராஜப் பெருமாள் பிரசன்னமானார். அன்றைய தமிழரின் அரசியல் நீரோட்டத்தில் (கூடவே இன்றைய தமிழர் கூட்டமைப்பில் உள்ள பலரும் சேர்ந்து) "துரோகி" எனச் சித்தரிக்கப்பட்டு பதவியில் இருந்தும், நாட்டை விட்டும் கலைக்கப்பட்டார். ஆனால் இன்று அதே சிம்மாசனத்தில் கூட்டமைப்பு அமர்ந்திருக்கிறது, இன்றைய நீரோட்டத்தில் அதுவும் குறைந்த அதிகாரத்துக் குட்பட்ட ஒரு சபையில்!

தமிழ் மொழியில் அதிகமாகப் பயன்படுத்தப் பட்டு வரும் சொல் துரோகம்! குறிப்பாக தமிழ்த்தேசிய எழுச்சியைத் தொடர்ந்து அல்லது அல்பிரட் துரையப்பா யாழ். மாநகரசபை மேயரானதில் இருந்து இதன் தொடர்ச்சியை அறிந்துகொள்ளலாம். "ஈழத்துக் காந்தி" தந்தை செல்வாவின் தமிழரசுக்கட்சிச் செயலர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்களும் வேறுசில கூட்டணித் தலைவர்களும் துரையப்பாவை நோக்கி சுட்டு விரலை நீட்டியவர்களில் முதன்மையானவர்கள். இது உலகறிந்த உண்மை. அதை நிகழ்த்தி முடித்தவர் வே.பிரபாகரன் அவர்கள். அமிர்தலிங்கம் அவர்களுக்கு அல்பிரட் துரையப்பா துரோகியானார்! பிரபாகரன் அவர்களுக்கு அமிர்தலிங்கமே துரோகியானார்! முதற் (அல்பிரட் துரையப்பாவின்) கொலையில் தமிழர்கள் தேசிய அரசியலில் பிரசன்னமாவதற்கான கருத்துரிமை மறுக்கப்பட்டது! அமிர்தலிங்கம் அவர்களின் கொலையுடன் தமிழரின் மிதவாத அரசியலுக்கான சுதந்திரம் அழிக்கப்பட்டது!

டக்ளஸ் தேவானந்தா அரசுத் தரப்புடன் இணைந்தபோது அவரைப் போட்டுத்தள்ளுவதற்கு திட்டமிட்ட புலித் தலைவர்களில் கருணா அம்மானும் ஒருவராக இருந்திருப்பார். அதே கருணா அம்மான் நீண்ட இடைவெளிக்குப் பின் அரசுத்தரப்பிடம் வந்து சேர்ந்தது ஒன்றும் அதிசயம் அல்ல! பாதுகாப்பின் நிமித்தம் தனது கருத்தில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டார் அவ்வளவுதான்! கருணாம்மான் துரோகியானதில் ராணுவத்தால் ஏற்படக்கூடிய (கிழக்கிலங்கைத் தமிழர்கள் மீதான) மனிதப் பேரவலம் ஒன்று தவிர்க்கப்பட்டதை மனங் கொள்ளவேண்டும்! இங்கு நுணித்து நோக்கப்படவேண்டிய விசயம்,துரோகி என்ற சொல்லுக்குள் தனிமனிதனதும், ஒரு பரந்துபட்ட சமூகத்தினதும் சுதந்திரமும் கருத்துரிமையும் மறுக்கப்பட்ட நிலையில் தொக்கிநிற்கிறது என்பதைத்தான்!

"மனிதர்கள் பிறந்ததில் இருந்து இறக்கும் வரை ஒரே கருத்தியலில் இருப்பதில்லை. இருக்க வேண்டிய அவசியமும் இல்லை! அதேவேளை மனிதன் தவறுகளுக்கு அப்பாற்பட்டவனும் அல்ல!" இதுவே நாம் மேற்குலகில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டிய முக்கிய பாடம்! மனிதன் தவறிழைக்காமல் இருக்கவேண்டுமென்றால் அவன் குழந்தைப் பருவத்திலேயே இறந்துவிடவேண்டும்! உயிர்வாழ்தல் உயிர்கள் அனைத்துக்குமான அடிப்படை உரிமை விருப்பமும்கூட. புழு, பூச்சி, பூரான், கொடிய மிருகங்களுக்கும், விஷஜந்துக்களுக்கும் கூட வாழும் உரிமை உண்டு. காலத்துக்கும் சூழலுக்கும் ஏற்ப மனிதன் தன் வாழ் நிலையை மாற்றிக்கொள்கிறான். இருட்டறையில் மேயும் கரப்பான் பூச்சிகள் வெளிச்சத்தைக் கண்டு ஓடித் திரிவது முதல், பிரபாகரன் அரசுத்தரப்பின் காலடிக்குச் செல்லும் வரை" புலித்தேவனும் சக போராளிகளும் வெள்ளைக்கொடி ஏந்தி சென்றதும்" இசைப்பிரியா ராணுவத்தின் கையில் சிக்கியதும் எல்லாமே உயிர்வாழ்தல் எனும் உன்னதமான உரிமையின்அடிப்படையில்தான்! இவர்கள் எல்லோருமே "ராணுவத்திடம் மாட்டுப்படும் சந்தர்ப்பத்தில் சயனைட் குப்பியை விழுங்கி விடவேண்டும்" எனும் தமது அடிப்படைக் கருத்து நிலையில் இருந்து மாறியது ஒன்றும் தற்செயல் நிகழ்வுகள் அல்ல! ஏற்கனவே பல இளைஞர்களை சயனைட் குப்பிகளுக்குப் பலியாக்கிய இவர்களது அறம்சார்ந்து பல்வகை முரண்பாடுகள் உள்ள போதும், உயிர்வாழ்தலுக்கான இவர்களது இறுதி முடிவை துரோகம் எனும் சட்டகத்துக்குள் பூட்டிவிடுவது உயர் பண்பாகாது! இவ்விடத்தில், எதிர்த்தரப்பு உயர் இராணுவத் தளபதிகளால் வியந்து போற்றப்பட்ட,ஆனந்தபுரம் தீபன் போன்ற போராளிகளின் அறம் என்றும் மதிப்புக்குரியதே!

பலகோடி ரூபா பணப்பரிமாற்றத்தின் ஊடாக ராஜபக்சவை ஆட்சிப்பீடத்தில் அமர்த்திய போது தமிழ்த் தேசிய நீரோட்டத்தில் மாபெரும் சாணக்கியனாகக் கருதப்பட்டார் பிரபாகரன்!. வன்னி மக்கள் யுத்தநெருக்கடிகளால் சூழப்பட்டபோது, அதே பிரபாகரனின் சாணக்கியம் மறுதலிக்கப்பட்டது, மட்டுமல்ல, அதுவே தமிழ்ச்சமூகத்தின் பேரழிவுக்கான காரணமாகவும் பேசப்படுகிறது! இங்கும் துரோகி எனும் பதம் பிரபாகரனைச் சூழ்கிறது!

ஆழமான நுண் அறிவுடன் நோக்கின், தமிழர்களின் தோல்வியில் காத்திரமான பங்கை வகித்திருக்கிறது "துரோகி" எனும் சொல்! அமிர்தலிங்கம் முதல் தமிழ்த் தேசியத்துடன் ஒன்றித்திருந்த பல அரசியல் தலைவர்களின் அரசியல் வாழ்வு அஸ்தமித்துப் போனதற்கும், ராஜனி திரணகம முதல் நீலன் திருச்செல்வம் வரை பல புத்திஜீவிகளின் மூச்சுக்கள் நின்றுபோனதற்கும் "துரோகி" எனும் மூன்றெழுத்து காரணமாகியது! தோல்வி நிச்சயம் என்பதை உணர்ந்த போதும், பாலகுமாரன் முதல் புலித்தேவன் வரை புலித் தலைவர்கள் பலர் பிரபாகரனுடனான கருத்துப் பரிமாற்றத்தை மேற்கொள்ள முடியாமல்போனதற்கும் கூட இதுவே தடைக்கல் ஆனது!

இன்றும் இதுவே தமிழ்ச் சமூகத்தின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கு தடையாக இருக்கிறது! இன்றைய இலங்கையின் யதார்த்த சூழலுக்கேற்ற அரசியல் நகர்வுகளை மேற்கொள்வதற்கு அரசியல் தலைவர்கள் அச்சப்படுகிறார்கள்! இன்னும் வாழும் தமிழ் புத்திஜீவிகள் பலர் தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சியை நோக்கிய தமது கருத்துக்களை வெளிப்படையாக முன்வைப்பதற்கு பின்னிற்கிறார்கள்! "துரோகி" பட்டத்தைத் தருவித்துவிடுமோ எனும் அச்சம், மேலும் பல படிப்பாளிகளைப் பயமுறுத்திக்கொண்டிருக்கிறது!

ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, தமிழர்களாகிய நாம் தமது [illegible] பற்றி பேசுவதில்லை [illegible] பற்றி [illegible]

மேற்படி நிலைமைகளில் நாம் இங்கு வலியுறுத்த விரும்புவது, தமிழ்த் தேசியத்தின் "வானவில் வடிவம்" பற்றியும், தமிழ்ச் சமூகத்தின் அடுத்தகட்ட நகர்வு குறித்தும் புத்திஜீவிகள், படிப்பாளிகள், பல தரப்பட்ட ஆய்வாளர்கள் அனைவரும் திறந்த மனதுடன் பங்குபற்றக் கூடிய ஒரு நீண்ட, திறந்த 'உரையாடல் (விவாதம் அல்ல) வேண்டும் என்பதையே! இதற்கு முன்னிலையாக தமிழ்ச் சமூகம் முத்திரை (குறிப்பாக துரோகி என்று) பதிக்கின்ற பழக்கத்தில் இருந்து வெளிவர வேண்டும்! பன்முகப்பார்வைகள், பன்முகச்சிந்தனைகள், மற்றும் பன்முகக் கருத்துக்களையும் வரவேற்கின்ற, ஏற்றுக்கொள்கின்ற மனப்பக்குவம்தான் தமிழ்ச் சமூகத்தை ஓர் ஆரோக்கியமான சமூகமாக வெளிப்படுத்தும்! நூறு மலர்கள் மலரட்டும்! நூறு வண்ணங்கள் புலரட்டும்!

ஒரு மனிதன், சமூக நலன்களை தனது சொந்த நலனுக்கு உட்படுத்தும்போது அதுவே யதார்த்தத்தில் உயர்ந்த அறம் ஆகிறது! ஆனால் அதை மீறுகின்றபோது அதுவே துரோகமாகிவிட முடியாது!

# வீசா நடைமுறையை மாற்றுகிறது பிரித்தானியா

(கொழும்பு)

பிரித்தானியா வீசா சட்டங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக பிரித்தானிய விசாவிற்கான கொடுப்பனவு முறையிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் வீசா கட்டணங்களிலும் மாற்றம் செய்யப்படவுள்ளதாக இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

இணையத்தின் ஊடாக சகல வீசாக் கட்டணங்களையும் செலுத்த முடியும் என குறிப்பிட்டுள்ளது. டெபிட் அட்டைகள், மாஸ்டர் அட்டைகள், கடன் அட்டைகள், வீசா அட்டைகளின் ஊடாக இணையத்தின் ஊடாக பணத்தைச் செலுத்த முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க டொலர்களில் கட்டணத்தைச் செலுத்த முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, வீசா விண்ணப்பித்தவர்களுக்கு மட்டும் விலக்கு அளிக்கப்படும் எனவும், புதிதாக விண்ணப்பிப்பவர்கள் கட்டாயமாக இணையத்தில் ஒன்லைன் முறையில் கட்டணங்களைச் செலுத்த வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணக்கொடுக்கல் வாங்கல்களில் காணப்படும் ஆபத்துக்களை தவிர்க்கும் நோககில் இணையக் கொடுக்கல் வாங்கல் முறைமை அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# எல்லை தாண்ட வேண்டாம் மீனவர்களுக்கு அறிவுரை

(கொழும்பு)

இந்திய கடற்பரப்பிற்குள் சென்று மீன்பிடியில் ஈடுபடுவதை தவிர்க்குமாறு கடற்றொழில் அமைச்சு மீனவர்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்திய கடல் எல்லைக்குள் அத்து மீறியதாக கூறி 100 இற்கும் மேற்பட்ட இலங்கை மீனவர்களை இந்திய கடலோர காவற்படையினர் அண்மைக் காலங்களில் கைது செய்துள்ளனர்.

இலங்கை மீனவர்கள் இந்தியக் கடல் எல்லைக்கு அருகில் சென்று மீன்பிடியில் ஈடுபடுவதே இதற்கான காரணமாகும்.

இவர்களை விடுதலை செய்வது தொடர்பில் அரசாங்கம் இராஜதந்திர மட்டத்தில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

எனினும், எதிர்காலத்தில் மாலைதீவு கடல் எல்லைக்கு அருகில் மீன்பிடியில் ஈடுபட இலங்கை மீனவர்களுக்கு சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுப்பதற்கான பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதனால் இந்தியக் கடல் எல்லைக்குள் மீன்பிடியில் ஈடுபடுவதை தவிர்க்குமாறு மீன்பிடி அமைச்சு இலங்கை மீனவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

# உள்ளக விசாரணை உடன் வேண்டும்

## ஐ.தே.கட்சி கோரிக்கை

(கொழும்பு)

அரசு மீதான சர்வதேச விசாரணையைத் தவிர்க்க வேண்டுமானால் உள்ளக விசாரணையைத் தாமதமின்றி அரசு ஆரம்பிக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு அறிக்கையாளரான சலோகா பெயானி முதல் இலங்கைக்கு பயணம் செய்த அமெரிக்க உயர் குழுவினர் வரை போர்க்குற்றம் தொடர்பில் அரசு உள்ளக விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என்றே வலியுறுத்தியுள்ளனர் .

கனடா, பிரிட்டன் போன்ற நாடுகளும் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் சுயாதீனமாக உள்ளக விசாரணையை இலங்கை நடத்த வேண்டும் என்றும் இல்லையேல் சர்வதேச விசாரணை உறுதி என்றும் காலக்கெடு விதித்து , எச்சரிக்கை விடுத்துள்ளன .

இதுபோன்ற அழுத்தங்கள் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான மங்கள சமரவீர தெரிவித்ததாவது,

சர்வதேசம் நாட்டுக்கு அழுத்தங்கள் கொடுக்கும் வகையிலான கருத்துகளை முன்வைப்பது தவறானதல்ல .

ஏனென்றால் அரசு, போர் முடிவடைந்தவுடன் சர்வதேசத்தினருக்கு கொடுத்த வாக்குறுதிகளில் ஒன்றையேனும் இன்னமும் நடைமுறைக்குக் கொண்டு வந்ததாகத் தெரியவில்லை .

கொழும்பில் சென்ற மாதம் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டின் போதும் சர்வதேச தலைவர்களுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பாக உடனடி விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்றும் இது விடயத்தில் அரசு ஒருபோதும் பின் வாங்காது என்றும் உறுதியளித்தார்.

ஆனால், அரசு இதுவரையிலும் போர்க் குற்றச்சாட்டுகள் குறித்து கூறிய ஒன்றையேனும் செயற்படுத்துவதாக தெரியவில்லை . இதனாலேயே சர்வதேச சமூகம் , அரசுக்கு அழுத்தங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது .

இதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், அவரின் அரசுமே காரணமாகும். இவர்களின் செயற்பாட்டால்தான் இலங்கைக்கு சர்வதேசத்தின் மத்தியில் அவப்பெயர் ஏற்பட்டுள்ளது .

இந்நிலைமை மாற்றமடைந்து, நாட்டு மக்கள் அனைவரும் நிம்மதியாக இருக்க வேண்டுமெனில் அரசு சர்வதேசம் கூறுவதைப் போன்று உள்ளக விசாரணையை, எவ்வித பாரபட்சமுமின்றி எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் மேற்கொண்டே ஆகவேண்டும் .

இதனால், எவருக்கும் பாதிப்பேற்படா வண்ணம் இருப்பதும் முக்கியமானதாகும். இல்லையெனில் சர்வதேச விசாரணையில் இருந்து இலங்கையால் ஒருபோதும் தப்பிக்கவே முடியாது என்றார்.

## முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தருக்கு அகதி அந்தஸ்து வழங்க மறுப்பு




முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு அகதி அந்தஸ்து வழங்க பிரிட்டன் மறுப்புத் தெரிவித்துள்ளது.

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் கடமையாற்றிய உத்தியோகத்தர் ஒருவர் பிரிட்டனில் அகதி அந்தஸ்து கோரியுள்ளார். இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் தமிழர்களை கடத்தும் விசேட பிரிவில் கடமையாற்றியதாக குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் பிரிட்டன் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.

அகதி அந்தஸ்து வழங்குமாறு விடுத்த கோரிக்கையை பிரிட்டன் உள்விவகார அமைச்சு நிராகரித்துள்ளது. 2003 ஆம் ஆண்டில் சேவையில் இணைநது கொண்ட குறித்த உத்தியோகத்தர் 2010 ஆம் ஆண்டு பிரிட்டனுக்கு தப்பிச் சென்றுள்ளார். குறித்த பொலிஸ் உத்தியோகத்தருக்காக புலம்பெயர் தமிழ் சட்டத்தரணி சிவானி சேனராஜா நீதிமன்றில் முன்னிலையானார்.

## உணவு விநியோக கொடுப்பனவு; நிலுவை செலுத்துவதில் தாமதம்

(கொழும்பு)

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை பாதுகாப்புப் படைகளுக்கு விநியோகித்த நிறுவனங்களுக்கான கொடுப்பனவை, முப்படைகளும் செலுத்தத் தவறியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னணி நிறுவனங்கள் சிலவற்றுக்கு சுமார் பத்து பில்லியன் ரூபா பணத்தை இராணுவத் தலைமையகம் செலுத்த வேண்டியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்படையினர் 2.5 பில்லியன் ரூபாவினையும், இலங்கை விமானப் படையினர் ஒரு பில்லியன் ரூபாவினையும் செலுத்த வேண்டியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. நிலுவைப் பணத்தைச் செலுத்த பாதுகாப்பு அமைச்சிடம் கோரப்பட்டுள்ளதாக இராணுவ உயர் அதிகாரியொருவர். தெரிவித்துள்ளார்.

## அடைக்கலம் வழங்கும் நாடாக இலங்கை மாறியுள்ளது



(கொழும்பு)

அநாதைகளுக்கு அடைக்கலம் வழங்கும் நாடாக இலங்கை மாறியுள்ளது என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். போர், அரசியல் மற்றும் மத ரீதியான பிரச்சினைகளினால் நிர்க்கதியாகும் மக்கள் இலங்கையை நோக்கி படையெடுக்கின்றனர்.

மாலைதீவு மொத்தச் சனத்தொகையில் 20 வீதமானவர்கள் இலங்கையில் வாழ்ந்து வருகின்றனர். விக்னேஸ்வரன் வடக்கில் சிங்களவர்களை குடியேற்ற விரும்பவில்லை.

போரில் வெற்றி கொண்ட போதிலும் நாட்டின் எந்தவொரு நிலத்திலும் வாழும் உரிமை இன்னமும் கிட்டவில்லை.

சிலர் போர்க் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக இலங்கை மீது குற்றம் சுமத்தி வருகின்றனர்,

ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட சில கட்சிகள் நாட்டை சமஷ்டி முறைமைக்குள் தள்ள முயற்சிக்கின்றன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். கங்கொடவில சோமதேரரின் பத்தாம் ஆண்டு நினைவு நிகழ்வில் பங்கேற்றபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## சவுதியிலிருந்து மனைவியை வரவழைத்து தாருங்கள்

### 4 பிள்ளைகளின் தந்தை தற்கொலை முயற்சி

(கொழும்பு)

சவூதியில் பணிபுரிக்கின்ற தனது மனைவியை நாட்டுக்கு வரவழைத்து தருவதற்கு வேலை வாய்ப்பு பணியக அதிகாரிகள் உரியநடவடிக்கை எடுக்கவில்லையெனக் கூறி நான்கு பிள்ளைகளின் தந்தையொருவர் தற்கொலைக்கு முயன்ற சம்பவமொன்று பத்தரமுல்லையில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது தன்னுடைய மனைவி சவூதி அரேபியாவில் தொழில்புரிவதாகவும் அங்கு அவர் பல்வேறு இடையூறுகளுக்கு முகம்கொடுத்துள்ளதாகவும் அவரை உடனடியாக நாட்டுக்கு திரும்பி அழைத்து வருமாறு வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திடம் அவர் கோரியுள்ளார்.

அவரை நாட்டுக்கு திருப்பி அழைப்பதாயின் மூன்றரை இலட்சம் ரூபா தேவையென வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்ததையடுத்தே அவர் தனது நான்கு பிள்ளைகளுடன் பணியகத்திற்கு



நேற்றுமுன்தினம் வருகைதந்து தற்கொலைக்கு முயற்சித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பத்தரமுல்லையிலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு முன்பாகவே அவர் விஷமருந்தி தற்கொலை செய்து கொள்வதற்கு முயன்றுள்ளார்.

ஆபத்தான நிலையிலிருந்த அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் புளியங்குளத்தைச் சேர்ந்த 38 வயதான நான்கு குழந்தைகளின் தந்தையான இந்திக பிரசாத் என்பவரே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## இலஞ்ச ஊழல் அதிகரித்தால் வெளிநாட்டு முதலீடுகள் பாதிப்படையும்

(கொழும்பு)

இலஞ்ச உழல் மோசடிகள் அதிகரித்தால், வெளிநாட்டு முதலீடுகள் கிடைக்காது என சட்டமா அதிபர் பாலித பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். நாட்டில் பாரியளவில் இலஞ்ச ஊழல் மோசடிகள் இடம்பெறுகின்றமை அம்பலமானால், வெளிநாட்டு முதலீட்டாளர்களை எதிர்பார்க்க முடியாது. இலஞ்ச ஊழல் மோசடிகளினால் நாட்டின் பொதுமக்களே அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர்.

இலஞ்ச ஊழல்களினால் நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரியளவில் பாதிப்பு ஏற்படுகின்றது. இலஞ்ச ஊழல் மோசடிகளைத் தவிர்க்க அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். இலஞ்ச ஊழலை ஒழிப்பதற்கு போதியளவு சட்டங்கள் நாட்டில் காணபபடுகின்றன என அவர் தெரிவித்துள்ளார். உலக இலஞ்ச ஊழல் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# சமூகசேவைத் திணைக்களத்தால் மாற்றுத்திறனாளிகளுக்கு செயலமர்வு



(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச செயலக பிரிவில் சமூக சேவைகள் அமைச்சின் சி.பி.ஆர்.திட்டத்தின் கீழ் செயலமர்வு ஒன்றுநேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்றது.

பிரதேச செயலர் கோபால பிள்ளை நாகேஸ்வரன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் சி.பி.ஆர். தொண்டர்கள், மாற்றுத்திறனாளிகள், மாற்றுத் திறனுள்ள பிள்ளைகளைக் கொண்ட பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் வளவாளர்களாக் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி வே.தபேந்திரன், மாவட்ட உளவள அதிகாரி தேவராஜா துஸ்யந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாற்றுத் திறனாளிகளின் மேம்பாடு தொடர்பான கருத்துக்கள் கலந்துரையாடல்கள் இச் செயலமர்வில் இடம்பெற்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏனைய 3 பிரதேச செயலர் பிரிவுகளில் இச் செயலமர்வு நடைபெற்றுள்ளது. சமூக சேவைகள் அமைச்சு தலா 20,000 ரூபா வீதம் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிற்கும் ஒதுக்கியிருந்தது. இதே போலவே நாடெங்குமுள்ள பிரதேச செயலகப பிரிவுகளிற்கும் தலா 20,000 ரூபா நிதி ஒதுக்கீட்டை சமூக சேவைகள் அமைச்சு வழங்கியுள்ளது. (90)

# போர்க்கொடி தூக்கும் பெண்கள் வன்முறைக்கு எதிராக கோஷம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் நேற்றுமுன்தினம் பெண்கள் அமைப்புக்கள் மற்றும் பெண் நிலை ஆர்வலர்களினால் பெண்கள் வன்முறைக்கு எதிராக விழிப்புணர்வுப் பிரசார நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணியளவில் யாழ்.நீதிமன்றப் பகுதியில் இருந்து பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் குறிக்கும் பதாதைக்களை ஏந்தியவாறு நூற்றுக்கணக்கான பெண்களும் மற்றும் பெண்நிலை ஆதரவாளர்கள் சிலர் சேர்ந்து பேரணியோடு நடந்து யாழ்.மகாத்மாகாந்தி வீதிவழியாக வைத்திய சாலை வீதியை அடைந்து யாழ்.நகர்வரை இந்தப்பேரணி நகர்ந்து சென்றது.

அண்மைக்காலமாக பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் மாவட்டத்தில் அதிகரித்துக் காணப்படுவதனை அடுத்தே இவ்வாறான பெண்களுக்கெதிரான வன்முறை குறித்த விழிப்புணர்வுப் பிரசாரப் போர் பெண்கள் அமைப்புக்களிலும் பெண்நிலை ஆதரவாளர்களினாலும் முன்னெடுக்கப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (பா)

# கோப்சிற்றியில் திருட்டு

வரணி இடைக்குறிச்சி கோப் சிற்றியில் கடந்த புதன்கிழமை பட்டப்பகலில் முகாமையாளர் தண்ணீர் எடுக்க வெளியே சென்ற சமயம் பார்த்து திருடர்கள் கடைக்குள் உட்புகுந்து பணத்தை திருடிச்சென்றுள்ளனர்.

எனினும் முகாமையாளர் இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸாரிடம் தெரிவிக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்ட சமயம் காணி ஒன்றில் பனை மரத்தடியில் பணம் பையில் இருந்து மீட்கப்பட்டதாகவும் 5 ஆயிரம் ரூபாவை மட்டுமே எடுத்துக்கொண்டு திருடர்கள் தப்பியோடியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் திருடர்களைத் தேடி வலை விரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (150)

# விசேட கூட்டம்

யாழ்.மாவட்ட இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான விசேடகூட்டம் ஒன்று இன்று தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட காரியாலயத்தில் மு.ப. 11 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் இடம்பெற்ற இளைஞர் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்.மாவட்டத்திலிருக்கும் ஒவ்வோரு பிரதேச செயலகத்தினைச்சேர்ந்த வெற்றிபெற்ற உறுப்பினர் ஒருவர் வீதம் 15 உறுப்பினர்களும், 2 செனட் உறுப்பினர்களும் உள்ளனர்.(48,114)

# தம்பாலை - வளலாய் வீதி புனரமைப்பு எப்போது?

(அச்சுவேலி)

தம்பாலைச் சந்தியில் இருந்து வளலாய் சந்திவரையான விமான நிலைய வீதிப்பகுதியானது சேதமடைந்து காணப்படுவதாக பயணிகளால் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீதியானது கடந்த சில காலத்திற்கு முன்னர் புனரமைக்கப்பட்டது. எனினும் தற்போது மீண்டும் பாரிய குண்டு குழிகளுடன் சேதமடைந்து காணப்படுகின்றது. இந்த வீதியினை பாடசாலை மாணவர் முதல் வெளி இடங்களுக்கு தொழில் நிமித்தம் செல்வோர் வரை அநேகமானவர்கள் பயன்படுத்துகின்றனர். எனவே சேதமடைந்து காணப்படுவதால் பயணிப்பதில் தாம் சிரமத்தை எதிர்கொள் வதாகவும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இந்த வீதிப் பகுதிகளில் மின்விளக்குகள் எவையும் பொருத்தப்படவில்லை எனத் தெரிவிக்கும் பயணிகள், இரவு நேரப் பயணமானது ஆபத்து நிறைந்த பயணமாகக் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே குறித்த வீதியினை தரமான முறையில் புனரமைத்து வழங்குவதுடன் வீதி விளக்குகளையும் பொருத்துவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனப் பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (85)



# மைலோ கிண்ணை கால்பந்து
# இறுதிச் சுற்று ஆட்டங்கள் இன்று ஆரம்பம்




(யாழ்ப்பாணம்)

மைலோக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் இறுதிச் சுற்று ஆட்டங்கள் இன்றைய தினம் காலை யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவினரால் முதன் முறையாக நடாத்தப்படும் மைலோ கிண்ணக் கால்பந்துத் தொடரின் யாழ்ப்பாணம், வலிகாமம் லீக் அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டி நேற்றைய தினம் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

காலை நடைபெற்ற முதல் போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியும், நவாலி சென். பீற்றர்ஸ் அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய நாவாந்துறை சென். மேரிஸ் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது போட்டியில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியும், பாசையூர் சென். அன்ரனீஸ் அணியும் மோதின. இரு அணிகளும் சமபலம் கொண்ட அணி என்பதால் இப்போட்டி இரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. இதற்கு அமைவாக இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் ஆடின. இறுதியில் பாசையூர் சென். அன்ரனீஸ் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றது.

மூன்றாவதாக நடைபெற்ற போட்டியில் நாவாந்துறை சென். நீக்கலன்ஸ் அணியும், குருநகர் பாடுமீன் அணியும் மோதின. இதில் முற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளுமே கோல் எதுவும் பெற்றுக்கொள்ளாததுடன் சமபலத்துடன் மோதின. பின்னர் பிற்பாதி ஆட்டத்தில் எழுச்சியுற்ற பாடுமீன் அணி அடுத்தடுத்து இரு கோல்களை அடித்துபோட்டியில் ஆதிக்கம் செலுத்தியது. இறுதியில் குருநகர் பாடுமீன் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றது.

நேற்றைய தினம் இறுதியாக நடைபெற்ற போட்டியில் ஊரெழு றோயல் அணியும், மயிலங்காடு ஞானமுருகன் அணியும் மோதின. இதில் முற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் ஒவ்வொரு கோலைப் போட்டுக்கொண்டது. பிற்பாதி ஆட்டத்தில் விவேகமாகச் செயற்பட்ட ஊரெழு றோயல் அணி அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டுக்கொண்டதுடன் வெற்றியையும் உறுதி செய்தது. இறுதியில் ஊரெழு றோயல் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிச் சுற்றுப் போட்டிக்குத் தகுதி பெற்றது.


இதேவளை, இன்றைய தினம் இறுதிச் சுற்று ஆட்டங்கள் நடைபெறவுள்ளது. இதில் பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக் அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டிகளில் தகுதி பெற்ற அணிகள் மேற்படி அணிகளுடன் மோதவுள்ளன.

இதன்படி குருநகர்பாடுமீன் அணியை எதிர்த்து பொலிகை விண்மீன் அணியும், பாசையூர் சென். அன்ரனீஸ் அணியை எதிர்த்து வல்வெட்டித்துறை வல்வை அணியும், வதிரி டையமன்ஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் அணியும், பருத்தித்துறை கொலின்ஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணியும் மோதவுள்ளன. இப்போட்டிகள் காலை 8.30 மணியிலிருந்து நடைபெறும் எனவும், இப்போட்டிகளில் வெற்றிபெறும் அணிகள் நேரடியாக அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெறும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்போட்டிக்கு நடுவர்களாக யாழ்ப்பாண கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தைச் சேர்ந்தோர் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டி நிகழ்வில் இரசிகர்கள், ஆதரவாளர்கள், விளையாட்டு நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டிகளைக் கண்டுகளித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(எஸ்.பி.)



அமரர் முத்துலிங்கம் ஜெகநாதன் வெற்றிக் கிண்ண கரப்பந்தாட்டத் தொடரின் தொடர் நாயகன் விருதை ஆவரங்கால் இந்து இளைஞர் அணி வீரர் ஜெனற் வென்றார். இவருக்கான விருதை பிரதம விருந்தின ராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத் தலைவர் மனோகரன் வழங்குவதைக் காணலாம். கடந்த ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் ஆவரங்கால் மத்தி அணியை வீழ்த்தி ஆவரங்கால் .இந்து இளைஞர் அணி கிண்ணம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (93)

## 27 ஓட்டங்களால் வென்றது ஸ்ரான்லி

(கொக்குவில்)

வட்டுக்கோட்டை ஓல்ட்கோல்ட் அணிக்கெதிரான போட்டியில் ஸ்ரான்லி அணி 27 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நியூஸ்ரார் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் என்.சி.எல். ருவென்ரி-20 தொடரின் ஆட்டமொன்று கடந்த 8ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஸ்ரான்லி அணி சியாம், கஜதீபன் ஆகியோரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் ஸ்ரான்லி அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சியாம் 34, கஜதீபன் 33, உதயன் 23; செல்வராசா ‹20, றஜீவ்காந் 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கோபிநாத், திலீபன் தலா நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 160 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய வட்டுக்கோட்டை ஓல்ட்கோல்ட் அணி 20 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் குகன் 41, நிரோசன் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் வாசி மூன்று, கஜதீபன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இப்போட்டித் தொடரின் இரண்டாவது சுற்று ஆட்டங்கள் விரைவில் நடைபெறும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (எஸ்.பி.)

## கிரிக்கெட் சபையின் அபிவிருத்திக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கிரிக்கெட் சபையின அனைத்து மாவட்டங்களில் இயங்கும் கிரிக்கெட் சபைக்கான முக்கிய கூட்டம் நாளை காலை 10.00 மணிக்கு அதன் தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ். மாவட்ட கிரிக்கெட் சபையின் தலைவர், செயலாளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். இதன்போது மாவட்டத்தில் கிரிக்கெட் அபிவிருத்தி குறித்தும், குறைபாடுகள் குறித்தும், எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் விவாதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எஸ்.பி.)

விளையாட்டுச் செய்திகள்

## இறுதியில் குருநகர் பாடுமீன்

(உரும்பிராய்)

யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக் தலைவர் வெற்றிக் கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு குருநகர் பாடுமீன் அணி தகுதி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக் அங்கத்துவ அணிகளுக்கிடையில் லீக் தலைவர் கிண்ண கால்பந்தாட்டத் தொடர் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் குருநகர் பாடுமீன் அணியும், உரும்பிராய் திருக்குமரன் அணியும் மோதின.

இப்போட்டியில் ஆரம்பமாகியது முதல்நிறைவு பெறும் வரை முழு ஆதிக்கம் செலுத்தி குருநகர் பாடுமீன் அணி கோல் மழை பொலிந்து இரசிகர்களை குஷிப்படுத்தியது. இறுதியில் பாடுமீன் அணி 7-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. ஏற்கனவே நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் உரும்பிராய் அண்ணாஸ்ரார் அணியை வீழ்த்திய பாசையூர் சென். அன்ரனீஸ் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

நாளை மறுதினம் நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் குருநகர் பாடுமீன் அணியை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனீஸ் அணி மோதவுள்ளது. இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக இலங்கைக் கால்பந்தாட்ட சம்மேளனத் தலைவர் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## இன்றைய ஆட்டங்கள்

இந்திய, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக்கொண்ட ஒரு நாள் தொடரின் இறுதிப் போட்டி இன்றைய தினம் தென்னாபிரிக்காவின் சென்சூரியனில் நடைபெறவுள்ளது. ஏற்கனவே, இரு போட்டிகளிலும் வென்று தென்னாபிரிக்க அணி தொடரைக் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட ருவென்ரி-20 தொடரின் முதல் ஆட்டம் இன்றைய தினம் டுபாயில் நடைபெறவுள்ளது.

மேற்கிந்தியத்தீவுகள், நியூசிலாந்து அணிகளுக் கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி இன்று நியூசிலாந்தின் வெலிங்டனில் ஆரம்பமாகவுள்ளது. முதல் ஆட்டம் சமநிலையில் நிறைவுற்றமை குறிப்பிடத்தக்கது.

## வாக்கார், கில்கிறிஸ்டிற்கு ஐ.சி.சி. கௌரவம்

(டுபாய்)

பாகிஸ்தானின் முன்னாள் கப்டன் வக்கார் யூனிஸ், அவுஸ்ரேலியாவின் முன்னாள் விக்கெட் காப்பாளர் கில்கிறிஸ்ட் ஆகியோர் ஐ.சி.சி.யின் ஹால் ஓ·ப் பேம் கௌரவத்தைப் பெறவுள்ளனர்.

கிரிக்கெட்டில் பல்வேறு சாதனை புரிந்தவர்களுக்கு ஹால் ஓ·ப் பேம் கௌரவத்தை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) 2009ஆம் ஆண்டு முதல் அளித்து வருகிறது. இப்பட்டியலில் இதுவரை 69 கிரிக்கெட் வீரர்கள் சேர்க்கப்பட்டனர்.

தற்போது 70ஆவது நபராக வக்கார் யூனிஸும், 71ஆவது நபராக கில்கிறிஸ்டும் இதில் இணைய உள்ளனர்.

பாகிஸ்தான் - இலங்கை அணிகளுக் கிடையே இன்று நடைபெறவுள்ள ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டியின்போது வக்கார் யூனிஸும், இங்கிலாந்து-அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையே நாளை மறுதினம் நடைபெறவுள்ள 3ஆவது ஆஷஸ் போட்டியின்போது கில்கிறிஸ்டுக்கும் ஹால் ஓப் பேம் கௌரவத்தைப் பெறவுள்ளனர்.

இது குறித்து வக்கார் யூனுஸம், கில்கிறிஸ்டும் மகிழ்ச்சியைத் தெரிவித்துள்ளனர்.

## சீர்செய்யவேண்டும்

இந்திய அணியின் நடுவரிசைத் துடுப்பாட்டம் எவ்வளவு பலவீனமாக இருக்கின்றது என்பதை எடுத்துக்காட்டும் தொடரை தென்னாபிரிக்க அணியுடனான ஒரு நாள் தொடர் அமைந்திருக்கின்றது. எனவே, இதனை சீர் செய்து கொள்ளவேண்டிய பொறுப்பு தேர்வாளர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது என பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர் அக்ரம் தெரிவித்துள்ளார்.

விளையாட்டு செய்திகள்

## தரப்படுத்தலில் முதலிடம் மீண்டும் பிடிப்பதே இலக்கு



(அடிலெய்ட்)

தரப்படுத்தலில் மீண்டும் முதல் இடத்தைப் பிடிப்பதே எமது முக்கிய இலக்கு என அவுஸ்ரேலிய அணிக் கப்டன் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார்.

நாங்கள் ஒன்றும் அதிர்ஷ்டவசமாக இந்த வெற்றியைப்பெறவில்லை. நீண்ட கால கடின உழைப்புக்கு பலன் கிடைத்திருக்கிறது. கடந்த 12 மாதத்தில் எங்கள் அணி பெற்ற 2ஆவது டெஸ்ட் வெற்றி இதுவாகும். அடுத்து வரும் ஆட்டங்களிலும் இதே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஆஷஸ் தொடரை வெல்வதுடன், டெஸ்ட்போட்டி தர வரிசையில் மீண்டும் முதல் இடத்தைப் பிடிப்பதே எங்கள் இலக்காகும். இதற்கு நாங்கள் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். சிறந்த ஆட்டத்தை தொடர வேண்டும் என்பதில் மிகுந்த கவனம் செலுத்துவோம். ஆடுகளம் வேகப்பந்து வீச்சுக்கு சாதகமாக இருக்கும். அதனை எங்கள் வேகப்பந்து வீச்சாளர்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று நம்புகிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சரிவிலிருந்து மீண்டெழுவோம்



(அடிலெய்ட்)

தோல்வியிலிருந்து மீண்டு தொடரைக் கைப்பற்றுவோம் என இங்கிலாந்து அணி கப்டன் குக் தெரிவித்துள்ளார்.

சரிவில் இருந்து மீண்டு வர எங்களுக்கு யாரும் வாய்ப்பு அளிக்க மாட்டார்கள். இருப்பினும் சரிவில் இருந்து மீள முடியாது என்று சொல்ல முடியாது. 0-2 என்ற நிலையில் பின் தங்கி இருப்பது எங்களுக்கு மோசமான நிலை தான். அது எங்களின் மன-வலிமையை குலைத்திருக்கிறது. இந்த நிலையை மாற்ற எங்களால் தான் முடியும். அதற்கு நாங்கள் இமாலய முயற்சி எடுக்க வேண்டியது அவசியமானதாகும். கடந்த காலங்களில் நடந்த சம்பவங்கள் தற்போதைய அணிக்கு பொருந்தாது. கடந்த கால சம்பவங்களை மறந்து சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையுடன் நாங்கள் விளையாட வேண்டும். தோல்விக்கண்டால்விமர்சனங்கள் வரத்தான் செய்யும். அதனை பொருட்படுத்தாமல் நம்பிக்கையுடன் ஆட்டத்தில் கவனம் செலுத்த வேண்டும். எங்கள் அணியில் பல சிறந்த வீரர்கள் உள்ளனர். நல்ல வீரர்களால் மாற்றத்தை கொண்டுவர முடியும். அதனை தான் நாங்கள் செய்ய வேண்டும். கப்டன் என்ற முறையில் எனக்கு இது கடினமான தருணம் தான். நான் உள்பட எல்லோரும் சிறப்பாக விளையாட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தென்னாபிரிக்கா டெஸ்ட் அணி அறிவிப்பு

(டர்பன்)

இந்திய அணியுடனான டெஸ்ட் தொடரில் மோதவுள்ள தென்னாபிரிக்க அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியா - தென்னாபிரிக்க அணிகளிடையே தற்போது 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெற்று வருகின்றது. இதைத் தொடர்ந்து இரு அணிகளும் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் மோதவுள்ளன. முதல் டெஸ்ட் போட்டி, ஜோகனஸ்பேர்க் நியூ வாண்டரர்ஸ் மைதானத்தில் எதிர்வரும் 18ஆம் திகதியும் 2ஆவது டெஸ்ட் டர்பன் கிங்ஸ் மீட் மைதானத்தில் எதிர்வரும் 26ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. இந்த போட்டிகளுக்கான தென்னாபிரிக்க அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. ஸ்மித் தலைமையில் மொத்தம் 15 வீரர்கள் அடங்கிய அணி தேர்வு செய்யப்பட்டுள்ளது. சமீபத்தில் ஐக்கிய அரபு நாடுகளில் பாகிஸ்தான் அணிக்குஎதிராக நடந்த டெஸ்ட் தொடரில் விளையாடிய அணியில் மாற்றம் ஏதும் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அணி விபரம்: ஸ்மித் (கப்டன்), அம்லா, டி வில்லியர்ஸ் (விக்கெட் காப்பாளர்), டுமினி, டு பிளிசர்ஸ், டீன் எல்கார், இம்ரான் தாஹிர், கலிஸ், ரோரி கிளெய்ன்வெல்ட், மோர்க்கல், அல்விரோ பீற்றர்சன், ரொபின் பீற்றர்சன், பிளிண்டர், ஸ்ரெய்ன், சோல-கைல் (விக்கெட் காப்பாளர்).

## ஒன்றரை மில்லியன் டொலர் ஏலம் போன பதக்கம்

மிகவும் சர்ச்சைக்குரிய பெர்லின் ஒலிம்பிக் போட்டிகளில் அமெரிக்க தடகள வீரர் ஜெஸ்ஸி ஓவன்ஸ் வென்ற ஒரு தங்கப் பதக்கம் சுமார் ஒன்றரை மில்லியன் டொலருக்கு ஏலம் போயுள்ளது.

1936ஆம் ஆண்டு, ஜேர்மனி ஹிட்லரின் ஆட்சியின் கீழ் இருந்தபோது, நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் கறுப்பின அமெரிக்கரான ஜெஸ்ஸி ஓவன்ஸ் நான்கு தங்கப் பதக்கங்களை வென்றார். அந்த ஒலிம்பிக் போட்டியில் அவர் ஆடவருக்கான 100,200 மீற்றர் ஓட்டங்களில் மட்டுமல்லாமல், 400 மீற்றர் தொடரோட்டம் மற்றும் நீளம் தாண்டுதல் ஆகியவற்றிலும் தங்கப் பதக்கம் வென்றார்.

அந்தப் பிரிவுகளில் ஜேர்மனி வீரர்கள் வெள்ளிப் பதக்கமே பெற முடிந்தது.


ஒரு தனி மனிதராக, ஆரிய மேலாதிக்கதை அவர் தகர்த்தெறிந்தது ஹிட்லரை பெரிதும் கோபாவேசத்துக்கு உள்ளாக்கியது.

பெர்லின் ஒலிம்பிக் போட்டியில் ஓவன்ஸ் நான்கு தங்கப் பதக்கங்களை வெல்வதற்கு முன்னர், வேறு எவரும் அப்படியொரு சாதனையை படைத்தது இல்லை. அவ்வகையில் அந்தச் சாதனை 1984 ஆம் ஆண்டு லாஸ் ஏஞ்சலஸ் ஒலிம்பிக் போட்டியில் கார்ல் லீவிஸ் சமன் செய்யும் வரை தனிப்பெரும் ஒரு சாதனையாக திகழ்ந்தது.

இணையத்தளத்தின் மூலம் விறபனையான இந்தப் பதக்கம் மட்டுமே அவர் பெற்ற நான்கில் இப்போது இருக்கும் ஒன்றே ஒன்று. எனினும் இப்போது விற்பனையாகியுள்ள அந்தப் பதக்கம் அவர் எந்தப் போட்டியில் வென்றது என்பது தெரியவில்லை.

நிலக்குத்தகைதாரரின் மகனும், ஒரு அடிமையின் பேரனு-மான அவர் 1936 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் நான்கு தங்கப் பதக்கத்தை வென்ற பிறகு நாடு திரும்பிய பிறகும், நிற வெறிக் கொள்கை காரணமாக புறக்கணிக்கப்படுவதும், வேலைக்காக சிரமப்படும் நிலையும் ஏற்பட்டது.

அந்த ஒலிம்பிக் போட்டிகளில் நான்கு தங்கப் பதக்கங்களை வென்று நாடு திரும்பினாலும், அடுத்த மூன்றாண்டுகளில் திவாலாகிவிட்டதாக அவர் அறிவிக்கும் நிலை ஏற்பட்டது.




அவர் மிகுந்த சிரமத்தில் இருந்தபோது அவரை ஆதரித்த தனது நெருங்கிய நண்பரும் நடனக் கலைஞருமான பில் போஜாங்கில்ஸ் ராபின்சனுக்கு அன்பளிப்பாக கொடுத்தார். அந்தப் பதக்கமே இப்போது கலி·போர்னியாவில் ஏலம் போயுள்ளது.

ஒலிம்பிக் போட்டிகள் தொடர்பான ஒரு நினைவுப் பொருள் இந்த அளவுக்கு அதிக தொகைக்கு இதுவரை ஏலத்தில் சென்றதில்லை.

## அபராதம்




அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் மிச்சல் ஜோன்சன் மற்றும் இங்கிலாந்து அணியின் சகலதுறை ஆட்டக்காரர் பென் ஸ்ரோக் ஆகியோருக்கு அபராதம்விதிக்கப்படவுள்ளதாக சர்வதேச கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இரண்டாவது ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின்போது இருவரும் மிக மோசமாக நடந்துகொண்டனர்.

இது சர்வதேச கிரிக்கெட் சபையின் கோட்பாடுகளை மீறும் செயல் என்பதால் குறித்த வீரர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

# போரில் இறந்தவர்களை நினைவுகூரலும் நல்லிணக்கமும்

- எம்.எஸ்.எம். ஐயூப் கட்டுரையிலிருந்து.



போர் முடிவடைந்து இரண்டு வருடங்களாக புலிகளின் மாவீரர் தினம் வட பகுதியில் வெளிப்படையாககொண்டாடப் பட்டதாகத் தெரியவில்லை. தமிழ் ஊடகங்களும் அக்காலத்தில் அதனை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் கடந்த இரண்டு வருடங்களாக தமிழ்ப்பத்திரிகைகள் வட பகுதியில் இது தொடர்பாக இடம்பெற்ற பல நிகழ்வுகளை அறிக்கையிட்டுள்ளன.

இவ் வருடமும் புலிகளின் மாவீரர் தினம் தொடர்பாக சில சர்ச்சைகள் எழுந்தன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஸ்ரீதரன் நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது புலிகளை யும் அவ்வமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனையும் பாராட்டிப் பேசினார். அவரது உரையை தாம் அங்கீகரிக்க வில்லை என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் பின்னர் டெய்லி மிரர் பத்திரிகைக்குக் கூறியிருந்தார்.

வட மாகாண முதலமைச்சர் யாழ்ப்பாணத்தில் வட மாகாண கல்வி அமைச்சு வளாகத்தில் புலிகளின் மாவீரர் தினத்தை முன்னிட்டு மர நடுகையில் ஈடுபட்டதாக செய்திகள் கூறின. ஆனால் அவர் சட்டம் தெரிந்த வர் என்பதால் அவரது உரை 2009ஆம் ஆண்டு தமிழீழ விடுதலை புலிகளுக்கு எதிரான அரச படைகளின் பொதுவான தோர் நிகழ்வில் நிகழ்த்தப்பட்டதைப் போன்ற தாகவே அமைந்திருந்தது.

அவர் புலிகளை பாராட்டிப் பேசியிருந்தால் பல தமிழர்கள் அதைப் பற்றி மகிழ்ச்சியடைந்தி ருப்பார்கள். அதைப் போலவே அரசாங்கமும் மகிழ்ச்சியடைந்திருக்கும். ஏனெனில் அவர் பிரிவினைக்கு எதிராக செய்து கொண்ட சத்தியப்பிர மாணத்தை மீறினால் மாகாண சபையை கலைத்து விட அரசாங்கத்திற்கு சட்ட அதிகாரம் கிடைத்துவிடும்.

இந்த விடயத்தை தென் பகுதி மக்களும் அரசியல்வாதி களும் எவ்வாறு அணுகுகிறார் கள் என்பதை தமிழ் தலைவர் களும் தமிழ் மக்களும் அறிந் திருப்பது முக்கியமாகும். புலிகள் வட பகுதியை நிர்வ கித்த காலத்தில் இருந்த நிலை மையையும் புலிகள் வட மாகா ணத்தை மட்டுமாவது கைப் பற்றிக் கொண்டு தமிழீழத்தை பிரகடனப்படுத்தியிருந்தால் ஏற்பட்டு இருக்கக்கூடிய நிலை மையையும் புலிகளின் செயற் பாடுகளினால் கொல்லப்பட்ட தமிழ் மக்களின் எண்ணிக்கை யையும் தற்போதைய வட பகுதி நிலைமையோடு ஒப்பிடும் சில சிங்கள ஊடகங்கள் தமிழ் மக்கள் புலிகளுக்கு மீண்டும் உயிர் கொடுத்து மீண்டும் போர் காலத்தை அடைய விரும்புகிறார்களா என்று கேள்வி எழுப்புகின்றன.

உண்மையிலேயே போர் காலத்தில் நிலவியதைப் பார்க்கிலும் இன்றைய வட பகுதி நிலைமை நல்லது தான். இப்போது புலிகள் தமது பிள்ளைகளை போருக்காக பிடித்துச் செல்வார்கள் என்று மக்கள் அச்சப்படத் தேவையில்லை. விமானப் படை கண்மூடித்தனமாக குண்டுகளைப் போட்டு தாம் குடும்பத்தோடு அழிந்து விடுவோமோ என்று மக்கள் பயப்படத் தேவையில்லை.

போரில் புலிகள் வெற்றி பெற்றிருந்தால் ஏற்பட்டு இருக்கக்கூடிய நிலைமையை எவராலும் விவரிக்க முடியாது. தமிழ்த"தேசிய கூட்டமைப்பு உட்பட தற்போதைய தமிழ் அரசியல்வாதிகள் அவ்வாறான தோர் நிலைமையை விரும்பு வார்கள் என்று கூறவும் முடியாது. ஆயினும் புலிகள் போரில் தோல்வியடைந்ததை தமிழ் மக்களும் தமிழ் அரசியல்வாதி களில் பலரும் விரும்பவில்லை.

புலிகளின் நிர்வாகத்தை விரும்பாதவர்களும் அதை விட அரசாங்கம் தமிழ் மக்கள் விடயத்தில் நடந்து கொள்ளும் முறையை விரும்பாமையே அதற்குக் காரணமாகும். வட பகுதியில் வீதிகள் நிர்மாணிக் கப்பட்டு, தொலைத்தொடர்பு சேவைகள் ஆரம்பிக்கப்பட்டு, பாடசாலைகள் புனரமைக்கப் பட்டு, மருத்துவமனைகள் அபிவிருத்தி செய்யப்பட்டு பல துறைகளில் மேம்பாடு காணப்படுவதை எவராலும் மறுக்க முடியாது.

ஆனால் அங்கு மக்கள் அரசாங்கத்தை தமது அரசாங்க மாக மதிக்கத் தயாராக இல்லை. அவர்கள் கடந்த மாகாண சபைத் தேர்தலின் போது அந்தச் செய்தியைத் தான் அரசாங்கத்திற்கு வழங்கி னார்கள். இதைத் தான் தென் பகுதியில் பலரால் விளங்கிக் கொள்ள முடியாமல் இருக்கிறது.

இந்த நிலையில் தான் அவர் கள் புலிகளின் மாவீரர் தினத்தை நினைவுகூருவதை ஆச்சரியத் தோடு நோக்குகிறார்கள்.

வட பகுதி மக்கள் போரில் இறந்த தமது பிள்ளைகளை நினைவுகூர உரிமை இருக்க வேண்டும் என்று பல தமிழ் அரசியல்வாதிகள் வாதிடுகிறார்கள். இதனை வட பகுதியில் கடமையாற்றும் இராணுவ அதிகாரிகளும் நிராகரிக்க முடியாத விடயமாக இருக்கிறது. ஏனெனில் ஒருவருக்கு என்ன குற்றத்தை செய்தாலும் தமது பிள்ளை பிள்ளையே என்ற உண்மையை அவர்களாலும் நிராகரிக்க முடியாது. எனவே மக்கள் தமது பிள்ளைகளுக்காக தீபமேற்றலாம், ஆனால் அதனை பகிரங்கமாக செய்ய முடியாது என கடந்த வருடம் மூத்த இராணுவ அதிகாரிகள் கூறினர்.

நவம்பர் 27 ஆம் திகதி இந்த நினைவுகூரல்கள் இடம்பெறுவதனாலேயே இந்த விடயத்தில் மோதல் ஏற்படுவதற்குக் காரண- மாக இருக்கிறது. ஏனெனில் புலிகள் போரில் இறந்த தமது இயக்கத்தின் முதலாவது போராளியான சங்கரின் இறந்த தினமான நவம்பர் 27 திகதியையே மாவீரர் தினமாக பிரகடனப்படுத்தியிருந்தனர். அது தமிழீழத்திற்காக உயிர்த் தியாகம் செய்த முதலாவது போராளி இறந்த நாளும் அல்ல. தமிழீழத்திற்காக உயிர்த் தியாகம் செய்த முதலாவது போராளியான உரும்பிராய் சிவகுமாரன் 1974ஆம் ஆண்டு யூன் மாதம் 5ஆம் திகதியே இறந்தார். எனவே நவம்பர் 27 என்பது புலிகள் இயக்க போராளி களை நினைவுகூருவதற் காகவே ஒதுக்கப்பட்ட நாளாகும். எனவே போரில் பிள்ளைகளை இழந்தவர்கள் அப் பிள்ளைகள் இறந்த தினங்களில் அவர்களை நினைவுகூராது நவம்பர் 27 ஆம் திகதியே நினைவு கூருவதே அரசாங்கத்திற்கு பிரச்சினையாகத் தெரிகிறது.

இரண்டு கிளர்ச்சிகளில் ஈடுபட்ட மக்கள் விடுதலை முன்னணி தமது போராளிகளை பகிரங்கமாகவே நினைவுகூர முடியும் என்றால் புலிகளை நினைவுகூருவதில் என்ன தவறு இருக்கிறது என்று தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் சுரேஷ்பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியிருந்தார்.

ஆனால் தமிழகத்திலேயே புலிகளின் மாவீரர் தின நிகழ்வு கள் தடுக்கப்பட்டு இருக்கும் நிலையில் இலங்கை அரசாங் கத்திடம் அவ்வாறானதோர் நிலைமையை எதிர்பார்க்க முடியாது.

இது ஒரு உணர்வு பூர்வ மான பிரச்சினையாகும். எனவே தான் போரில் இறந்த சகலரை யும் நினைவுகூர பொதுவான தோர் தினத்தை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும் என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பி னர் ஆர். யோகராஜன் கூறி யிருக்கிறார். இது உணர்வு

## அசத்தல் பரிசு கொடுத்த காதலன்!



மனசுக்குப் பிடித்த பெண்ணுக்கு, விதம் விதமான பரிசுகளை வாங்கித் தர, காதலர்கள் விருப்பப்படுவது வழ மைதான். ஆனால் சீனாவைச் சேர்ந்த ஒரு காதலர், தன் காதலிக்கு பரிசு அளித்த விதத்தைக் கேட்டால், ஆச்சரியப்படுவீர்கள்.

மெங் குவாங், (27) என்ற இளைஞர், லின்சன் என்ற பெண்ணை, சில ஆண்டுகளாக காதலித்து வந்தார். சமீபத்தில் தான், இவர்களின் திருமணத்துக்கு பெற்றோரின் சம்மதம் கிடைத்தது. இந்த மகிழ்ச்சியைக் கொண்டாடும் வகையில், அழகான, 18 கூடை- களை வாங்கி, அவற்றில், பணத்தை நிரப்பி, பரிசுப் பொருட்களை அலங்கரிப்பதற்காக கட்டும், ரிப்பன்களை கட்டி விட்டார்.

பின், இந்த 18 கூடைகளையும், காத லியின் வீட்டுக்கு கொண்டு செல்வதற்காக, 18 ஊழியர்களை அமர்த்தினார். ஊழியர்கள், அந்தக் கூடைகளை, லின் சன்னிடம் கொடுத்ததும், லின் சன் மட்டுமல்ல, அந்த சுற்று வட்டாரப் பகுதியிலிருந்த அனை- வருமே, ஆச்சரியப்பட்டனர்.

அந்தக்கூடைகளில் இருந்த பணம் எவ்வளவு தெரியுமா? 22 கோடி ரூபா. இதுகுறித்த செய்தி, பத்திரிகைகளில் வெ- ளியாகியதும், சமூக ஆர்வலர்கள், கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். "இவர், அந்தப் பெண்ணை, திருமணம் செய்து கொள்ளப் போகிறாரா அல்லது விலை கொடுத்து வாங்குகிறாரா..." என, கண்டனக் குரல் எழுப்பியுள்ளனர்.

## வில்லியம் வீவர்: அஞ்சலி

உம்பர்ட்டோ ஈக்கோவையும் இடாலோ கால்வினோவையும் இத்தாலியில் இருந்து ஆங்கிலத்திற்கு அழைத்து வந்தவர் மறைந்து விட்டார். அவருக்கு வயது தொண்ணூறு. தட்டச்சத் தெரிந்தவர் எல்லாம் மொழிமாற்றுபவர் என்று இயங்கி வந்த காலத்தை மாற்றி இலக்கிய அனுபவமும் சொற்செறிவும் கொண்ட மொழியாக்கங்களை கொடுப்பவர் மொழிபெயர்ப்பாளர் என்னும் நிலைக்கு உயர்த்தியவராக வில்லியமைக் கொண்டாடுகிறார்கள். தன்னுடைய அசல் புத்தகத்தை விட மொழிபெயர்ப்பு சிறப்பாக இருந்ததாக உம்பர்ட்டோ ஈக்கோ புகழாரம் சூட்டியிருக்கிறார்.

மொழிபெயர்ப்பில் உள்ள சிரமங்களைப் பகிர்கையில் "பெரிய வார்த்தைகளையும் கடினமான சொற்றொடர்களையும் ஆங்கிலத்தில் கொணர்வது பிரச்சினையேயில்லை. எளிமையான "buon giorno"வை எப்படிச் சொல்லுவது? "உங்கள் நாள் நல்ல நாளாக அமையட்டும்" என்று சொன்னால் துருத்திக் கொண்டு நிற்கிறதே!" என்கிறார். அதே போல் மூல மொழியின் சுடுசொற்களைப் போல் ஆங்கிலத்தில் கெட்ட வார்த்தைகளுக்கான வளம் இல்லாததும் குறையாக உணர்ந்திருக்கிறார். இருபத்தைந்து வயதிற்குப் பிறகுதான் இத்தாலிய மொழியைக் கற்றுக் கொண்டு மொழிபெயர்ப்பில் ஆர்வம் செலுத்தத் துவங்கிய வில்லியம் வீவர், பின்னரான 65 வருடங்களிலும் ஏராளம் நூல்களை ஆங்கிலத்திற்குக் கொண்டுவந்து சேர்த்த பெருமைக்குரியவர்.



# சோமாலியா கொள்ளையர்களும் தமிழ் இலக்கியமும் 2

– என்.சந்தோஷ்

தலைவன் குனிந்து இன்னொரு புத்தகத்தை எடுத்தான் "இது என்ன" என்பது போல இவனை நோக்கி தலையை மேலும் கீழும் அசைத்தான். ஜெய் லேசாக எட்டிப் பார்த்து விட்டு சொன்னான் "இது சீரோ டிகிரி" "இவரு யாருப்பா கூலிங்கிளாஸ், காதுல ஸ்டட் எல்லாம் போட்டுக்கிட்டு" என்றான். ஜெய் வாய் திறப்பதற்குள் கொள்ளையர்களில் ஒருவன் சொன்னான் "இவர் சாருநிவேதிதா பாஸ்"

"ஹேய் உனக்கு எப்படி தெரியும்?"

"பாஸ் போன வரு'ம் டெல்லியில ஒரு



இன்டர்நேஷனல் எழுத்தாளர்கள் மீட்டிங் நடந்திச்சில்ல. அதில் நான் ஒரு சோமாலிய எழுத்தாளருக்கு டுப் போட்டு கலந்து கிட்டேன். அங்க தான் இவரை சந்திச்சேன். சோமாலியாவுல ஒட்டகப்பாலில தயாரிக்கிற சினோ அவருக்கு பிடிச்ச பானம் என்று அவரு சொல்லி தான் எனக்கே தெரிஞ்சுது பாஸ்." தலைவன் சீரோ டிகிரியை தூக்கிப் பிடித்து இந்த புக்கை பற்றி ஏதாவது தெரியுமா என்றான். "பாஸ் இதோட இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு என்கிட்ட இருக்கு. ஒரு மாதிரி நான் லீனியர் ரைட்டிங்" என்றான். "அப்டின்னா" புருவத்தையும் புத்தகத்தையும் ஒரே சமயத்தில் தூக்கியபடி தலைவன் கேட்டான்.

"அது வந்து பாஸ். இப்போ ஒரு கப்பல்ல நாம கொள்ளை அடிக்கப் போறோம்னு வச்சுக்குங்க அந்த கப்பலோட எந்த பக்கத்தில இருந்தும் உள்ள நுழை-யலாம் இல்ல. எப்படி வேணுமானாலும் நுழையலாம் இல்ல. ஆனா கொள்ள அடிக்கிறது தான் முக்கியம் அது மாதிரி தான் பாஸ். முதல் அத்தியாத்தில நுழைஞ்சும் படிக்கலாம் மூணாம் அத்தியாயத்தில நுழைஞ்சும் படிக்கலாம். பின்னாடி இருந்து முன்னாடி கூட படிக்கலாம்."

தலைவன் டயர்டாகி "வேற என்னப்பா இதுல மேட்டர் இருக்கு" என்றான்.

இந்த கேள்விக்கு ஜெய் வாய் விட்டு சிரித்தான். "பாஸ் அவரு சாதாரண ஆளு இல்ல பாஸ். நம்ம சோமாலிய எழுத்தாளர் நுரு-தின் ஃபாரா பற்றி கூட ஒரு மணி நேரம் பேசிட்டு இருந்தாரு. அவரு பேரையே நான் அப்போ தான் கேள்விப்பட்டேன் தெரியுமா. சாரு இஸ் கிரேட் என்று பெருமைப்பட்டுக் கொண்டான் தலைவன்.

ஆர்வம் மேலிட தலைவன் இன்னொரு புத்தகத்தை எடுத்துப் பிரித்தான். "இது யாருப்பா" என்றான். "எஸ்.ராமகிருஷ்ணன்" என்றான் ஜெய். "உலக சினிமா பற்றி ஒரு புத்தகம் எழுதி இருக்காரே அவரா" என்று தலைவனே கேட்டான். ஜெய் அப்படியே ஷாக் ஆயிட்டான்.

"பாஸ் உங்களுக்கு எப்டி தெரியும் பாஸ்" என்றான் ஒரு பொடியாளாய் இருந்த இன்னொரு அடியாள்.

"மூணு நாலு வருஷம் முன்னர் அவரை நான் மீட் பண்ணிருக் கேன்பா" என்று ஆரம்பித்தான் பாஸ். பொறுமையில்லாமல் ஜெய் கேட்டான் "எஸ்ராவையா? நீங்களா? எங்கே மீட் பண்ணினீங்க"

ஏன் இந்த அவசரம் என்பது போல தலைவன் ஜெய்யை உற்றுப் பார்த்துவிட்டு தொடர்ந்தான் "உங்க ஊரில் ஆனந்த விகடம்னு ஒரு மேகசின் வருதா"

"விகடம் இல்ல விகடன்" திருத்தினான் ஜெய். முகத்தில் சற்று பெருமிதம் காட்டிக் கொண்டான், ஏன் என்று அவனுக்கே தெரியவில்லை.

"ஏதோ ஒண்ணு தம்பி. இப்படி குறுக்க குறுக்க பேசாதீங்க. எனக்கு மறந்து போவும். ஆங்.. ஆனந்த விகடன்ல தேசாந்திரின்னு ஒரு பத்தி எழுதினாராம் இல்ல."

"எங்க ஊரில பத்தின்னா ரெண்டே ரெண்டு தான் பேமசு. ஒண்ணு சைக்கிள் அகர்பத்தி இன்னோண்ணு எஸ்ரா பத்தி மேல சொல்லுங்க" என்றான் ஜெய்.

"பயம் விட்டுப் போச்சு." என்று சற்று முறைத்து விட்டு, விட்ட இடத்தில் தொடர்ந்தான் தலைவன்.

"அவரு தேசாந்திரி எழுதிட்டு இருந்தாரா அந்த அனுபவங்களுக் காக கால் நடையாவே இந்தியா முழுக்க சுத்த ஆரம்பிச்சிருக்காரு. கோவில்பட்டியில கடலை மிட்டாய்க்கு பாகு காய்ச்சுறவன்ல ஆரம்பிச்சு சென்னை ட்ரெயின்ல பிளாஸ்டிக் முகமூடி விக்கிறவன், பம்பாய்ல வாட்ச் மிட்டாய் செய்யுறவன், காசியில பிச்சை எடுக்கிற தாத்தா, கல்கத்தாவுல கைவண்டி இழுக்கிற வங்காளி, காஷ்மீர்ல குல்லா செய்றவன், கராச்சியில கபாப் போடுறவன் வரைக்கும் விளிம்பு நிலை மக்கள் கிட்ட நெருக்கமா பேசி தன் அனுபவங்களை உருக்கமா எழுதி அந்தந்த ஊரில இருந்தே விகடனுக்கு தபால்ல அனுப்பிடு வாராம். அப்டியே விளிம்புநிலை மக்கள் கிட்ட பேசிக்கிட்டே பொடி நடையா நடந்தவர் சோமாலியா வரைக்கும் வந்துட்டார்னா பாத்துக்கோயேன்" என்று நிறுத்தி னான் தலைவன் "கோயேன்" என்று முடித்த இடத்தில் ஒரு அழுத்தம் இருந்தது. தலைவனின் கண்கள் ததும்புவதை பார்த்ததும் "சிறுத்தை அழுவது போல" என்று எஸ்ரா ஸ்டைலில் கவித்துவமான ஒரு வாசகம் ஜெய்கிருஷ்ணனின் மனதுக்குள் ஓடி மறைந்தது.

கொள்ளையர்களில் சிலரும் ரகசியமாக கண்ணீரை துடைத்துக் கொண்டு விம்முவதை ஜெய் கவனித்தான். எங்கும் லேசான சோகம் பரவுவதை உணர்ந்த ஜெய் கொள்ளையர்களின் சோகத்தை கலைக்க எண்ணியவன் போல "சரி சரி அவரு தேசாந்திரி மட்டும் எழுதவில்லை உங்களை மாதிரி திருடர்களைப் பற்றி கூட ஒரு நாவல் எழுதி இருக்கார்" என்றான்.

"சொல்லவே இல்ல" என்பது போல தலைவன் பார்த்தான்.

"நெடுங்குருதின்னு ஒரு நாவல். உங்களை மாதிரி கள்வர்களை பற்றிய கதை தான் அது. வேம்ப லைன்னு ஒரு கிராமமே திருடர்கள் கிராமம் தான் கதையில தெரியுமா" என்றான்.


இப்போது தலைவனுக்கு பெருமையாக இருந்தது. "பேசாம அவரை கடத்திட்டு வந்து நம்மள பற்றி ஒரு நாவல் எழுத சொல்ல லாமா" என்று ஒரு அடியாள் கேட்டான்.

"எதுக்கு தேசாந்திரி பார்ட் டு எழுத சொன்னா அவரே ஆட்டோமேட்டிக்கா இன்னொரு வாட்டி இங்கே வந்திட போறாரு" என்றான் இன்னொருவன்.

தலைவன் முறைத்தான்.


(தொடரும்)

# சொன்னார்கள்....









நீங்கள் உயரமாக இருக்கிறீர்கள்.. உங்களுக்கு வரும் மாப்பிள்ளையும் உயரமாகத்தான் இருக்க வேண்டுமா? என்று என்னிடம் கேட்கிறார்கள். உயரத்தை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தால் திருமணமே நடக்காது என அவர்களுக்குப் பதில் சொல்கிறேன். ஆறு அடி உயரம் உங்களுக்கு ப்ளஸ்ஸா? மைனஸா? என்றும் கேட்கிறார்கள். என் உயரம் 6 அடி இல்லை. 5.6 அடிதான் என் உயரம். 6 அடிக்கு பல அங்குலங்கள் குறைவாகவே இருக்கிறேன். உயரம் குறைந்த நடிகர்களுடன் என்னை ஜோடி சேர்க்க முடியாமல் இயக்குநர்கள் தயக்கம் காட்டுகிறார்களா என்றும் கேட்கப்படுகிறது. என்னைப் பொறுத்தவரை உயரமான ஹீரோவா, குள்ளமான ஹீரோவா என்று பார்த்து நடிப்பதில்லை. கதையும், எனது கதாபாத்திரமும் பிடித்திருந்தால் படங்களை ஏற்றுக் கொள்கிறேன்.

**- அனுஷ்கா**

லிங்குசாமி இயக்கத்தில் சூர்யா நடிக்கும் புதிய படத்தின் படப்பிடிப்புக்கு, ரெட் ட்ராகன் என்ற கமராவை பயன்படுத்துகிறேன். உலகிலேயே முதன் முறையாக இந்தக் கமரா கையாளப்படுவதால் ஹொலிவுட் தொழில்நுட்பக் கலைஞர்கள் பயிற்சி தருவதற்காக மும்பைக்கு வந்துள்ளனர். படத்துக்கு நான் ஒளிப்பதிவு செய்ய வேண்டும் என்பதும், ரெட் ட்ராகன் கமரா கையாளப்பட வேண்டும் என்பதும் சூர்யாவின் விருப்பம். இந்தக் கமரா ஓர் இடத்தில் வாங்கப்பட்டதல்ல. பல இடங்களில் வாங்கப்பட்ட உபகரணங்களைக் கொண்டு முறைப்படி புதிதாக இணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 6 கே துல்லியத்தில் காட்சிகளைப் படமாக்க முடியும். காட்சித் தெளிவில் இப்போது இந்த கமராதான் சிறந்ததாகக் கருதப்படுகிறது.

**- ஒளிப்பதிவாளர் சந்தோஷ் சிவன்**

2000இற்கு முன்பு இருந்த சூழல் வேறு. தமிழ் சினிமாவே அதன் பின்புதான் நிறைய மாற்றங்களைக் கண்டிருக்கிறது. 2000இற்கு பின்புதான் உலக சினிமாக்களின் திருட்டு டி.வி.டி., சென்னை பர்மா பஜாரில் சுலபமாகக் கிடைக்க ஆரம் பித்தது. அதுதான் தமிழ் சினி மாவின் போக் கையே சுத்தமாக மாற்றி விட்டது. இந்த காலக் கட்டத்தில் உருவான சில படங்கள் சொல்லப்பட்ட விதத்துக்கு உலக சினிமாக்களின் தாக்கம்தான் பெரிய காரணம்.

இப்போது வந்திருக்கிற குறும்பட உலகம் தமிழ் சினி மாவை வேறு திசைக்கு அழைத்துச் சென்றிருக்கிறது. யாரிடமும் உதவியாளராக இல்லாத இளைஞர்கள் இயக்குநர்களாக அவதாரம் எடுக்கிறார்கள். பல வருடமாக உதவி இயக்குநர்களாக இருப்பவர்களிடம் எதிர்காலத்தைப் பற்றி பயம் இருக்கும். அது இப்போது வருகிற இயக்குநர்களிடம் இல்லை. தைரியமாக மோதி ஜெயிக்கிறார்கள். இது நல்லதா? கெட்டதா? என்று தெரியவில்லை. நான் அதை அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

**- இயக்குநர் சிம்புதேவன்**

தலைமுறைகள் படத்தில் நான் தாத்தா வேடத்தில் நடிக்கிறேன். கொஞ்சம் தமிழ் பேசி, நிறைய ஆங்கிலம் பேசும் பேரன், ஓரிரு வார்த்தை மட்டுமே, ஆங்கிலம் பேசும் தாத்தா. இவர்களுக்கிடையிலான நேச உணர்வின் நெகிழ்ச்சியை, படம் பிடித்திருக்கிறேன். இத்தனை ஆண்டுகளாக உங்களின் அடையாளமாக இருந்து வரும் தொப்பியைக் கழற்றி விட்டு நடித்தீர்களே என்று கேட்கிறார்கள். எனது அடையாளம் தொப்பியல்ல. எனது படைப்புகளே.

எல்லா வகையிலும், நாம் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம். கலாசாரம், தொழில்நுட்ப ரீதியாக யாருக்கும் நாம் குறைந்தவர்கள் அல்ல. அதனால்தான் ஈரான், இத்தாலி, பிரான்ஸ் படங்களைப் பார்த்து, நம்மவர்கள் வாயைப் பிளந்து நிற்கிற நிலையை மாற்றி, நம் படங்களைப் பார்த்து, அவர்களை வாய் பிளக்க வைக்க வேண்டும் என்ற வைராக்கியத்துடன் இந்த "தலைமுறைகள்" படத்தை எடுக்கிறேன்.

என் மூன்றாவது படமான மூடுபனியில், இளையராஜாவுடன் இணைந்தேன். அது அவருக்கு, 100ஆவது படம். அவரிடம், எதுவும் கேட்டு வாங்க வேண்டியதில்லை. படத்தின் தன்மையை உணர்ந்து கொண்டு, தேவையான இசையை கொடுத்து விடுவார். அவருக்கு இணையான அற்புத இசையை, வேறு யாராலும் கொடுக்க முடியும் என்று, எனக்குத் தோன்றவில்லை. அதனால், அவரை எக்காரணம் கொண்டும், நான் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. நான் வாழும் காலங்கள் வரை எனது படங்களுக்கு என் நண்பன் இளையராஜாதான் இசையமைப்பார். என் மௌனத்தின் மொழி அன்று முதல் இன்று வரை அவருக்கு மட்டுமே தெரியும்.

**- பாலு மகேந்திரா**

# பெண்களுக்கெதிரான வன்முறை

# கிளிநொச்சியில் விழிப்புணர்வு பேரணி




பெண்களுக்கெதிரான வன்முறையை ஒழிக்கும் வாரத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டத்தில் விழிப்புணர்வு பேரணி, வீதி நாடகம், கருத்துரைகள் என்பன கடந்த ஞாயிற்றுக்கிழமை முழு நாள் நிகழ்வாக நடைபெற்றன.

இவ் வருடம் நவெம்பர் 25 ஆம் திகதி முதல் டிசம்பர் 10ஆம் திகதி வரையும் பெண்களுக்கெதிரான வன்முறையை ஒழிக்கும் வாரமாக நாடு முழுவதும் கடைப்பிடிக்கப்பட்டு வந்தன.

அதன் ஒரு பகுதியாக பாலியல் பலாத்காரம் சார்ந்த விடயங்களை தாங்கிய ஊர்தி நாடெங்கும் பவனி வந்து கொண்டிருந்தது.

இவ் ஊர்தி முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து பரந்தன் வந்து கடந்த ஞாயிற்றக்கிழமை கிளிநொச்சிக்கு வந்தது.

யாழ் கண்டி வீதி வழியாக கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திற்கு வந்த ஊர்தி மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரனிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

மகஜரைக் கையேற்ற மாவட்டச் செயலாளர் கூறுகையில், பெண்களுக்கெதிரான வன்முறையைத் தடுக்கும் இவ் ஊர்தி சமூகத்திற்கு நல்ல செய்தியைச் சொல்கிறது. எமது சமூகத்தில் பெண்களுக்கு, இழைக்கப்பட்டு வரும் அநீதியைத் தட்டிக் கேட்கும் செய்தியை வழங்கும் இது போன்ற ஊர்திகள் காலத்தின் தேவையாக உள்ளது. மனித குலத்தின் மனச்சாட்சிய்யைத் தட்டி எழுப்பும் செய்தியையும் இவ் ஊர்தியும், தெரு நாடகமும் சொல்லுகின்றது.

பெண்களுக்கெதிராக இழைக்கப்படும் அநீதிகளுக்கு பெண்கள் மட்டுமல்ல எல்லோருமே குரல் கொடுக்க வேண்டும். போராட வேண்டும் எனவும் கூறினார்.

மகஜரைக் கையேற்கும் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் உளநல மருத்துவர் மாசிலாமணி ஜெயராஜா, மனித உரிமைகள் சட்டத்தரணி சதீஸ்குமார் விஜயராணி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தெரு நாடகம் டிப்போ சந்தி உட்பட பல இடங்களில் நடைபெற்றது. பல பெண்கள் இதில் பங் கேற்றனர். (90)

## பரமர் சங்கமம்



'கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் உணவீந்த தெய்வம்' என்பதைப் படிக்கும் போதெல்லாம் எனக்கு நம் நாட்டுத் தேரர்களை நினைவு வருவது தவிர்க்க முடிவதில்லை. அதுபோல தேரைகளைக் கண்டாலும் தேரர்களின் நினைவும் வந்துபோகும்.

கடைசியர்க சீன தேசமும். மனித உரிமைகளை உறுதிப் படுத்துங்களென இலங்கை அரசாங்கத்துக்கு அறிவுரை கூறி இருந்ததே ஒன்பதாவது உலக அதிசயமாக சகல நாடுகளும் திரும்பிப்பார்த்தன. 'கல்லுக்குள்ளும் ஈரம்' என்பதுபோல் இது வரையும் இலங்கைத் தமிழர் விடயத்தில் இளகாமல் ஐ.நா. சபைக் கூட்டங்களில் இலங்கைக்கு ஆதரவு தெரிவித்து வந்த நாடு சீனா.

கல்லுக்குள் ஈரம் என்பதை விட ஈரத்தின் உறைவிடம் கல்லென்றே கொள்ள வேண்டும். கல்லுப்பாறைகளில் இருந்து தானே நதிகள் ஊற்றெடுக்கின்றன. அப்பழிப்பார்க்கையில் ஐப்பான் தேசமும் ஐ.நா.வில் இலங்கைக்கு ஆதரவே தெரிவித்தும் வந்துள்ளது. சீனாவைத் தொடர்ந்து ஐப்பானும் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்குமென எதிர்பார்க்கலாம்.

ஐப்பானிய மக்களின் பழமையான பண்பாட்டுக் கூறுகளில் வடபகுதி மக்களின் பண்பாட்டு தரவுகள் இருந்ததை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அம்மையார் சில வருட காலங்கள அந்நாட்டில் உத்தியோக ரீதியாக வாழ்ந்து சமயம் செய்த ஆய்வுகளை நூலுருவாக்கி வெளியிட்டதில் இருந்து அறியவும் முடிந்தது.

இதுவொன்றும் உலகத்தில் நடந்து விடாத புதுமை இல்லைத்தானே! அதேவேளை இலங்கையின் மதக் குரவர்களான தேரர்கள் இனங்களுக்கு இடையில் விசத்தைக் கலக்கும் விதமாக பேசுவதும், நடந்து கொள்வதும் உலகம் பூராகவும் வியாபித்துக் கொண்டிருப்பதை அறியாமல், அறிஞ்சால் தலை குனியப் போவதையும் உணராமல் இன்னமும் செயல்பட்டுக்கொண்டிருப்பது வேதனைக்குரிய விடயங்களில்லையா?

ஹெரல உறுமய பொதுபல சேனா, ராவணாபோன்ற அரசியல் குறியீடுகளோடு இலங்கையில் வாழ்கின்ற இனங்களுக்கு இடையில் பிரிவினை வாதம் பேசி இனத்துவேசத்தைக் கிளறுவதன் ஊடாக நாட்டிலும் பிரிவினையை ஏற்படுத்துவது அவர்களுக்கே தெரிவதில்லை.

இந்நிலையில் சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் குயின் காங் இலங்கைக்கு மனித உரிமைகளை உறுதிப் படுத்துங்கள் எனக்கூறியுள்ளதை ஒரு அதிர்ச்சி வைத்தியமாகவே அனைத்து நாடுகளும் கருத்தில் எடுத்துள்ளது. பொதுநலவாய மாநாட்டில் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் சுட்டிக் காட்டியதை சூடுகுறைய முன்பாகவே சீனப் பேச்சாளர் குயின் காங் தொட்டுள்ளார்.

கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் உணவீந்தது. போலவே இனத்துவேசத்தைக் கக்கிக் கொண்டிருக்கும் ஹெல உறுமய, பொதுபவனே ராவணா அமைப்புத் தேரர்களின் கல்லிதயங்களிலும் ஈரம் சுரக்குமென நம்பலாமா... என்ன நான் சொல் லுறே...

## அபராதம் விதிப்பு

நெல்லியடி, கரணவாய் மத்தி, கரவெட்டி, உடுப்பிட்டி ஆகிய பகுதிகளில் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் மது அருந்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 10 பேருக்கு பருத்தித்துறை நீதி மன்றத்தினால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

நெல்லியடி பொலிஸார் குறித்த 10 பேரையும் கைது செய்து கடந்தவெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில ஆஜர்படுத்தினர். இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட பதில் நீதிபதி குறித்த நபர்களுக்கு தலா 6 ஆயிரம் ரூபா வீதி குற்றப்பணம் அறிவிட்டதுடன் எச்சரிக்கை செய்து தீர்ப்பளித்தார். (18)

*** *** ***

வடமராட்சி நெல்லியடிப் பகுதியில் மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரமின்றி சென்ற நபருக்கு ஆயிரம் ரூபா பருத்தித்துறை நீதி மன்றினால் ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. நெல்லியடி பிரதான வீதியில் அனுமதிப் பத்திரமின்றி மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற குறித்த நபரை போக்குவரத்து பொலிஸார் மறித்து பரிசோதித்த போதே விடயம் தெரியவந்தது.

குறித்த நபரை பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் படுத்தியவேளை வழக்கை விசாரனை செய்ய நீதிமன்ற பதில் நீதிபதி குறித்த நபருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (109)

## பாரதிவிழா

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் முன்னெடுக்கும் பாரதி விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் 40 இற்கும் மேற்பட்ட இராமநாதன் நுண்கலைத்துறை மாணவர்கள் இணைந்து வழங்கும் புதுமைப் பெண்கள் என்ற பொருளிலான நாட்டிய நாடகம் மற்றும் நல்லதோர் வீணை என்ற பெயரில் பாரதியார் பாடல்களால் ஆன இசை அர்ச்சனை என்பன சிறப்பு நிகழ்வுகளாக இடமபெறவுள்ளன. யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்திற்கான இணையத்தளமும் இந்நிகழ்வின் போது உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

# சரஸ்வதி முன்பள்ளியின் பரிசளிப்பு வைபவம்

கைதடி மேற்கு சரஸ்வதி முன்பள்ளியின் வருடாந்த கலை விழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 2 மணிக்கு சரஸ்வதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

முகாமைத்துவக்குழுத்தலைவி திருமதி. வினோதினி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறக்கழக தலைவர் இ.கந்தசாமி, சிறப்பு விருந்தினராக கைடித மேற்கு ஜே/293 கிராம சேவையாளர் கு.சிவகுமாரசர்மா, ஓய்வு பெற்ற அதிபர் ப.செல்லத்துரை, சாவகச்சேரி முன்பள்ளிகளின் இணைப்பாளர் திருமதி.த.சுபத்திராதேவி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலைய செயலாளர் செல்வன் ஞா.கிருபதீஸன், சரஸ்வதி மாதர் கிராம அபிவிருத்தி தலைவி திருமதி.ம.நிர்மலா, கைதடி குடும்ப நல உத்தியோகத்தர் திருமதி.கு.குணவதனி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (51)

# மனித உரிமைகள் தினம்

கிளிநொச்சி மாவட்டத்தில் சர்வதேச மனித உரிமைகள் தினம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கூட்டுறவு கலாசார மண்டபத்தில் நடைபெற உள்ளது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் பிராந்திய அலுவலகத்தினால் நடத்தப்படவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தின் முதுநிலை விரிவுரையாளர் ந.செல்வகுமாரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செல்லமுத்து சிறிநிவாசன் கலந்து கொள்ளவுள்ளார். (90)

## முரசின் இன்றைய பலன்




(11.12.2013 புதன்கிழமை)

விஜய வருஷம் கார்த்திகை மாதம் 25 ஆம் திகதி.
சித்தம்/நவமி. உத்தரட்டாதி நட்சத்திரம் மாலை 6.44.
பின் ரேவதி.
இராகுகாலம் 12.19 - 01.49 வரை. சுபநேரம் 04.49 - 06.19 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | இலகுவாக முடியும் என எண்ணிய செயல் இழுபடல், மைந்தனின் மனமாற்றம் அறிந்து மகிழ்ச்சி. |
| ரிஷபம் | பிறரைக் குறை கூறாமல் செயலில் முழுவீச்சாக ஈடுபடுங்கள், உதவி கேட்க வந்தவருக்கு தகுந்த மரியாதை கொடுத்ததால் பாராட்டு |
| மிதுனம் | திறமைசாலிகளை பொறுக்கி எடுத்தால் காரிய ஜெயம் ஏற்படுதல், தொலைகேசி மூலம் மிரட்டல் கொடுத்தவருக்கு ஏற்கக்கூடிய பதில் அளித்ததால் நிம்மதி. |
| கடகம் | வீடுதேடிச் சென்று உதவியதால் கௌரவம் கிட்டுதல், குறைகளை எடுத்தியம்பி நிவாரணம் பெற பிறரைச் சந்திக்கச் செல்லல். |
| சிம்மம் | மனத்தைரியத்தை துணிவுடன் மேற்கொண்டதால் காரிய சித்தி ஏற்படல், கடனில் ஒருபகுதியை அடைக்க அடகு வைத்தல். |
| கன்னி | உதவியோர் பொறுத்தகட்டத்தில் கைவிட்டதை நினைத்து கவலை, குறிக்கோளை எட்டிப்பிடிக்க சக ஊழியர் உதவிடல். |
| துலாம் | வீட்டுக்கு வருகை தந்தவர்களை சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்லல், அடகுப் பொருள் ஏலம் விடும் செய்தியறிந்து மனக்கிலேசம். |
| விருச்சிகம் | வரன்தேட முயற்சித்தது சாதகமான பதிலைத் தரல், உதவிகேட்டு வந்த உறவினர்களுக்கு தவணை சொல்லித்திருப்பி அனுப்புதல். |
| தனுசு | இணக்கம் ஏற்பட்டதால் சொத்துப்பிரச்சினை தீர்ந்துவிடல், சுபச்செலவிற்கு நண்பரின் உதவி கிட்டியதால் மகிழ்வு. |
| மகரம் | பேசமுன் யோசித்துப் பேசியதால் முரண்பாடு எழாதிருத்தல், பத்திரிகைகள் மூலம் மோசடிகள் பற்றி அறிந்ததால் உதவி செய்ய பின்னடித்தல். |
| கும்பம் | பிறரைநம்பி பெருந்திட்டங்களைத்தீட்டாமை, நினைத்தவர் கண் முன்னேதோன்றியதால் ஆச்சரியம்தக்க வைத்தல். |
| மீனம் | விதண்டாவாதம் குடும்பநிம்மதியை ஏற்படுத்தாது பிரச்சினையை வளர்த்தல், அயல் வீட்டாரின் சரீர உதவி நிகழ்விற்கு கை கொடுத்தல். |

# பயணிகளுக்கு இப்போது பாதுகாப்பு வாய்க்காலுக்கு புனரமைப்பு எப்போது?



(திருநெல்வேலி)

கொக்குவில் ஆடியபாதம் வீதியின் வடக்குக் கரையோரமாகக் காணப்படும் நீண்ட வாய்க்காலுக்குப் பாதுகாப்புக் கட்டைகள் அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ் வீதியில் செல்லும் பயணிகள், வாகனங்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாகக் காணப்பட்ட பாதுகாப்பற்ற இவ் வாய்க்காலுக்குள் இவ் வீதியில் பயணித்த பல முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள், வாகனங்கள் என்பன விழுந்து சேதமடைந்ததுடன் பலர் படுகாயங்களுக்கும் ஆளாகியிருந்தனர்.

நந்தாவில் அம்மன் கோவில் வீதியிலிருந்து ஆரம்பித்துக் கொக்குவில் சந்திவரை இவ் வாய்க்கால் நீண்டு செல்கிறது. வீதி அகலித்து உயரமாகக் காணபடுவதையடுத்து இவ்வாய்க்கால் ஆழம் கூடியதாகவுள்ளது.

மழை காலங்களில் அதிக வெள்ளங்கள் இதற்குள் தேங்கி நிற்கிறது. இவ் வெள்ளம் நந்தாவில் குளத்தைச் சென்றடைவதால் வாய்க்காலும் துப்புரவு செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. (137)

# முஸ்லிம் சம்மேளனத்தின் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியிலிருந்து மாலை 3 மணி வரை நடைபெறும்.

சம்மேளனம் பள்ளிவாசல்கள், சங்கங்கள் மற்றும் 13 அமைப்புக்களை உள்ளடக்கிய பொது நிறுவனமாகும். கடந்த மூன்று வருடங்களாக மீள்குடியேறியுள்ள முஸ்லிம் மக்களின் தேவைகளை நிறைவேற்றி வந்துள்ளன.

மீள்குடியேறியுள்ள மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக அரசாங்க அதிபர், பிரதேச செயலர், அமைச்சர், மாநகர பிதா மற்றும் அரச உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடி பல்வேறு உதவிகள் அவர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன.

இறுதியாக இந்திய வீட்டுத்திட்டம் மீள்குடியேறியவர்களுக்கு கிடைக்காமல் தாமதமாகி வருகின்றன. இது சம்பந்தமாக கடந்த வாரம் இந்திய உதவித் தூதுவரை நேரில் சந்தித்து 313 பயனாளிகளுக்குரிய வீட்டுத்திட்டத்தை வழங்க வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அதற்குரிய சாதகமான நிலையிருப்பதாக சம்மேளனத்தின் தலைவர் ஏ.எச்.ஜமால் மொஹீடீன் தெரிவிக்கின்றார். பொதுக்கூட்டத்திற்கு சகல அங்கத்தவர்களும் வருகை தருமாறு செயலாளர் ஆர்.கே. சுவர்கஹான் வேண்டுகின்றார். (105)

# போக்குவரத்தில் நெருக்கடி கவனம் செலுத்துவது யார்?

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவின் முன்பாகவுள்ள வைத்தியசாலை வீதியின் நடுப்பகுதியில் மோட்டார் சைக்கிள்கள் துவிச்சக்கரவண்டிகள் என்பன மீளவும் நிறுத்தப்பட்டு வருவதனால் வைத்தியசாலைக்கு நோயாளர்களை ஏற்றி வரும் வாகனங்கள் மிகுந்த அசௌகரியங்களை ஏற்படுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே இவ்வாறு துவிச்சக்கரவண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் நிறுத்தப்படுவதனால் ஏற்படும் நோயாளர்களுக்கான அசௌகரியங்கள் குறித்து ஊடகங்கள் சுட்டிக்காட்டியதனை அடுத்து அந்தப் பகுதியில் அவற்றை நிறுத்துவது தவிர்க்கப்பட்டு வந்தது.

ஆனால்அவ்வாறு அவற்றை நிறுத்துவதனால் நோயாளரை ஏற்றிவரும் அம்புலன்ஸ் வண்டிகள் மற்றும் வாகனங்கள் மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே நோயாளரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வைத்தியசாலையின் பாஸ் நடைமுறை காரணமாக மதியம் மற்றும் பிற்பகலில் இந்த வீதிப் பகுதியில் வைத்தியசாலையின் நோயாளர்களைப் பார்வையிட வருபவர்களால் போக்குவரத்து சிரமங்களும் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (பா)

# வியாபாரத்தில் புதிய உத்திகளை கூட்டுறவு சங்கங்கள் கையாளவேண்டும்



கூட்டுறவு சங்கங்கள் ஊழியர்கள், இலாப நட்டம் போன்ற விடயங்களில் மட்டும் கவனம் செலுத்துவதுடன் நின்றுவிடாது தற்போதைய சந்தை நிலவரத்திற்கேற்ப புதிய வியாபார உத்திகளை கையாளவேண்டும் என வட மாகாண சபை உறுப்பினர் சயந்தன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் கூட்டுறவுப் பெரியார் அமரர் வி.வீரசிங்கத்தின் 49 ஆவது நினைவு தினமும் 91 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா பரிசில் வழங்கல் நிகழவும் அண்மையில் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை தலைவர் தி.சுந்தரலிங்கம் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அடக்குமுறைகளுக்கு உட்பட்ட சமூகமாக இருந்த வேளையில் பொது மக்களுக்கு இக்கட்டான நேரங்களில் கை கொடுத்த கூட்டுறவு துறையின் நிலை தற்போது பரிதாபத்துக்குரியது. கூட்டுறவு என்றால் அதற்கொரு கூட்டுறவு சங்கம் ஊழியர்கள் இலாப நட்டம் போன்ற விடயங்களில் மட்டும் கவனம் செலுத்துவதைவிட அதற்கப்பால் தற்போது இருக்கும் சந்தை நிலவரத்திற்கேற்ப மாறவேண்டும். மேலும் இப்பொழுது வாடிக்கையாளர் சுவை மற்றும் சந்தைப் போட்டியின் தன்மை மாறிவிட்டது என்பதையும் உணராமலும் புதிய வியாபார உக்திகளை திட்டமிடாது மேற்கொள்ளாது இப்படியேயிருந்தால் கூட்டுறவு சங்கம் ஒருபோதும் வளர முடியாது.

கூட்டுறவு சங்கங்கள் புதிய வியாபார உத்திகளை கையாள வேண்டும். மேலும் இந்தக் கூட்டம் வெறுமனே ஒரு ஆரம்ப பாட சாலையில் இடம்பெறும் பேச்சு போட்டியைப் போல் அல்லாமல் எங்கள் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாவற்றையும் அடக்கியதான சம்பளத்திட்டம் வருங்கால திட்டங்கள் அனைத்தையும் சமர்ப்பிக்கும் ஒரு கூட்டுறவு மாநாடாக இடம்பெறவேண்டும் என அவர் தெரிவித்தார்.

மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கான கௌரவிப்பும் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (48)

# ஆயுர்வேதம்



## கட்டுப்படுத்த முடியாமல் வெளியேறும் சிறுநீர்

மழையும் மப்பும் மந்தாரமுமாக இருக்கும் நாட்களில் வயிற்றிலும் மப்பும் மந்தாரமும் சூழ்ந்து நிற்கும். வயிற்றிலுள்ள கதகதப்பினால் சிறுநீரகங்களின் உற்பத்திக் கேந்திரங்கள் கட்டுப்பாட்டுடன் இயங்குகின்றன. இந்தக் கதகதப்பு மந்தப்படுவதால், சிறுநீரின் உற்பத்தியானது சிறுநீரகங்களில் அதிகரித்து அடிக்கடி வெளியேறுகிறது.

அதனால் வயிற்றிலுள்ள மப்பும் மந்தாரமும் மாறி அதன் சுறுசுறுப்புக்கும் சூடான நிலையைப் பெறுவதற்கும் தக்க உதவி தேவை. தீபாவளி லேகியத்தை இந்தக் காலகட்டங்களில் நம் முன்னோர் தயாரித்து தினம் காலையில் சாப்பிட்டு வயிற்றின் மந்த நிலையைப்போக்கி சிறுநீரின் அதிக அளவிலான போக்கைக் கட்டுப்படுத்தினர். நீங்களும் தீபாவளி லேகியத்தை எளிதாக வீட்டிலேயே தயாரித்துச் சாப்பிடலாம். இதற்குத் தேவையானவை:

திப்பிலி 50 கிராம், ஓமம் 50 கிராம், கண்டந்திப்பிலி 50 கிராம், ஏலக்காய் 5 கிராம், ஜாதிக்காய் 5 கிராம், சுக்கு 25 கிராம், மிளகு 25 கிராம், சீரகம் 25 கிராம், கொத்தமல்லி 25 கிராம்.

ஜாதிக்காய், ஏலக்காய் நீங்கலாக மற்றவற்றை வறுத்துக் கொள்ளவும். எல்லாவற்றையும் நன்கு இடித்துச் சூரணமாக்கிக் கொள்ளவும். வெல்லம் 300 கிராம் அளவு தண்ணீரில் கரைத்துப் பாகாக்கி அதில் 50 கிராம் நெய் விட்டு இந்தச் சூரணத்தைப் போட்டுக் கிளறி வைத்துக் கொள்ளவும். சுமார் 1–2 தேக்கரண்டி அளவு காலை, மாலை வெறும் வயிற்றில் சாப்பிட்டு வரவும்.

மார்கழியும் தையும் ஹேமந்த ருதுவெனப்படும். இவ்விரு மாதங்களில் பனி அதிகமாக உணரப்படும். பொதுவாகவே இக்காலத்தில் இரவு நேரம் அதிகம். பகல் நேரம் குறைவு. பகலிலும் பனி வாடை காலை 8–9 மணி வரையிலும் இருக்கும். மாலை 5 மணியிலிருந்தே பனி வாடை ஏற்பட்டுவிடும்.

ஆகவே அதிலிருந்து உடலைக் காப்பாற்றும் கம்பளி முதலிய உடைகளின் கதகதப்பு, தோலின் வறட்சி ஆகியவற்றின் காரணமாக ஜீரண கோசங்களுக்குத் தேவையான சூடு சற்று அதிகமாகவே இருக்கும். உணவைச் செரிக்க வைக்க வேண்டிய செயல் சிறுநீரகங்களுக்கு இல்லாததாலும், சூடு வயிற்றுப் பகுதியில் குவிந்திருப்பதாலும், சிறுநீரகங்கள் வெளியிலுள்ள பனி வாடையால் குளிர்ந்திருக்கும். இந்தக் குளிர்ச்சியின் தாக்கத்தினால், நீர்ச்சுரப்பு அப்பகுதியில் கூடுகிறது. இதுவே சிறுநீர்ப் பெருக்கு ஏற்படுவதற்குக் காரணமாகிறது.

இந்தக் காலத்தையொட்டி ஜீரண உறுப்புகளின் நிலைக்கேற்ப அமைந்த உத்தம உணவு பொங்கல். அதன் செரிமானத்தில், உடல் உட்புற சூட்டைத் தளர்த்தி, எல்லாப் பகுதிகளுக்கும் சீராகப் பரப்புவதால், சிறுநீரகங்களுக்குத் தேவையான சூடு கிடைப்பதால், அதன் செயல்பாடு சீராகி, நீர்ச்சுரப்பைக் கட்டுப்படுத்தும். விடியற்காலையிலேயே எழுந்து வெந்நீரில் குளித்து காய்ந்த உடை உடுத்தி வெளிக் குளிரைப் போக்கிக் கொள்வதன் மூலமாகவும், சிறுநீர் அதிக அளவில் போவதைத் தடுத்துக் கொள்ளலாம்.

ஐந்து உறைப்புள்ள பொருட்களாகிய திப்பிலி, கண்டந் திப்பிலி, செவ்வியம், கொடி வேலி வேர்ப்பட்டை, சுக்கு எனும் பஞ்சகோலம் சேரும் இந்த காந்தம் கஷாயத்தைக் காலை, மாலை குடித்து வருவது மிகவும் நல்லது. 15 மி.லீ. கஷாயத்தை 60 மி.லீ. வெதுவெதுப்பான தண்ணீர் கலந்து காலை, மாலை உணவுக்கு 1 மணி நேரம் முன்பாகச் சாப்பிடவும்.

### அறிந்து கொள்வோம்

- பிறப்பித்தோன், கற்பித்தோன், மணம் முடித்தோன், அன்னமிட்டோன், ஆபத்துக்கு உதவியவன் ஆகியோர் ஐவகைத் தந்தையர் ஆவர்.
- பெண், ஆடை, அணிகலன், உண்டி, தாம்பூலம், பரிமளம், பாட்டு, கேளிக்கை ஆகியன எட்டுவகை போகங்களாகும்.
- நெய், இளநீர், பயறு, கரும்பு, வாழை முதலியன நடப்படு பொருள் எனப்படும். அகில், குங்குமம், கோட்டம், தக்கோலம், மிளகு முதலியன மலைபடு பொருள் ஆகும்.

# இலங்கையில் 2020 ஆம் ஆண்டிற்குள் 40இலட்சம் புதிய குடிநீர்வழங்கல்திட்டம்



இலங்கையில் 2020 ஆம் ஆண்டிற்குள் 40 இலட்சம் புதிய குடிநீர் வழங்கல் திட்டங்களை நடைமுறைப்படுத்தத் தீர்மானித்துள்ளதாக நீர் வழங்கல் வடிகாலமைப்பு பிரதி அமைச்சர் நிருபமா ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சின் மீதான வரவுசெலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய பிரதியமைச்சர் தமதுரையில் மேலும் தெரிவிக்கையில்,

இந்த வருடம் வரை 19 இலட்சம் புதிய குடிநீர் வழங்கல் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. 2013 இல் மட்டும் 38,000 குடிநீர் வழங்கல் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் 2020 இற்குள் இதனை 40 இலட்சமாக்குவதே இலக்காகும்.

குடிநீருக்கான கேள்வி வருடத்திற்கு வருடம் பெருமளவில் அதிகரித்து வருகின்றது. உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, இந்தியா, ஜப்பான் உட்பட 20 நிதி நிறுவனங்களின் உதவியுடன்மேற்படி குடிநீர்த் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

நாட்டில் சகலருக்கும் சுத்தமான குடிநீர் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. வடக்கு, கிழக்கு உட்படப் பல்வேறு பிரதேசங்களிலும் பல புதிய திட்டங்கள் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

அதேவேளை, நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை இதுவரை காலமும் ஈட்டி வந்துள்ள நட்டத்தை ஈடுசெய்து அதனை இலாபத்தில் இயங்கும் நிறுவனமாக கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு இந்த சபை 280 மில்லியன் நட்டத்திலேயே இயங்கியது. எனினும் 2013 ஆம் ஆண்டில் 389 மில்லியன் ரூபாவை இலாபமாகப் பெறும் நிறுவனமாக இச்சபை மாற்றப்பட்டுள்ளது. மகிந்த சிந்தனை கொள்கைத் திட்டத்திற்கிணங்க ஒன்றரை இலட்சத்துக்கு மேற்பட்ட குடிநீர் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

நீர் விரயம் தவிர்க்கப்பட்டுள்ளதுடன் அந்த விசேட செயற்றிட்டத்திற்காக 300 மில்லியன் ரூபா முதலீடு செய்யப்பட்டுள்ளது. சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்தும் வகையில் சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு பௌஸர் மூலம் சுத்தமான குடிநீரை வழங்கும் செயற்றிட்டங்கள் நடைமுறையில் உள்ளன.

இத்திட்டத்தின் மூலம் நீரினால் ஏற்படும் சகல நோய்களையும் தவிர்க்க முடியும். அம்பாந்தோட்டை, மாத்தறை மாவட்டங்களின் பல பிரதேசங்களுக்கும் குடிநீரை வழங்கும் பாரியதிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று வடக்கில் கிளிநொச்சி, ஒட்டுசுட்டான் போன்ற பகுதிகளிலும் தற்போது பல திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. "ஜய்க்கா" நிறுவனத்தின் நிதி உதவியுடன் கிளிநொச்சி குடிநீர்த் திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

2013ஆண்டிற்குள் தெற்கிற்கான பாரிய குடிநீர்த்திட்டம் நிறைவு செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பட்டம் விட்ட சிறுவனை தாக்கியது மின்சாரம்

மட்டக்களப்பு, கிரான்குளம் பிரதேசத்தில் சிறுவன் ஒருவன் மின்சாரத் தாக்கத்திற்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை குறித்த சிறுவன் நண்பர்களுடன் பட்டம் விட்டு விளையாடிக் கொண்டிருக்கும்போது மின் கம்பத்தில் பட்டம் சிக்கியுள்ளது.

அதனை எடுப்பதற்கு மின் கம்பத்தில் ஏறியபோது மின்சாரத் தாக்கத்திற்குள்ளாகி கீழே விழுந்து பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

கிரான்குளம் பறங்கியாமடு பிள்ளையார் கோவில் வீதியைச் சேர்ந்த ஆர்.தவனீதன் வயது (15) என்ற சிறுவனே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளார்.

இவர் உடனடியாக வாழைச்சேனை ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனாவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

# ரத்துபஸ்வல தண்ணீரில் இரசாயனம் கலந்திருப்பது உறுதி

ரத்துபஸ்வல, கையுறை தயாரிப்பு தொழிற்சாலை வளாகத்தினுள்ளும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் நீரில் இரசாயனங்கள் பரவியுள்ளதாக நீர்வள சபை அதன் இறுதி அறிக்கையில் உறுதிசெய்துள்ளதாக நாடாளுமன்றில் நேற்று முன்தினம் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பகுதியில் குடிநீர் நெருக்கடி ஏற்பட்டதைத் தொடர்ந்து இதனை ஆராய ஓர் உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டது.

இந்த தொழிற்சாலை வளாகத்தினுள் உள்ள கிணறுகளிலுள்ள நீரில் அமிலத்தன்மை காணப்படுகிறது நைதரேற்று மற்றும் சல்பேற்று அடர்த்தி சில கிணறுகளில் உயர் அளவில் காணப்படுகிறது.

அமிலங்களை கையாள்வதில் அசிரத்தை காரணமாக அமிலப் பரவுகை உண்டாகியது என இந்த அவதானங்கள் மூலம் முடிவு செய்யலாம் என இந்த ஆய்வில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.சுறுறுமுள்ள, நெடுங்கமுவ, வெலிவெரிய, ஊறுவெல, கிரிக்திட்ட மற்றும் ரத்துபஸ்வல ஆகிய பகுதிகளில் சோதனை, களவேலை ஆகியவற்றை மேற்கொண்டிருந்தனர்.

# கடன்பெற்றுத் தருவதாகக்கூறி பணமோசடியில் ஈடுபட்டவர் கைது



வவுனியா விளக்கு வைத்தகுளம் கிராம மக்களுக்கு கடன் வழங்குவதாக கூறி பலரிடம் பண மோசடியில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் ஓமந்தை பொலிஸாரால் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட விளக்கு வைத்தகுளம் கிராம மக்களிடம் 4500 ரூபா வீதம் 20 பேரிடம் பணத்தைப் பெற்றிருந்த நாகர் இலுப்பைக்குளத்தைச் சேர்ந்த சந்தேக நபர், அம்மக்களுக்கு கடன் வழங்குவதாகக் கூறி கடந்த ஞாயிற்றுக்கிழமை சிலரிடம் தொடர்பு கொண்டு பணத்துடன் ஓமந்தைக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

கடன் கிடைக்கும் என எதிர்பார்த்து வந்தவர்களில் சிலருக்கு சந்தேகம் ஏற்பட்ட நிலையில், பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்து ஓமந்தை பொலிஸ் புலனாய்வாளர்கள் அவ்விடத்துக்கு விரைந்து அவரைக் கைது செய்து ஓமந்தை பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை வவுனியா வடக்கு பிரதேசத்தில் பலரும் கடன் வழங்குவதாகத் தெரிவித்து அங்குள்ள மக்களை ஏமாற்றி வருவதாகவும் இது தொடர்பில் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க. பரந்தாமன் அறிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளில் மாத்திரம பண வைப்புக்களையும் கடன் விண்ணப்பங்களையும் மேற்கொள்ளுமாறும் பொது மக்களிடம் அவர் கோரியுள்ளார்.

# கைவிடப்பட்ட திவிநெகும மரக்கன்றுகள்



'திவிநெகும' திட்டத்தின் கீழ் மக்களுக்கு கையளிப்பதற்காக கொண்டுவரப்பட்ட மரக்கன்றுகள் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

வவுனியா நெடுங் கேணிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மருதோடைக் கிராமத்திலேயே இவ்வாறு கைவிடப்பட்ட நிலையில் மரக்கன்றுகள் காணப்படுகின்றன.

பிரதேச வாசிகளுக்கு வழங்குவதற்காக கொண்டுவரப்பட்ட மரக்கன்றுகள் நீண்ட நாட்களாக வழங்கப்படாமல் கைவிடப்பட்டமையால் தற்பொழுது பட்டுப்போன நிலையில் உள்ளன.

# மன்னார் மாவட்ட பிராந்திய ஊடகவியலாளரிடம் விசாரணை

(மன்னார்)

மன்னார் மாவட்ட பிராந்திய ஊடகவியலாளர் எஸ். ஆர்.லெம்பேட் நேற்றுமுன்தினம் கொழும்பு பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் 3 மணிநேரம் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை மன்னார் பொலிஸாரினூடாக ஊடகவியலாளருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது.

இந்த அழைப்பின்படி சட்டத்தரணியுடன் நேற்று முன்தினம் காலை சென்ற பிராந்திய ஊடகவியலாளரை பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் தனியாக விசாரணை செய்துள்ளனர்.

இது குறித்து மன்னார் மாவட்ட பிராந்திய ஊடகவியலாளர் எஸ். ஆர்.லெம்பேட் கூறியுள்ளதாவது,

முதலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனுக்கும் எனக்கும் உள்ள தொடர்புகள் சம்பந்தமாக விசாரணை செய்தனர்.

2011 ஆம் ஆண்டு ஊடகம் ஒன்றில் வெளிவந்த புலிகள் இயக்கம் தொடர்பான செய்தியின் பிரதியை காண்பித்து அதனை நான் வெளியிட்டதாகக் கூறினார்கள். ஆனால் அந்தச் செய்தி எந்த ஊடகத்தில் இருந்து வந்தது என்று தெரியாது. அதனை நான் மறுத்தேன். பின் எனது தொலைபேசி இலக்கத்தில் இருந்து கதைத்த சில இலக்கங்கள் தொடர்பாக விசாரணை செய்தனர்.

பின் எனது மின்னஞ்சல் தொடர்பிலும் அதன் இரகசிய இலக்கங்கள் தொடர்பிலும் ஆராய்ந்தனர். எனது மின்னஞ்சலின் இரகசிய இலக்கம் உடன் தெரியாததினால் அதனை அவர்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக செயல்படுத்திக்காட்ட முடியவில்லை. தொடர்ந்தும் புலிகள் தொடர்பாகவும் அவர்களுடன் தொடர்புகள் இருக்கின்றனவா என்றும் பல கோணங்களில் விசாரணைகளை மேற்கொண்டனர்.

மன்னாரில் உள்ள புலனாய்வுத் துறையினர் சில விபரங்களை அனுப்பி அதற்கும் எனக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறியமையினாலேயே குறித்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. எனறு அவர் தெரிவித்துள்ளார்.

# 45 பிச்சைக்காரர்கள் கதிர்காமத்தில் கைது



கதிர்காமம் புனித பூமியில் பக்தர்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயற்பட்ட 45 பிச்சைக்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் காலை இவர்கள் கைது செய்யப்பட்டதாக கதிர்காமம் பொலிஸார் தெரிவித்தனர்.

பக்தர்களுக்கு இடையூறு ஏற்படுத்தி அசிங்கமான வார்த்தைப் பிரயோகங்களை இவர்கள் பயன்படுத்தியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் குழந்தைகளை பயன்படுத்தி பிச்சை எடுக்கும் ஐந்து பெண்களும் அடங்குகின்றனர். இதற்கு முன்னரும் இவர்கள் பிடிக்கப்பட்டு எச்சரிக்கையின் பின் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்நிலையில் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளவர்கள் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர். குறித்த பிச்சைக்காரர்கள் திருட்டு நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

◆ பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

49) போராடிய /அகிம்சை வழியில் / வெள்ளையருக்கு / மாமனிதர் / ஆவர் / மகாத்மாகாந்தி / எதிராக

.............................................................................................................

50) நெற்றி / நிலத்திலே / உழைத்தான் / தொழிலாளி / சிந்தி / வியர்வை

.............................................................................................................

◆ பின்வருவனவற்றுக்கு விடை எழுதுக.

51) பல்வலியைக் கு றைக்கப் பயன்படுத்தும் தைலம் எது?
1. கறுவாய் தைலம் 2. கராம்புத் தைலம்
3) விக்ஸ் தைலம் 4) சாதிக்காய்த் தைலம்

52) பூனை, நாய் போன்றவை வயிற்றுக்கோளாறு ஏற்படும்போது தேடியுண்ணும் மூலிகைச் செடி எது?
1. பூனைநக்கி 2. பால் அறுகு 3. குப்பைக்கீரை 4. நெருஞ்சி

53) மலை நாட்டுப் பகுதியில் வாழும் மக்களுக்கு பெரும் பிரச்சினையாக உள்ள பிராணி எது?
1. நத்தை 2. அட்டை 3. யானை 4. காட்டுப்பன்றி

54) தான் வாழும் சூழலின் நிறத்துக்கு ஏற்ப உடலின் நிறத்தை மாற்றும் பிராணி எது?
1. பச்சோந்தி 2. ஓணான் 3. பச்சிலைப்பூச்சி 4. கிளி

55) இலங்கை மக்களின் பிரதான உணவு நெல் அரிசிச்சோறு, இலங்கையில் அதிகளவு நெல் உற்பத்தி செய்யும் மாவட்டம் எது?
1. அம்பாறை 2. குருநாகல் 3. மட்டக்களப்பு 4. அனுராதபுரம்


56) இறைச்சி சமைக்கும்போது, இறைச்சியை மென்மையாக்கப் பயன்படுத்துவது எது?
1. பப்பாசிக்காய் 2. இரம்பை 3. கராம்பு 4. கறுவா

57) எமது நாட்டின் பண்டைக்காலம் பற்றிய தகவல்களை அறிய உதவுவது எது?
1. திரிபிடகம் 2. உபநிடதம் 3. ஆரியவம்சம் 4. மகாவம்சம்

58) இந்தியாவிலுள்ள அஜந்தா ஓவியங்களுக்கு ஒப்பான கலைத்துவப் படைப்புக்கள் காணப்படும் இடம் எது?
1. சிகிரியா 2. கம்பளை 3. தலதாமாளிகை 4. எம்பக்க தேவாலயம்

59) வொலிபோல் விளையாட்டுக்கான ஒரு குழுவிலுள்ள விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை யாது?
1. 6 2. 7 3. 10 4. 12

60. பெற்றோல் நிரப்பும் நிலையங்களில் அவதானிக்கக்கூடியதும், செய்யக்கூடாததுமான குறியீடு எது?
1. 2. 3. 4.






# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014


பகுதி - II
1 மணி 15 நிமி



# கல்வி முரசு

இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

◆ கீதாவின் வீட்டின் வரைபடம் கீழே தரப்பட்டுள்ளது. அதனைப் பயன்படுத்தி விடைதருக.




01) வீட்டிலிருந்து வாகனத் தரிப்பிடம் எவ்வளவு தூரத்தில் உள்ளது?
.............................................................

02) வீட்டிற்கு மிக அருகிலுள்ள இடம் எது? எவ்வளவு தூரம்?
.............................................................

03) வீட்டிலிருந்து தூரத்திலுள்ள இடம் எது? எவ்வளவு தூரம்?
.............................................................

04) வாகனத் தரிப்பிடத்திலிருந்து கிணற்றின் வழியே நீர்த் தாங்கி வரை எவ்வளவு தூரம்?
.............................................................

◆ பின்வரும் விபரத்தை வாசித்து விடை தருக.

1 கிலோகிராம் சீனியும், 500 கிராம் தேயிலையும் - ரூ. 175.00
1 கிலோகிராம் சீனியும், 400 கிராம் பால்மாவும் - ரூ. 155.00
500 கிராம் தேயிலையும், 1 கிலோகிராம் பிஸ்க்கட்டும் - ரூ. 220.00
1 கிலோகிராம் சீனியின் விலை - ரூ. 35.00

05) ஒரு கிலோகிராம் பிஸ்க்கட்டின் விலை என்ன?
1) ரூபா 220 2) ரூபா 80 3) ரூபா 45

06) 800 கிராம் பால்மாவின் விலை என்ன?
1) ரூபா 120 2) ரூபா 155 3) ரூபா 240

07) ஒரு கிலோகிராம் தேயிலையின் விலை என்ன?
1) ரூபா 140 2) ரூபா 280 3) ரூபா 320

**தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 08) பொதுவான வாகனம் | வாகனம் நிறுத்தல் |
| 09) தோணி | சுற்றாடல் மாசடைதல் |
| 10) மஞ்சள்க்கடவை | பாதையைக் கடத்தல் |
| 11) வாகனப் புகை | நீரோடையைக் கடக்க உதவும் |
| 12) பேருந்துத் தரிப்பிடம் | புகைவண்டி |


◆ பழ வியாபாரி ஒருவர் ஒரு நாளில் கொள்வனவு செய்த பழவகைகளினதும், விற்பனை செய்யப்பட்ட பழ வகைகளினதும் எண்ணிக்கையை அருகிலுள்ள அட்டவணை காட்டுகிறது.

| பழங்கள் | கொள்வனவு செய்தவை | விற்பனை செய்தவை |
|---|---|---|
| அப்பிள் | 65 | 45 |
| அன்னாசி | 75 | 35 |
| பலா | 45 | 20 |
| வாழை | 60 | 40 |
| கொய்யா | 60 | 40 |

13) குறித்த நாளில் கொள்வனவு செய்யப்பட்ட மொத்தப் பழங்களின் எண்ணிக்கை யாது?
.............................................................

14) குறித்த நாளில் விற்பனை செய்யப்பட்ட பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது?
.............................................................

15) குறித்த நாளில் எஞ்சியுள்ள பழங்களின் எண்ணிக்கை யாது?
..............................................................




16) குறித்த நாளில் விற்பனை செய்யப்பட்ட பழங்களை அருகில் தரப்பட்டுள்ள நிரல் வரைபில் வகைக் குறித்துக் காட்டுக.
..............................................................

17) குறித்த நாளில் அதிகளவு விற்பனை செய்யப்பட்ட பழவகை எது?
..............................................................

18) சம எண்ணிக்கையில் விற்பனை செய்யப்பட்ட பழ வகைகள் எவை?
..............................................................

- வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.



19) ..............................
20) ..............................
21) ..............................
22) ..............................
23) ..............................

- பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைப் புள்ளிக்கோட்டின் மீது தமிழில் எழுதுக.

24) எசல ..............................
25) உணுகுறு ..............................
26) யதுர ..............................
27) அம்ப ..............................
28) கிரவா ..............................
29) பொல் ..............................

- பின்வரும் குறுக்கெழுத்துப் புதிரை நிரப்புக.


இடமிருந்து வலம்

30) பிரி என்பதன் எதிர்ப்பதம் (1)
31) வானம் என்பதன் எதிர்ப்பதம் (4)

மேலிருந்து கீழ்




32) வறட்சி என்பதன் எதிர்ப்பதம் (1)
33) இரவு என்பதன் எதிர்ப்பதம். (3)

இடமிருந்து வலம்




- பின்வரும் தாவரங்களின் பெயர்களை எழுதுக.

(கறிவேப்பிலை / அகத்தி / வேம்பு / நீர்முள்ளி)



- பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.

34) தாய்க்கும், தந்தைக்கும் இடையே 2 வயது வித்தியாசம் உண்டு. எனினும் தாயைவிடத் தந்தை மூத்தவர். தாயைவிட மகன் 18 வயது இளையவன். மகனின் தற்போதைய வயது 10 எனின், தந்தையின் வயது யாது?
..............................................................

35) முந்தை நாளுக்கு முற்பட்ட நாள் ஞாயிற்றுக்கிழமை எனில், நாளை மறுதினத்திற்கு அடுத்த நாள் என்ன கிழமை? ..............................................................

36) ரவியினதும், சுதாவினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 20 வருடங்களாகும். ரவியின் வயது, சுதாவின் வயதின் 4 மடங்காயின், ரவியின் வயது எத்தனை?
..............................................................

37) சசியைவிட உமேஷ் உயரமானவன். சசியும் பிரியாவும் ஒரே உயரம் உடையவர்கள். பிரியாவைவிட அனுலா உயரம் குறைந்தவள் அனுலாவைவிட சசி உயரம் கூடியவள் எனில் இதில் உயரம் கூடியவர் யார்?
..............................................................

38) சானுஜன் படம் ஒன்றினைக் காட்டி பின்வருமாறு கூறினான். படத்தில் இருப்பவரின் தாய், எனது அப்பாவின் அம்மா ஆகும். அப்படியானால் சானுஜனுக்கும் படத்தில் இருப்பவருக்கும் இடையேயான உறவு முறை எது?
..............................................................

கீழே தரப்பட்ட விவரணத்தை வாசித்து விடைதருக.

நீண்ட நேரம் பயணம் செய்த வயோதிபர் மிகவும் களைத்த நிலையில் காணப்பட்டார். அவர் தலையில் காணப்பட்ட கச்சான், கடலைக் கடகம் கூட அவருக்குப் பெரும் சுமையாகக் காணப்பட்டது. அவரின் மனம் ஆறுதலை விரும்பியது. பரந்து செழித்து வளர்ந்த ஆலமர நிழலை அடைந்ததும் "அப்பாடா" என்று ஓர் பெருமூச்சு விட்டபடி மரநிழல் இருந்த நிலத்தில் தனது தலைப்பாகையைக் கற்றிடி விரித்த வண்ணம் மன நிம்மதியோடு சாய்ந்தார். அந்த ஆலமரத்தை அண்ணாந்து பார்த்தபோது, அவரின் மனத்தில் பல காட்சிகள் கண்ணுக்குப் புலப்பட்டன. ஓர் காகத்தின் கூட்டையும் அதற்குள் இருந்த இரண்டு குஞ்சுகள் தாயைத் தேடிக் கத்திய வண்ணம் இருப்பதையும் கண்டார். சிறிது நேரத்தில் தாய்க் காகம் வந்து குஞ்சுகளுக்கு உணவு ஊட்டியது. இப்படியான பல காட்சிகளைக் கண்ட வயோதிபர் சுதந்திரமாக வாழும் பறவைகளைப் பார்த்து மனநிம்மதியடைந்து தனது பயத்தை ஆரம்பித்தார்.

39) இப்பந்தியில் விபரிக்கப்பட்டவர் யார்?..............................
40) ஆலமரத்தடிக்கு அவர் ஏன் வந்தார்?..............................
41) ஆலமரம் எப்படி வளர்ந்திருந்தது?..............................
42) வயோதிபர் ஆலமரத்தில் என்னத்தை அவதானித்தார்?..............................
43) குஞ்சுகள் ஏன் கத்தியது?..............................
44) பின்வரும் சொற்களுக்கு ஒத்தசொல் தருக.
1. பயணம் :.............................. 2. நிலம் :..............................
45) பின்வரும் சொற்களுக்கு எதிர்ச்சொல் தருக.
1. வயோதிபர் :.............................. 2. நீண்ட :..............................
46) பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்குக.
1. சுமை 2. குஞ்சுகள்
47) இப்பந்தியில் இருந்து இரண்டு பெயர்ச் சொற்களை எழுதுக 1).............................. 2)..............................
48) இப்பந்தியில் இருந்து இரண்டு வினைச் சொற்களை எழுதுக. 1).............................. 2)..............................

# இலங்கையில் அடுத்த ஆண்டு சர்வதேச இளைஞர் திருவிழா



ஆசிய நாடுகளின் வரலாற்றில் முதல் தடவையாக சர்வதேச இளைஞர் திருவிழா அடுத்த வருடம் மே மாதம் 7 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை கொழும்பில் இடம்பெறவுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் டலஸ் அழகப்பெரும இதனைத் தெரிவித்தார்.

இலங்கை வரலாற்றில் முதற்தடவையாக பொது நலவாய இளைஞர் மாநாடு கடந்த மாதம் ஹம்பாந்தோட்டை சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது தமது இளைஞர்கள் சகல விதத்திலும் திறமைகளை வெளிப்படுத்தியிருந்தனர்.

இதனைக் கண்டு இம் மாநாடடில் பங்கு பற்றிய சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் வியந்து போனதோடு அடுத்த வருடம் இதனைவிடச் சிறப்பான ஒரு மாநாட்டை எவ்வாறு நடத்துவது எனவும் கூறியிருந்தனர். இந் நிலையில் ஆசிய வரலாற்றில் முதல் தடவையாக இடம்பெறவுள்ள சர்வதேச இளைஞர் திருவிழா அடுத்த வருடம் மே மாதம் 7 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இது பெருமைக்குரிய விடயமாகும். காரணம் இலங்கை வரலாற்று என்பதை விட ஆசிய வரலாற்றில் இடம்பெறும் முதல் நிகழ்வு இதுவாகும் என்றார்.



**கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்ற போது நல்லூர் பிரதேச சபை எதிர்கட்சித் தலைவரும் நல்லூர் பிரதேச அமைப்பாளருமான இ.நவீந்திரதாஸன் மாணவனுக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம்.**

# பாலியல் வல்லுறவுகளை தடுக்க பெற்றோரின் விழிப்புணர்வு அவசியம்

## -யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்-

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பெற்றோர்களின் விழிப்புணர்வு இல்லாத நிலைமையே இளம் பெண்கள் மற்றும் சிறுமிகள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்படுவதற்கான காரணமென யாழ் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரையில் அண்மைக் காலமாக கலாசார சீர்கேடுகள் ஏற்பட்டு வருகின்றன. சிறுமிகளை ஒரு சில முதியவர்கள் வல்லுறவுக்குட்படுத்துகின்ற சம்பவங்களையும் இளம் பெண்கள் காதல் என்ற வலையில் வீழ்ந்து வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்படும் சம்பவங்களையும் பத்திரிகைகளின் வாயிலாக அறியமுடிகிறது.

மேலும் குடாநாட்டின் இயல்பு நிலையை சீர்குலைக்கும் வகையில் மர்மமான முறையில் இறந்தவர்களின் உடல்களும் மீட்கப்படுகின்றன.

இவ்வாறான சம்பவங்கள் எமது கலாசாரத்தை பாதிக்கும் வகையிலேயே இடம்பெற்று வருகிறது. எனவே, பெற்றோர்கள் குறிப்பாக தாய்மார்கள் தமது பெண்பிள்ளைகள் குறித்து அக்கறையாக இருக்கவேண்டும்.

பெண்பிள்ளைகளை தனிமைப்படுத்துவதை தவிர்த்துக் கொள்ளுங்கள். எந்தநேரமும் அவர்களை உங்களது கண்காணிப்பில் வைத்துக் கொள்ளுங்கள். இவ்வாறான கலாசார சீர்கேடுகளைத் தடுத்து நிறுத்தும் முக்கிய பங்கு பத்திரிகைகளுக்கும் உண்டு. அவற்றின் ஊடாகவே எமது கலாசாரத்தை பாதுகாக்க முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கிறிஸ்தவக்கல்லூரி ஒளிவிழா

(கோப்பாய்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் 2013 ஆம் ஆண்டிற்கான ஒளிவிழா நிகழ்வுகள் கடந்த வாரம் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

மாணவன் செ.செல்ரன்ராஜ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக செபமாலைதாசர் சபையினைச் சேர்ந்த வண பிதா கி.கொட்வின் அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக இம்மானுவேல் ஆலய பங்குத்தந்தை வண பிதா ந.ஞானகாருண்யன், கோப்பாய் கோட்டக் கல்விப்பணிப்பாளர் சு.சற்குணராசா ஆகியோர் கலந்து கொண்டனர். (48)

# சீனித்தொழிற்சாலைகளினால் 1.5 பில்லியன் வருமானம்

செவனகலவில் உள்ள சீனித் தொழிற்சாலைகள் இரண்டில் மட்டும் 1.5 பில்லியன் வருமானம் கிடைத்துள்ளது. அத்தொகை நிரந்தர வைப்பில் இடப்பட்டுள்ளது என்று சீனித் தொழிற்சாலை அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் செனவிரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரன நேற்றுக் கேட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும்- திறைசேரிக்கும் 122 மில்லியன் ரூபா வழங்கியுள்ளோம். இலங்கை வங்கியில் 151.99 மில்லியன் ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலைகளில் நட்டம் ஏற்படவில்லையென்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# விசாரணை ஆரம்பம்



(கொழும்பு)

விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராக அவரது மனைவி செய்துள்ள முறைப்பாடு தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவினால் தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாகவும் தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் அதற்கு அமைச்சரே காரணம் எனவும் அமைச்சரின் மனைவியான ஆஷா விஜயந்தி பெரேரா பொலிஸ் மா அதிபருக்கு கடிதம் மூலம் முறைப்பாடு செய்திருந்தார்.

அமைச்சரின் மனைவியின் பாதுகாப்பு தொடர்பில் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து வருவதாக பொலிஸ் திணைக்களத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கலாபூஷணம் விருது வழங்கல் விழா

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 29 ஆவது முறையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கலாபூஷணம் விருது வழங்கல் விழா எதிர்வரும் 15ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு-07, றோயல் கல்லூரி நவரங்கஹல மண்டபத்தில் கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர் ரீ.பீ. ஏக்கநாயக்க தலைமையில் நடைபெறவுள்ளது.

இலங்கையில் சகல மாவட்டத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தி 194 சிங்கள கலைஞர்களும் 70 தமிழ் கலைஞர்களும், 25 முஸ்லிம் கலைஞர்களும் இக்கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இவர்களில் 42 பேர் நாடகத்துறையிலும் 21 பேர் இலக்கியத்துறையிலும் 64 பேர் ஓவியம் மற்றும் சிற்பத்துறையிலும் 15 பேர் இசைத்துறையிலும் 24 பேர் வேறு துறைகளிலும் கலாபூசணம் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

இம்முறை 80 வயதிற்கு மேற்பட்ட 20 கலைஞர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

55 சிங்கள கலைஞர்களும், யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி 33 கலைஞர்களும் விருதுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கலாபூஷணம் விருது பெறுவோர்க்கு பணப்பரிசும் மற்றும் சான்றிதழும் வழங்கப்படவுள்ளது. இதனை கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்து சமய அலுவல்கள் திணைக்களம், முஸ்லிம் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

# வானிலிருந்து விழுந்த மர்மப்பொருள்கள்



வானிலிருந்து மர்மப் பொருட்கள் சில நேற்று முன்தினம் விழுந்துள்ளதாக தம்புத்தேகம, இகிரிவெவ, வெல்யாய பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகள் தெரிவித்தனர்.

சுமார் பத்து ஏக்கர் வயற்காணிகளில் இவ்வாறான மர்மப்பொருட்கள் பரவலாக விழுந்துள்ளதாகவும் நீர் நிலைகளில் விழுந்தவை மிதந்து கொண்டிருந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

வானிலிருந்து விழுந்த மர்மப்பொருட்கள் தொடர்பில் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக அதிகாரிகள் ஸ்தலத்திற்கு விரைந்துள்ளதாக வானிலை ஆராய்ச்சி நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பிரதேசசெயலகம் தாக்கப்பட்டதை எதிர்த்து பணிப்பகிஷ்கரிப்பு

(மன்னார்)

மன்னார், நானாட்டான் பிரதேச செயலகம் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மாவட்டத்திலுள்ள 05 பிரதேச செயலகங்களில், நேற்று ஒரு மணிநேர அடையாளப் பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது.

முசலி, மன்னார், மடு, மாந்தை மேற்கு, நானாட்டான் ஆகிய பிரதேச செயலகங்களிலே நேற்று மு.ப 10 மணி தொடக்கம் 11 மணிவரையில் அடையாளப் பணி பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டதாக முசலி பிரதேச செயலாளர் செல்லத்துரை கேதீஷ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபரிடம் வினவியபோது, நானாட்டான் பிரதேச செயலகத்தின் மீது நேற்றுமுன்தினம் தாக்குதல் மேற்கொண்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும், தாக்குதலுடன் தொடர்புடையவர்களை கைது செய்ய வலியுறுத்தியும் பணி பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்த தாக்குதலுடன் தொடர்புடையவர்களை அடையாளம் காண்பதற்கு பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டதன் பின்னர் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பா.ஜ.க. ஆட்சியமைக்க நிபந்தனை அடிப்படையில் ஆதரவு

## ஆம் ஆத்மி கட்சி அறிவிப்பு



(புதுடில்லி)

இந்தியாவின் புதுடில்லியில் பா.ஜ.க. ஆட்சியமைக்க, நிபந்தனையின் அடிப்படையில் ஆம் ஆத்மி கட்சி ஆதரவு வழங்குவதற்கு பரிசீலிப்பதாக, அக்கட்சியின் மூத்த தலைவர் பிரசாந்த் பூஷன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் டிசம்பர் 29இல் ஜன் லோக்பால் மசோதாவை நிறைவேற்றுவது மற்றும் டில்லியில் ஜன சபை (பொது இடத்தில் பேரவைக் கூட்டம்) அமைப்பது தொடர்பாக எழுத்துப்பூர்வமாக உறுதியளித்தால், பா.ஜ.க.வுக்கு நிபந்தனையின் அடிப்படையில் ஆதரவு அளிப்பது குறித்து ஆம் ஆத்மி பரிசீலிக்கக் கூடும்.

இதுபற்றி ஆம் ஆத்மி கட்சி நிர்வாகிகளுடன் இன்னும் விவாதிக்கவில்லை என்றார்.

டில்லி சட்டசபை தேர்தலில் எந்தக் கட்சிக்கும் இறுதிப் பெரும்பான்மை கிடைக்காததால், அங்கு குடியரசுத்தலைவர் ஆட்சியை அமல்படுத்தும் சூழல் உருவாகி உள்ளது. கடந்த டிசம்பர் 4இல் நடைபெற்ற டில்லி தேர்தல் முடிவுகள் ஞாயிற்றுக்கிழமை வெளியானது. இதில், முதலிடம் பெற்ற பாரதிய ஜனதாக் கூட்டணி 32, புதிய கட்சியான ஆம் ஆத்மி 28, கடந்த மூன்று முறையாக ஆட்சி செய்த காங்கிரஸ் 8, ஐக்கிய ஜனதா தளம் மற்றும் சுயேச்சைக்கு தலா ஒரு இடம் என வெற்றி பெற்றுள்ளன.

மொத்தம் 70 தொகுதிகளைக் கொண்ட டில்லி சட்டசபையில் ஆட்சி அமைக்கத் தேவையான 36 இடங்கள் எந்தக் கட்சிக்கும் கிடைக்கவில்லை. எனவே, தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ள போதிலும், பாஜக ஆட்சி? அமைக்க உரிமை கோரவில்லை. என்பது குறிப்பிடத்தக்கது.

# பாரதீய ஜனதா கட்சியுடன் இணையப் போவதில்லை - எடியூரப்பா




பா.ஜ.க.வில் இணையும் எண்ணம் இல்லை என்று கர்நாடகத்தின் முன்னாள் முதல்வரும் கர்நாடக ஜனதாக்கட்சியின் தலைவருமான எடியூரப்பா தெரிவித்துள்ளார்.

பெங்களூரில் உள்ள நட்சத்திர விடுதியில் கர்நாடக ஜனதாக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் எடியூரப்பாவின் தலைமையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் அவர் மேலும் தெரிவிக்கையில்:

"பா.ஜ.க.வில் என்னை இணையுமாறு அதிகாரப்பூர்வமாக எனக்கு கடிதம் வரவில்லை.அதே போல நான் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பங்கேற்பது குறித்து அத்வானிக்கு எழுதிய கடிதத்துக்கும் இன்னும் பதில் வரவில்லை.எனவே மீண்டும் ஒருமுறை உறுதியாக சொல்கிறேன். பா.ஜ.க.வில் க.ஜ.க.வை இணைப்பது பற்றி வெளிவரும் தகவல்கள் அனைத்தும் தவறானவை. எனது உடம்பில் உறுதி இருக்கிறது. அதனால் இன்னும் 10 ஆண்டுகளுக்கு மாநிலம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கட்சியை வளர்ப்பேன். கர்நாடக ஜனதாக் கட்சி ஆட்சியை கைப்பற்றும்வரை தீவிரமாக உழைத்துக்கொண்டிருப்பேன் என்றார்.

## உலகச் செய்திகள்

# இஞ்சிப்பாண் வீடு



உலகிலேயே மிகப்பெரிய 22அடி நீளமான இஞ்சிப்பாண் வீட்டை உருவாக்கி அமெரிக்க டெக்ஸாஸ் மாநிலத்திலுள்ள பிரையன் நகரைச் சேர்ந்த மக்கள் உலக சாதனை படைத்துள்ளனர்.

5 பேரைக் கொண்ட குடும்பம் வசிக்கக்கூடிய அளவு பெரிதான இந்த உண்ணக்கூடிய வீடு 35மில்லியன் கலோரி சக்திப் பெறுமானம் உடையதாகும்.மேற்படி இஞ்சிப்பாண் வீட்டை அமைப்பதற்கு 4,200 இறாத்தல் மா, 3,000 இறாத்தல் சீனி, 1, 800 இறாத்தல் வெண்ணெய், 7,200 முட்டைகள், 22,304 இனிப்புகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

இதனை உலகின் மிகவும் பெரிய இஞ்சிப்பாண் இல்லமாக் அங்கீகரித்து கின்னஸ் உலக சாதனை பதிவேட்டில் பதிந்து சான்றிதழை வழங்கியுள்ளனர்.இந்த வீட்டைப் பார்த்து இரசிப்பதற்கு ஒவ்வொரு இரவும் 600 இற்கும் மேற்பட்ட மேற்பார்வையாளர்கள் வருவதாக தெரிவிக்கப்படுகிறது.மேற்படி வீடானது காட்சிக்கு வைக்கப்பட்டு ஒரு வாரத்துக்கும் குறைந்த காலப் பகுதியில்150,000 அமெரிக்க டொலரை வருமானமாக ஈட்டியுள்ளது.இந்தப் பணம் அந்நகரிலுள்ள சென் ஜோசப் சுகாதார முறைமைக்கு நன்கொடையாக வழங்கப்படவுள்ளது.

# மீண்டும் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார் அன்னா ஹசாரே




நாடாளுமன்றத்தில் லோக்பால் மசோதாவை நிறைவேற்றக் கோரி மகாராஷ்டிரத்தின் ராலேகான் சித்தி கிராமத்தில் நேற்று மீண்டும் காலவரையற்ற உண்ணாவிரதத்தைசமூக ஆர்வலர் அன்னாஹசாரே ஆரம்பித்துள்ளார்.

இதுகுறித்து டில்லியில் செய்தியாளர்களுக்கு சில தினங்களுக்கு முன்னர் அவர் அளித்த பேட்டியில் லோக்பால் மசோதாவை அமல்படுத்துவதாகக் கூறி இரண்டு ஆண்டுகளான பின்பும் பயன் இல்லை. மத்திய அரசு எனக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை.

இதைக் குறிப்பிட்டு நான் பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளேன். லோக்பால் மசோதாவை நிறைவேற்ற வலியுறுத்தி மீண்டும் காலவரையற்ற உண்ணாவிரதம் மேற்கொள்ள இருக்கிறேன்.. 'ஜந்தந்தர மோர்ச்சா' என்ற புதிய அமைப்பு உண்ணாவிரதத்தை நடத்தும். இந்த அமைப்பு அரசியல் சார்பற்றது, எதிர்காலத்தில் அரசியல் கட்சியை உருவாக்காது. எந்தவொரு அரசியல் கட்சிக்கு ஆதரவு அளிககாது என்றார்.

லோக்பால் போராட்டத்துக்கு ஆதரவு திரட்ட 6 மாநிலங்களுக்கு சென்று வந்துள்ள 75 வயதான ஹசாரே, இந்த முறை தனது சொந்த கிராமமான ராலேகான் சிட்டியில் உண்ணாவிரதத்தைத் தொடங்கியுள்ளார். கடந்த 2011 ஆகஸ்டில் டில்லியின் ராம்லீலா மைதானத்தில் ஹசாரே காலவரையற்ற உண்ணாவிரதம் இருந்தார். அப்போது அவருக்கு நாடு முழுவதிலும் இருந்து ஆதரவு பெருகியது. மத்திய அரசு அவரிடம் பேச்சுவார்த்தை நடத்தி லோகபால் மசோதாவை அமல்படுத்துவதாக வாக்குறுதி அளித்தது. இதையடுத்து 16 நாள்களா இருந்த உண்ணாவிரதத்தை ஹசாரே முடித்துக் கொண்டார். அதன்பின் மக்களவையில் நிறைவேற்றப்பட்ட லோக்பால் மசோதா மாநிலங்களவையில் நிறைவேற்றப்படவில்லை. இந்த மசோதா கடந்த ஆண்டு மே மாதம் முதல நாடாளுமன்றக் குழுவின் பரிந்துரைக்காகக் காத்திருக்கிறது. இதை உடனடியாக குளிர்கால கூட்டத் தொடரிலேயே நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தி ஹசாரே மீண்டும் உண்ணாவிரதத்தை நேற்று ஆரம்பித்துள்ளார்.

# கூடங்குளம் அருகே மீண்டும் குண்டுவெடிப்பு



கூடங்குளத்தில் இருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ள கூத்தன்குழி மீனவர் கிராமத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 2 உள்ளூரில் தயாரிக்கப்பட்ட வெடிகுண்டுகள் வெடித்தன. இதனால்,அப்பகுதி மக்கள் பீதியடைந்துள்ளனர்.

கூடங்குளம் அணுமின் நிலையம் அமைந்துள்ள இடத்தில் இருந்து 8 கி.மீ. தொலைவில் கூத்தன்குழி கிராமத்தில், இருதரப்பினருக்கும் இடையே பல ஆண்டுகளாக மோதல் ஏற்பட்டு வருகிறது. இதற்காக ஒரு தரப்பினர், மற்றொரு தரப்பினரை மிரட்டவும், தாக்குதல் நடத்தவும் இங்கு உள்ளூரில் தயாரிக்கப்பட்ட வெடிகுண்டுகளை பயன்படுத்திவருகின்றார்.

கூடங்குளம் அணுஉலை அருகே, 2 கி.மீ. தொலைவில் உள்ள இடிந்தகரை சுனாமி காலணிப்பகுதியில் கடந்த மாதம் 26ஆம் திகதி இரவு நாட்டு வெடிகுண்டுகள் வெடித்ததில் வீடுகள் இடிந்து தரை மட்டமாயின. இதில் 7 பேர் உயிரிழந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# "லிட்டில் இந்தியா" வில் கலவரம்




சிங்கப்பூரில் தமிழர் ஒருவர் தனியார் பேருந்தில் மோதி உயிரிழந்ததால், தெற்காசியர்கள் கலவரத்தில் இறங்கினர். கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு பெரும் வன்முறை வெடித்தது. இச்சம்பவம் தொடர்பாக பேர் 40கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 8 ஆம் திகதி இரவு, லிட்டில் இந்தியாப் பகுதியில் சக்திவேல் குமாரவேலு(33) என்பவர் தனியார் பேருந்தில் மோதி விபத்துக்குள்ளானதில் உயிரிழந்தார். இதையடுத்து அப்பகுதி மக்கள் கையில் தீப்பந்தம் ஏந்தி கலவரத்தில் ஈடுபட்டனர்.

கலவரத்தின் போது, 3 பொலிஸ் வாகனங்கள், ஒரு இரு சக்கர வாகனம், ஒரு அம்புலன்ஸ் உள்ளிட்ட வாகனங்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. கடந்த 40 ஆண்டு கால சிங்கப்பூர் வரலாற்றில் இது போன்ற மோசமான வன்முறை ஏற்பட்டதில்லை. இதில், 10 பொலிஸார் உட்பட 18 பேர் காயமடைந்தனர். இக்கலவரத்தில் 400இற்கும் அதிகமானவர்கள ஈடுபட்டனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆயுதம் ஏந்தி கலவரத்தில் ஈடுபடுதல் என்ற பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்த பொலிஸார் தெற்காசியாவைச் சேர்ந்த 40 பேரைக் கைது செய்துள்ளனர். இதில் 24 பேர் இந்தியர்கள்.

# - மூன்று நாட்களுக்கு - மக்கள் அஞ்சலிக்காக மண்டேலாவின் ஊர்வலம்



தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதியும் கறுப்பின மக்களின் சுதந்திரப் போராட்ட வீரருமான நெல்சன் மண்டேலாவின் பூதவுடல் இன்று முதல் வெள்ளிக்கிழமை வரை தொடர்ச்சியாக 3 நாட்கள் மக்களின் அஞ்சலிக்காக ஊர்வலமாக கொண்டுசெல்லப்படவுள்ளது.

தென்னாபிரிக்காவின் பிரிட்டோரியா பிராந்திய நகரங்களில் இந்த ஊர்வலம் இடம்பெறவுள்ளது. இதன்மூலம், மில்லியன் கணக்கான மக்கள் தமது மண்டேலாவுக்கு அஞ்சலி செலுத்த வாய்ப்பு கிடைக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. நெல்சன் மண்டேலாவின் இறுதிக்கிரிகைள் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தென்னாபிரிக்க அரசாங்கத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படவுள்ளது.

# யாழ்.மாநகரப் பகுதிக்கான அபிவிருத்தி; விசேட ஆலோசனைக் கூட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் எதிர் காலத்தில் முன்னெடுக்க வேண்டிய திட்டங்களை ஆராயும் நோக்கில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஆதரவாளர்களுடனான சந்திப்பொன்று கட்சியின் யாழ்.அலுவலகத்தில் அதன் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வி.கே.ஜெகன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வதியும் கட்சியின் 100 இற்கும் மேற்பட்ட ஆதரவாளர்கள், கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்ட இச்சந்திப்பில் யாழ். மாநகர சபை முதல்வர் உட்பட சபையின் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

கட்சிப்பணிகள், எதிர்கொண்டுள்ள நெருக்கடிகள், இவற்றை எதிர்கொள்ளும் வகையில் எதிர் காலத்தில் முன்னெடுக்க வேண்டிய திட்டங்களை விளக்கி ஒருங்கிணைப்பாளர் ஜெகன் உரையாற்றினார்.

நெருக்கடி மிகுந்த கால கட்டத்தில் மக்களுக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பல இக்கட்டான நிலைமைகளின் மத்தியிலும் ஆற்றிய பணிகளை நினைவு கூர்ந்து உரையாற்றிய கட்சியின் ஒருங்கிணைப்பாளர், இனி வருங்காலங்களிலும் மக்களின் நலனை கவனத்தில் கொண்டு கட்சி தனது பணிகளை திறம்பட முன்னெடுக்குமென அவர் குறிப்பிட்டார்.

போரில் பாதிப்புக்குள்ளான எமது மக்களின் புனர்வாழ்வுக்காக நாம் மேற்கொண்ட பணிகளை தேசியத்தின் பெயரால் மறுதலிக்க முற்படும் தமிழ் கூட்டமைப்பினரின் பிரசாரங்களுக்கு வசதியாக குடாநாட்டில் தொழிற்படும் ஊடகங்களும் சேர்ந்துகொண்டு எம்மீது மேற்கொள்ளும் தவறான பிரசாரங்களால் எமது மக்கள் பிழையாக வழி நடத்தப்படும் நிலைமையைத் தவிர்க்க அனைத்து தரப்பினரதும் கூட்டான ஒத்துழைப்புக்கு இச்சந்திப்பில் ஜெகன் வேண்டுகோள் விடுத்தார்.

கடந்த காலங்களில் யாழ்.மாநகரசபை எல்லைக்குள் வதியும் மக்களுக்காக மேற்கொண்ட நலத்திட்டங்களை விளக்கிய அவர், இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம், காணி உரிமங்களை பெறுவதில் மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள், இன்னும் உட்கட்டமைப்பு வசதிகள் முறையாக பூர்த்தி செய்யப்படாததால் மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை மேலான கவனத்தில் கொண்டு தன்னால் முடிந்தவரை குறுகிய காலத்தில் அவற்றுக்கு தீர்வைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்தார்.

விடுதலைக்காக புறப்பட்ட போராட்ட அமைப்புக்களில் இறுதி வரை மக்களுக்காக பணியாற்றுவதில் நிலையான தொடர்ச்சியொன்றை ஈ.பி.டி.பி. கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மகேஸ்வரி நிதியத்தின் இணைப்பாளர் ரஜீவ் உரையாற்றுகையில், தேசியத்தின் பெயரால் அரசியல் செய்வதற்கு வசதியாக வடக்கில் இராணுவம் நிலை கொண்டிருப்பதே தமிழ்க் கூட்டமைப்பினரின் உள்ளூர விருப்பமெனவும் அவர் குறிப்பிட்டார்.

இச்சந்திப்பில் யாழ்.மாநகர சபையின் கடந்தகால திட்டங்களை விளக்கி உரையாற்றிய முதல்வர், பல்வேறு திட்டங்களை தாம் முன்னெடுத்திருந்த போதும் கடந்த மாகாண சபை தேர்தலில் போதிய ஆதரவை வழங்க முடியாத அளவிற்கு மக்கள் தவறாக வழிநடத்தப்பட்ட நிலைமைகளையும் முதல்வர் நினைவு கூர்ந்தார்.

காணிஉரிமங்களை பெற முடியாததால் தமக்கான வீட்டுத்திட்டங்களை பெற்றுக்கொள்வதில் தேவாபுரம் மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிக்கு 15 நாட்களுக்குள் உரிய தீர்வை பெற்றுத்தருவதாக இச்சந்திப்பில் உறுதியளித்த யாழ் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு இணைப்பாளரான சுதர்சன் இதுவிடயத்தில் மக்களின் நிலையுணர்ந்து உரிய காலத்தில் தீர்வைப் பெற்றுத்தர ஈ.பி.டி.பி. தன்னாலான உதவிகளை முடிந்தவரை முன்னெடுக்குமெனவும் அவர் குறிப்பிட்டார்.

இச்சந்திப்பில் கட்சியின் ஆதரவளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்த யாழ்.மாநகரசபை உறுப்பினர் றீகன், தமது பிரதேச எல்லைக்குள் கட்சியின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களை விளக்கியதுடன், குறைநிலையிலுள்ள திட்டங்களைக் கட்சியின் ஒத்துழைப்புடன் அடுத்த ஆண்டில் முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வாக்காளராக பலதடவைகள் பதிவு செய்தும் இதுவரை வாக்காளர் அட்டைகள் கிடைக்காத மக்களின் பிரச்சினைகள், குடியிருப்புக்களில் வெள்ளப் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ள மக்களின் பிரச்சினைகள், வீடமைப்பு, வீதிகள் நிர்மாணம், போன்றவற்றில் குறைநிலையிலுள்ள திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாததால் மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களும் இச்சந்திப்பில் கவனத்தில் கொள்ளப்பட்டன.

கடந்த காலங்களை போலல்லாது, இனிவருங்காலங்களில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனையுடன் மக்களின் தேவைகளை உடனுக்குடன் கவனத்தில் கொண்டு தீர்வுகாணும் நோக்கில் கிராம மட்டத்திலான சந்திப்புகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் ஒங்கிணைப்பாளர் ஜெகன் மேலும் தெரிவித்தார்.

யாழ்.பிரதேசத்தின் பின்தங்கிய மக்களுக்காக முன்னுரிமைப்படுத்த வேண்டிய திட்டங்களை இனங்கானவென ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இச்சந்திப்பில், சமகாலத்தில் கட்சி எதிர்கொண்டுள்ள நெருக்கடிகள், அவற்றுக்கு தீர்வாக கவனத்திற் கொண்டு முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி பல தரப்பினரும் தமது ஆலோசனைகளை முன்வைத்தனர்.

## வடமாகாண...

இத்துடன் கல்வி, கலை பண்பாட்டலுவல்கள் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சுக்கு 6,424,336 மில்லியன் மீண்டுவரும் செலவீனமாகவும் 583,500 மில்லியன் மூலதனச் செலவீனமாகவும், சுகாதாரம் மற்றம் சுதேச வைத்தியத்துறை அமைச்சுக்கு 3,532,957 மில்லியன் மீண்டு வரும் செலவீனமாகவும், 422,800 மில்லியன் மூலதனச் செலவீனமாகவும், மீன்பிடி, போக்குவரத்து வர்த்தக வாணிப மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சுக்கு 122,499 மில்லியன் மீண்டுவரும் செலவீனமாகவும், 60,400 மில்லியன் மூலதனச் செலவீனமாகவும், விவசாயம், கமநலசேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சுக்கு 581,980 மில்லியன் மீண்டுவரும் செலவீனமாகவும், 125,500 மில்லியன் மூலதனச் செலவீனமாகவும் வடமாகாண சபையின் நிதி ஒதுக்கீடாக சமர்ப்பிக்கப்பட்ட நிலையில்,

செயலக வாரியான செலவீன ஒதுக்கீடுகளுக்கான குழுநிலை விவாதத்தில் இவ் ஒதுக்கீடுகள் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன்,

அமைச்சு ரீதியான விவாதங்கள் இன்று இடம்பெறும். (இ)

## பரீட்சை...

வித்துள்ளனர். இதேவேளை, இவருடன் இரவு உணவு உட்கொண்ட பொலிஸ அதிகாரி ஒருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. மேற்படி அதிபர் நேற்று முன்தினம் இரவு உண்ட உணவு விஷமானதால் இச்சம்பவம் இடம்பெற்றிருக்கலாமோ என சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கரை கடந்தது...

ஈசானமுனை கடற்பரப்பு தொடர்ந்தும் கொந்தளிப்பாக காணப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் வரையான 450 கிலோ மீற்றர் கடற்பகுதியில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என காலநிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

## ஐ.நா.அறிக்கையாளர்களை...

மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகர், உள்நாட்டில் இடம் பெயர்ந்தோரின் மனித உரிமைகளுக்கான ஐ.நா தூதுவர் ஆகியோர் இலங்கை வந்ததை பாராட்டுவதாக இலங்கையிலுள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தூதுவர்களின் அமைப்பு கூறியுள்ளது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கான மேல் நடவடிக்கை எடுக்க இலங்கை அரசாங்கத்துக்கு ஊக்கமளிப்பதாகவும் தெரிவித்த அந்த அமைப்பு வடமாகாண சபை தேர்தல் நடந்ததையும் பாராட்டியுள்ளது.

நீதித்துறையின் சுயாதீனம் மற்றும் வினைத்திறன், சட்டத்தின் ஆட்சி, கருத்துச் சுதந்திரம், சமய சகிப்புத்தன்மை, சிறுவர் மற்றும் பெண்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகம் என்பன தொடர்பாக சவால்கள் உள்ளதாகவும் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## சபை நடுவே..

தும் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்ற வண்ணம் எதிர்ப்பை வெளிக்காட்டினர். எதிர்க்கட்சியினர் பேசாது மௌனமாக இதை அவதானித்தவண்ணம் இருந்தனர்.

'இதன்போது, தமிழ் இனப்படுகொலை, மனித உரிமை மீறல்களுக்கு சர்வதேச விசாரணை தேவை, சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் தமிழ் இனம் சர்வதேச சமூகத்திடம் நீதி கோரி நிற்கிறது, இராணுவத்திடம் சரணடைந்த போராளிகள் எங்கே? அரசே பதில் சொல், வலிகாம் வடக்கில் கோவில்கள், வீடுகள், பாடசாலைகள், கடைகள் இடிக்கப்படுவதை உடனடியாக நிறுத்து, காணாமற் போனவர்கள் எங்கே? அரசே பதில் சொல்,

வலிகாமம் வடக்கில் 6,300 ஏக்கர் காணிகளைச் சுவீகரிப்பதை உடனே நிறுத்து. தமிழர் தாயகத்தில் நடைபெறும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை உடனடியாக நிறுத்து, முதலமைச்சரைத் திருப்பி அனுப்பிய இராணுவ ஆட்சிக்கு முடிவு கட்டு, இராணுவமே வெளியேறு, தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய், போன்ற சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர். (இ)

## இரணைமடு...

டத்துக்கான பங்காளி அமைப்புக்களான ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஆகியவற்றின் அதிகாரிகள் பங்கு பற்றிய விசேட கூட்டம் ஒன்று நேற்று கொழும்பில் நடைபெற்றது.

இதன்போது இத்திட்டம் தாமதமடைவதற்கான காரணங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டன.

சுமார் 20,000 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த இச் செயற்திட்டத்துக்கு ஆசிய ,அபிவிருத்தி வங்கி நிதி வழங்க முன்வந்துள்ளது.

இன்னும் இரு வாரங்களில் விவசாய அமைப்புக்களின் ஒப்புதல் இவ்விடயத்துக்கு கிடைக்காவிட்டால் தம்மால் நிதி உதவி வழங்க முடியாது இருக்கும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகள் நேற்றைய கூட்டத்தின் போது திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டனர்.

இதனால் மேற்படி பாரிய செயற்திட்டம் கைநழுவிப் போகும் அபாயம் இப்போது தோன்றியுள்ளது.

## கடலில் மூழ்கி...

குறித்த நபரும், இன்னொருவரும் நேற்று முன்தினம் பிற்பகல் கடலுக்குச் சென்ற சமயம் கடற்பகுதியில் இருந்து 150 கிலோமீற்றர் தொலைவில் ஏற்பட்ட அலை எழுந்ததை அடுத்து படகு சமநிலை தளர்ந்து குறித்த நபர் கடலுக்குள் வீழ்ந்ததாகவும், இவருடன் சென்ற மற்றைய நபர் நீந்திக் கரையை அடைந்துள்ளார்.

இதனையடுத்து மறுநாள் நேற்றுக் காலை மீன் வலையில் சிக்குண்டு குறித்த நபர் இறந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறை பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டதுடன், மரண விசாரணை அதிகாரி பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (116)

## அகாஷியுடன்...

விதம் மற்றும் அது தொடர்பான சிக்கல்கள் பற்றி ஜப்பான் நாட்டின் விசேட பிரதிநிதியுடன் கலந்துரையாடினேன்.

நீதியமைச்சினால் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பற்றியும் கருத்து பாரிமாற்றம் செய்து கொண்டோம்.

விசேடமாக அடுத்த வருட மார்ச் மாதத்திற்குள் சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பதற்கான சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் படவுள்ளது.

அதேபோல புலனாய்வு விசாரணை மற்றும் முடிவு பெறாத வழக்குகள் துரிதமாக முடிவுக்கு கொண்டு வருவது பற்றியும் யசூசி அகாஷியுடனான சந்திப்பில் பேசப்பட்டது.

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் இனங்களுக்கிடையே சகவாழ்வு மலர்ந்து கொண்டிருப்பது பற்றியும் அவதானத்தை செலுத்தினோம்.

இடம்பெயர்ந்தோருக்கான சட்டங்கள் மற்றும் மீள்குடியமர்த்தலில் உள்ள சிக்கல்கள் குறித்து பேசினோம்.

ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டில் ஜப்பானின் ஆதரவு இலங்கைக்கு கிடைக்கும் என யசூசி அகாஷி உறுதியளித்துள்ளார் என அமைச்சர் ஹக்கீம் குறிப்பிட்டார்.

# மாற்றுத்திறனாளிகளுக்கு விசேட உதவித்திட்டம்

## செயலமர்வு நேற்று ஆரம்பம்

(கொழும்பு)

சமூக சேவைகள் அமைச்சு மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்தம் வழங்கப்படும் மகிந்த சிந்தனை திட்டத்தின் மூலமான 3000 ரூபா உதவு தொகைக் கொடுபபனவு தொடர்பாக முன்னேற்றகரமாக நடைமுறைப்படுத்துவது தொடர்பான செயலமர்வு அநுராதபுரம் தலாவவில் அமைந்துள்ள சமூக சேவைகள் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

இதில் வட மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த சமூக சேவைகள் அதிகாரிகள், சமூக சேவைகள் அபிவிருத்தி அதிகாரிகள், சமூக அபிவிருத்தி அதிகாரிகள் ஆகியோர் பங்குபற்றுகின்றனர். அத்துடன் திருகோணமலை மாவட்டத்திலுள்ள இந்த வகை அதிகாரிகளும் பங்குபற்றுகின்றனர்.

இச் செயலமர்வு இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்விற்கான நிதியை உலக வங்கி சமூக சேவைகள் அமைச்சிற்கு வழங்கியுள்ளது. சமூக சேவைகள் அமைச்சு தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் மூலமாக இச்செயலமர்வை நடத்துகின்றது.

சமூக சேவைகள் அமைச்சின் திட்டப்பணிப்பாளர்களில் ஒருவரான எஸ்.ராமமூர்த்தி, தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் ஆலோசகர் கலாநிதி றிட்லி ஜெயசிங்க ஆகியோர் இச்செயலமர்விற்கான வளவாளர்களாக கலந்து கொள்கின்றனர்.

சமூக சேவைகள் அமைச்சு நாட்டிலுள்ள அனைத்து பிரதேச செயலகங்கள் தோறும் 50 மாற்றுத் திறனாளிகளுக்கு மாதாந்தம் 3000 ரூபா உதவித் தொகையை வழங்கி வருகின்றது. இதில் 14 பேர் அமைச்சின் நிதி மூலமாகவும், மிகுதி 34 பேரும் உலக வங்கியின் நிதியில் 'திரிபியச' எனும் திட்டத்தின் மூலமாகவும் நிதியைப் பெற்று வருகின்றனர்.

இத்திட்டத்தை எதிர்வரும் 2014 ஆம் ஆண்டில் சிறப்பாக நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும், திட்டத்தின் அமுலாக்கல் தொடர்பான பிரச்சினைகளை ஆராயும் பொருட்டும் இச் செயலமர்வில் முதன்மை கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. (90)

## தூக்கில் தொங்கிய நிலையில் சடலம் மீட்பு

(வடமராட்சி)

கரணவாய் மத்தி கரவெட்டி பகுதியில் இளைஞர் ஒருவர் வீடொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற நிலையில் நேற்று அதிகாலை கண்டுபிடிக்கப்பட்டது. இதில் அதே பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஜெயராஜ் (வயது - 26) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த நபர் முன்னரும் மருந்து அருந்தியுள்ளதாகவும், இதன் பின்னர் நேற்று முன்தினம் வீட்டின் முன் அறையில் தூக்கில் தொங்கி தற்கொலை செய்துள்ளதாக உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நெல்லியடிப் பொலிஸாருக்கு தெரியவந்ததையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், மரணவிசாரணை அதிகாரி பிரேத பரிசோதனைக்காக பருதத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

பிரதே பரிசோதனையின் பின்னர் சடலம் நேற்று பிற்பகல் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (116)

## காயமடைந்தவர் மரணம்

(வடமராட்சி)

நெல்லியடி கலிகைச்சந்தியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற ஆட்டோ, கன்ரர் விபத்தில் காயமடைந்த மூவரில் ஒருவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

ஆட்டோ சாரதியான ஆண்டி சுந்தரம் (வேலன்) (வயது - 60) என்பவரே யாழ்போதனா வைத்தியசாலையில் அதிமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார். (116)

## அங்கஜனுக்கு விடுப்பு அனுமதி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் அங்கஜன் இராமநாதனுக்கு மேலும் ஒரு மாதகால விடுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை மாகாண சபை அமர்வுகளில் கலந்துகொள்ளாத எதிர்க்கட்சி உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மேலும் ஒரு மாதகால விடுப்பு கோரியிருப்பதாகவும், அதனை சபையில் தெரிவித்த தவிசாளர் இது விடயத்தில் ஆட்சேபனை கோரப்பட்டது. எனினும் ஆட்சேபனை தெரிவிக்காத பட்சத்தில் அங்கஜன் இராமநாதனுக்கான விடுப்பு வழங்கப்பட்டது.

## மன்னாரில் நேற்று கண்டனப் பேரணி

(கொழும்பு)

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று மன்னார் பிரஜைகள் குழுவின் தலைமையில் மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களிலும் காணாமற்போனவர்களுடைய உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத்துடன் இணைந்து காணாமற்போனவர்களைக் கண்டுபிடிக்கக் கோரி கண்டன ஊர்வலம் ஒன்றை மேற்கொண்டனர்.

குறித்த நிகழ்வு நேற்றுக் காலை மன்னாரிலும் இடம்பெற்றது. காலை 11.00 மணியளவில் மன்னார் பிரஜைகள் குழுவின் அலுவலகத்தில் இருந்து குறித்த ஊர்வலம் ஆரம்பமாகி மன்னார் மாவட்டச் செயலகத்தை சென்றடைந்தது.

இதன் போது மன்னார் மாவட்டத்தில் காணாமற்போனவர்களது உறவினர்கள் நூற்றுக் கணக்கானவர்கள் குறித்த ஊர்வலத்தில் கலந்து கொண்ட னர். இதன் போது தேசிய மீனவ ஒத்துழைப்பு பேரவையின் தலைவர் ஹேமன் குமார, வாழ்வதற்கான உரிமை அமைப்பின் தலைவர் பிரிட்டோ பெனாண்டே, மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இம்மானுவேல் செபமாலை, மன்னார் பிரஜைகள் குழுவின் செயலாளர் ஜே.பி. சிந்தாத்துரை, அருட்தந்தை எஸ். நேரு, அருட்பனி எஸ்.டெரன், மற்றும் காணமாற் போன சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

குறித்த ஊர்வலம் மன்னார் மாவட்டச் செயலகத்தை சென்றடைந்தது. பின் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை. எஸ்.தேசப்பிரிய முன்னிலையில் ஜனாதிபதிக்கு எழுதப்பட்ட மகஜர் வாசிக்கப்பட்டு கையளிக்கப்பட்டது. இதன்போது மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நந்தினி ஸ்ரான்லி டி மெல் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பதில் பொலிஸ் அதிபராக காமினி

பதில் பொலிஸ் மா அதிபராக சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் பி.கே.காமினி நவரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் என். கே.இலங்கக்கோன் இன்று மலேஷியாவுக்கு புறப்பட்டுச் சென்றுள்ள நிலையிலேயே, பதில் பொலிஸ் மா அதிபராக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மலேஷியாவில் நடைபெறவுள்ள பொலிஸ் நிகழ்வொன்றில் கலந்துகொள்வதற்காகவே பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் மலேஷியாவுக்கு புறப்பட்டுச் சென்றுள்ளார்.

## தயாராகிறது செங்கோல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபைக்கான செங்கோல் தயாரிக்கப்பட்டுவருவதாக தவிசாளர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

வடமாகாண சபைக்கான செங்கோல் உரிய அதிகாரிகள் மற்றும் உறுப்பினர்களின் ஆலோசனைக்கமைய தற்போது தயாரிக்கப்படுவதாகவும், அடுத்த அமர்வின்போது அது சபைக்கு எடுத்துவரப்படும் என்றும் தவிசாளர்தெரிவித்தார்.

அத்துடன் தவிசாளருக்கான கோல உடை உருவாக்கப்பட்ட நிலையில், அதனை நேற்று தவிசாளர் அணிந்திருந்தார்.

# அதிகாரப் பரவலாக்கத்துக்கு, 13 ஆவது திருத்தம் போதாது

(யாழ்ப்பாணம்)

வடக்கிற்கான முழுமையான அதிகாரப் பரவலாக்கத்திற்கு இப்போதுள்ள 13 ஆவது திருத்தச்சட்டம் போதுமானதாக இல்லை என்றும், இதனாலேயே நாம் தமிழர்களின் விமோசனத்துக்காக சர்வதேசத்தை நம்ம வேண்டிய சூழல் தோன்றியது என்றும் வடக்கு மாகாண முதல்வர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.


வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் கலந்து கொண்டு உரைநிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடமாகாண பிரதம செயலாளர், ஜனாதிபதியால் முதலமைச்சரின் அனுசரணையுடன் நியமிக்கப்பட வேண்டும். எனினும் அவ்வாறு இடம்பெறாமல் தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்பட்ட எமது உரிமைகள் மறுக்கப்பட்டு பிரதம செயலாளர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஒரு இராணுவத்தின் அதிகார வேகத்தில் ஆளுநரின் ஆட்சியில் வடமாகாண சபை நடைபெற்று கொண்டிருக்கின்றது. வடமாகாண அலுவலர்கள் எங்கே நாங்கள் ஆளுநரின் கோபத்திற்கு ஆளாகி விடுவமோ என்ற பயத்திலிருக்கின்றார்கள்.

இராணுவத்தை வடமாகாணத்தில் தொடர்ந்து நிலைத்து வைத்தால் வடமாகாண மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியாது. 2012ஆம் ஆண்டு ஐ.நா.வின் தீர்மானத்தில் முக்கிய நோக்கம் வடகிழக்கு மாகாண மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுவதாக இருந்தது.

ஆனால் அதற்கேற்ற விதத்தில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றவா என்பதில் சந்தேகம் எழுந்துள்ளது. 2009ஆம் ஆண்டு மே மாதத்தில் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திற்கு ஜனாதிபதி கொடுத்த வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட்டன.



அண்மையில் வந்த வெளிநாட்டு தலைவர்கள் அனைவரும் வட, கிழக்கு மாகாணங்களுக்கு போதிய அதிகார பரவலாக்கம் செய்யப்பட வேண்டும் என்ற விதத்தில் கருத்துக்கள் வெளியிட்டிருந்தார்கள்.

ஆனால் இவ்அதிகார பரவாக்கத்திற்கு தற்போது இருக்கும் 13 ஆவது திருத்தச் சட்டம் போதியளவாக அமைய மாட்டாது. அடுத்த கட்டமாக நாங்கள் சர்வதேச சமூகத்தையே நம்பவேண்டியுள்ளது. அவர்கள் மூன்று மாதங்களுக்குள் பல நன்மைகளை அளிப்பதாக எமக்கு உறுதியளித்துள்ளனர். என்று அவர் தெரிவித்தார்.

## சிலாவத்தையில் சடலம் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு சிலாவத்தைப் பகுதியில் நபர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் குறித்த நபரின் வீட்டுக்கு பக்கத்திலுள்ளபுதிதாக கட்டப்பட்டுள்ள வீடொன்றிலே இவர் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் இதே பகுதியைச் சேர்ந்த தர்மகுலசிங்கம் பிரகாஷ் (வயது - 29) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். முல்லைத்தீவு பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டதுடன், முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சடலத்தை பார்வையிட்டதுடன், பிரேத பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (125)

## போர் புரிந்த படையினருக்காக ஜெனிவாவில் குரல் கொடுப்பேன்

### சரத் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறும் மனித உரிமை ஆணைக்குழுவின் மாநாட்டில் இலங்கை சார்பில் குரல் கொடுக்க தான் தயாராக இருப்பதாக முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனநாயகக் கட்சியின் தலைவருமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

மனித உரிமை ஆணைக்குழுவில் இராணுவத்தினருக்காக குரல் கொடுத்து அவர்களை காப்பாற்ற தயார். எனினும் சில நபர்களை காப்பற்ற நான் தயாரில்லை. சட்ட ரீதியான இலங்கை அங்கம் வகிக்கும் அமைப்புகளின் சட்டத்திட்டங்கள் அனைத்தும் இலங்கைக்கும் பொருந்தும்.

இலங்கையில் போர் நடைபெற்ற போது தவறுகள் இடம் பெற்றனவா என்பதை அறிந்து கொள்ளும் தேவை எவருக்காவது இருந்தால், இராணுவத்தின் சார்பில் ஆஜராகி நாட்டின் கௌரவத்தை பாதுகாக்க நான் தயாராக இருக்கின்றேன்.

எனினும் சில நபர்கள் தவறு செய்திருந்தால் அவர்களை நான் காப்பாற்றப் போவதில்லை. இராணுவத்தினருக்காக பேசுவேன். சகல சட்டங்களையும் மதித்து மனித உரிமைகளை பாதுகாத்து போரிடு மாறு நான் இராணுவத்தினருக்கு உத்தரவிட்டிருந்தேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 டிசம்பர் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.